

அம்மா அறிவாள்


க்ளாக்ஸோ

குழந்தைகளை
புஷ்டியாக
வளர்க்கும்



தாய்ப்பாலற்றுப் போனாலோ — அல்லது தாய்ப்பாலுக்கு மாற்றாகவோ — பிரசித்தி வாய்ந்த குழந்தை ஆகாரமான க்ளாக்ஸோ சிபார்சு செய்யப்படுகிறது. கட்டியாக உறைந்திருக்கும் பால்தான் க்ளாக்ஸோ. குழந்தையால் சுலபமாக ஜீரணிக்கக் கூடியது. குழந்தையின் வளர்ச்சிக்குத் தேவையான புஷ்டியும் ஆகாரமும் அடங்கியிருக்கிறது.

இந்தியா முழுவதுக்கும் பிரத்தியேக பிரதிநிதிகள் :
ஹெச். ஜே. பாஸ்டர் & கோ., லிட்., பம்பாய், கல்கத்தா, மதராஸ்



மசாலா தோசை சாப்பிட்டிருக்கிறீர்களா—
டால்டாவினுல் தயாரித்தது?

6 மணிநேரம் தண்ணீரில் ஊற வைத்து 1½ கரண்டி அரிசியும் ½ கரண்டி உளுத்தம்பருப்பும் வெவ்வேருக நன்ருக அரைத்துக்கொள்ளவும். இரண்டு மாவுகளையும் சேர்த்து ருசிக்குத்தகுந்தபடி உப்பைபோட்டு 12 மணி நேரம் வைத்திருக்கவும். பிறகு ஜலம் ஊற்றி 10 நிமிடங்கள் நன்ருய்கலந்து கமாருக கெட்டியாகவும் ஒரே மாதிரி இறுக்கமுள்ளதாயும் செய்து கொள்ளவும். சூடான தோசைக்கல்லில் டால்டாவைப்பூசி. ஒரு கரண்டி கலந்த மாவை ஊற்றி. கரண்டியின் பின்புறத்தால் வட்டமாக பரத்தவும். சிறிது டால்டாவை தோசையின் விளிம்பைசுற்றி விடவும். பக்குவமானதும், மறுபக்கம் திருப்பி வேகவைக்கவும். பிறகு மசாலா சேர்த்த உருளைக்கிழங்கு பொடியை மத்தியில்போட்டு தோசையை மடிக்கவும். தோசைகளை சூடாக சாப்பிடுங்கள் !

பச்சை உணவுகள் சமைத்த உணவுகளைவிட மேலானவையா ?

இலவசமான ஆலோசனைகளுக்கு இன்றே—அல்லது என்றுவேண்டுமானாலும்—எழுதுங்கள் !

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1




HVM. 73-23 TM



அழகிய கூந்தல்!

நம்ப முடியவில்லையே!

அழகிய கூந்தலே உங்களுடைய வசீகரத்தை அதிகப்படுத்த வல்லது. நறுமணம் உள்ள "ஜேம்ஸ் அம்லா ஹேர் ஆயில்" சிறந்ததை தலையில் வைத்துக் கொள்ளுங்கள். கூந்தல் எவ்வளவு மழமழப்பாகவும், பளபளப்பாகவும் ஆகிறது என்று பாருங்கள். பொடுகுகளை நீக்கி கூந்தலை வளரச் செய்கிறது.



ஜேம்ஸ்

அம்லா ஹேர் ஆயில்

ஜேம்ஸ் பெர்ப்யூமரி கம்பெனி

சென்னை.

JZ-9TM

கிரைப் ஸிரப்



கிரைப் ஸிரப் குழந்தைகளுக்கேற்ற சிறந்த பேதி மருந்து. வயிற்று கோளாறென்ற சந்தேகமிருந்தால் ஒரு டோஸ் கிரைப் ஸிரப் கொடுங்கள்.

ஒரு ITL தயாரிப்பு

அழுகை மாறி புன்னகை

தயாரிப்பவர்கள் :

மைசூர் இண்டஸ்ட்ரியல் அண்டு டெஸ்டிங் லாபரடெரி லிமிடெட்

மல்லேஸ்வரம், பெங்களூர்

விற்பனை ஏஜண்டுகள் :

மெஸர்ஸ். பெஸ்ட் அண்டு கம்பெனி லிமிடெட்

தபால் பெட்டி நெ. 63, மதராஸ்

15-8-1948-ல் முதல் சுதந்திர ஆண்டு விழாவை
சிறப்பாகக் கொண்டாடுங்கள்



பெரிய அளவில் சிறந்து விளங்கும் மகாத்மா காந்தியின் உருவப் படம்.

பட்டுத் துணியில், வெவ்வேறு அழகான கெட்டி கலர்களில், நவீன புகைப்பட முறையில், நூதனமாக அச்சடிக்கப்பட்டிருக்கிறது.

பிரார்த்தனை, பொதுக் கூட்டங்கள் பொதுஜன, தனிப்பட்டவர்கள் கட்டிடங்களுக்கும், தேசிய கொண்டாட்டங்கள், திருவிழாக்கள் வணக்கம் செலுத்துதல், இதர விசேஷ சந்தர்ப்பங்களுக்கும்

அளவு 45'' × 70''

விலை ஒன்றுக்கு ரூ. 27—8—0

பிரபல பட்டு தேசிய கொடிகள்

அளவு	நெ.	விலை	அளவு	நெ.	விலை
2½" × 1½"	A	ரூ. 0—0—9	3' × 2'	E	ரூ. 10—0—0
6" × 4"	B	ரூ. 0—4—0	6' × 4'	F	ரூ. 25—0—0
9' × 6"	C	ரூ. 0—8—0	9' × 6'	G	ரூ. 50—0—0
18" × 12"	D	ரூ. 1—8—0	12' × 8'	H	ரூ. 90—0—0

ரூ. 10-ம் அதற்கு மேற்பட்ட ஆர்டர்களே ஏற்றுக்கொள்ளப்படும். முழு பணத்துடன் வரும் ஆர்டர்களே முதலில் கவனிக்கப்பட்டு இந்தியாவில் எந்த இடத்துக்கும் தபால் செலவின்றி அனுப்பப்படும். வி. பி.யில் அனுப்புவதற்கு தபால் செலவு பிரத்யேகம்

சரக்குகளை விரைவில் பெற இன்றே உங்கள் ஆர்டரை அனுப்புங்கள்.

ஹிந்துஸ்தான் பேப்ரிக்ஸ்,

தபால் பெட்டி நெ. 5, குடியாத்தம்,

தென்னிந்தியா.

தந்தி : "HINDFABRIC" Gudiyatam.

கிளை : 246, பூந்தமல்லி ஹைரோடு, பெரியமேட்டு, சென்னை

கல்கி

பொருளடக்கம்

மலர் 7
இதழ் 51

ஜூலை 18

சர்வதாரி ௵
ஆடி 3

புத்தக தானம்

எட்டயபுரம் பாரதி ஞாபகார்த்த மண்டபத்தில் வருகிற செப்டம்பர் 11உ. பாரதி திருநாளில் புத்தகசாலை திறந்து வைக்க ஏற்பாடாகி வருகிறது. புத்தகசாலையை அலங்கரிப்பதற்குப் புத்தகங்கள் தேவை. முக்கியமாக பாரதியார் கவிதைகள், வசனங்கள், பழைய பதிப்புகள், புதிய பதிப்புக்கள் எல்லாம் தேவை. பக்கங்கள் சேதப்படாத பழைய புத்தகங்களாயிருந்து அனுப்பினாலும் மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டு நன்றி செலுத்துவோம்.

தமிழ் மொழியில் உள்ள பழைய இலக்கியங்களும் புதிய இலக்கியங்களும் தேவை. சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, திருக்குறள், கம்பராமாயணம் முதலிய நூல்கள் — நல்ல பதிப்புக்கள் — வேண்டும். ஸ்ரீ வேதநாயகம் பிள்ளை அவர்களின் "பிரதாப முதலியார் சரித்திரம்" முதல் இந்தக் காலத்துத் தமிழ் வசன நூல்கள் எல்லாம் தேவை.

ஆங்கிலப் புத்தகங்களும் தேவைதான். பலவித என்ஸைக்ளோப்பீடியாக்கள், ஷேக்ஸ்பியர் நாடகங்கள், டிக்கன்ஸ் — ஸ்காட் நாவல்கள், பெர்னார்ட் ஷா — எச். ஜி. வெல்ஸ் நூல்கள், — இவையெல்லாம் வேண்டும். படங்கள் உள்ள உயர்ந்த அலங்காரப் பதிப்புக்களாயிருந்தால் மிக்க விசேஷம். வீட்டில் வெறுமனே குவிந்து கிடக்கும் புத்தகங்களைப் பாரதி மண்டபத்துக்கு அனுப்பிவையுங்கள். பலரும் படித்துப் பயன்பெறுவார்கள்.

புத்தக தானம் செய்வோர் விரும்பினால் ஒவ்வொரு புத்தகத்தின் முதற் பக்கத்திலும் இன்னாருடைய அன்பளிப்பு என்று குறிப்பிடப்படும்.

பாரதி மண்டபப் புத்தகாலயத்துக்குத் தங்களுடைய புத்தக நன்கொடையை ஆசிரியர், கல்கி, கீழ்ப்பாக்கம், சென்னை என்ற விலாசத்துக்குத் தபாலிலோ ரயில் பார்ஸலிலோ அனுப்பி வைக்கக் கோருகிறோம்.

எட்டயபுரம் ஞாபகார்த்த மண்டப டிரஸ்டிகள்.

கல்கி

மலர் 7 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார். | இதழ் 51

என்ன சேதி?

அணையாத ஜோதி

அண்ணாமலையின் அணையாத தேசிய ஜோதியாகச் சென்ற முப்பது வருஷமாக விளங்கி வருகிறவர் தேச பக்தர் அண்ணாமலைப் பிள்ளை அவர்கள். 1921 முதல் 1942 வரை எத்தனையோ தடவை தாய் நாட்டுக்காகச் சிறை வாசம் செய்தவர். இடைவிடாமல் சுதந்திரப் போராட்டத்தில் முன்னணியில் நின்று வந்தவர். நாளது 1948-ம் ஆண்டில் ஸ்ரீ அண்ணாமலைப் பிள்ளை அவர்களுக்கு அறுபது வயது பூர்த்தியாகிற தென்பதை அவருடைய நண்பர்கள் கண்டு பிடித்துச் சஷ்டியப்த பூர்த்தி விழா கொண்டாட ஏற்பாடு செய்தார்கள். ஜூலை 10உ திருவண்ணாமலையில் சிறப்பாகத் திருவிழா நடை பெற்றது. தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ காமராஜ் நாடார் முதலியோர் சென்றிருந்து நடத்தி வைத்தார்கள். ராஜாஜி முதலியவர்கள் வாழ்த்துச் செய்திகளை அனுப்பியிருந்தார்கள். ஸ்ரீ அண்ணாமலைப் பிள்ளையின் அறுபதாம் ஆண்டு நிறைவைத் திருவண்ணாமலையில் கொண்டாடியதுடன் அவருடைய அன்பர் குழாம் திருப்தியடைய வில்லை. வரும் ஆகஸ்டு மாதத்தில் சென்னை நகரிலும் அந்த விழாவைக் கொண்டாடத் தீர்மானித்திருக்கிறார்கள். அச்சமயத்தில் அந்தத் தேச பக்தத் தியாகிக்கு ஒரு பண முடிப்பு அளிக்கவும் எண்ணியிருக்கிறார்கள். பண முடிப்பு எவ்வளவு பெரிதாயிருக்கும், எவ்வளவு கனமாயிருக்கும் என்பது தமிழ் மக்களின் கொடை உள்ளத்தைப் பொறுத்த விஷயம். தேச பக்தியையும் தியாகத்தையும் உறுதியையும் ஒழுக்கத்தையும் சலியாத பொது ஜனத் தொண்டையும் பாராட்டுவோர் அனைவரும் தேச பக்தர் ஸ்ரீ அண்ணாமலைப் பிள்ளை நிதிக்குத் தாராளமாக நன்கொடையளித்து உதவ வேண்டும்.



ஸ்ரீ தா. அண்ணாமலைப் பிள்ளை

ஸ்ரீமதி ராஜம் பாரதி

தேசத் தொண்டிலும் சமூக சேவையிலும் சலியாத உற்சாகத்துடன் நெடுங்காலமாக ஈடுபட்டிருக்கும் தமிழ் நாட்டுப் பெண்மணிகளில் ஒருவர் ஸ்ரீமதி ராஜம் பாரதி. செய்யும் சேவைக்குக் கை மேல் பலீக வேண்டும் என்று கோரும் தேச ஊழியர் வர்க்கத்தை அவர் சேர்ந்தவர் அல்ல. மந்திரியாக வேண்டும் என்றோ மந்திரிக்கு மந்திரியாக வேண்டும் என்றோ ஆசைப்படுகிறவர் அல்ல. ஸ்திரீ பிரசங்கிகளுக்குள்ளே அதிகப் பிரசங்கியாகாமல் அடக்கத்துடனே பணியாற்றி வருகிறவர். அவருடைய சலியா மன உறுதிக்குச் சிறந்த அத்தாட்சி ராஜாஜி விஷயத்தில் அவர் கொண்டிருந்த பக்தியாகும். ராஜாஜி தமிழ் நாட்டுத் தலைவராகவும் பிரதம மந்திரியாகவும் மேன்மையுற்றிருந்த போதும் ராஜாஜியிடம் அவர் பக்தி செலுத்தினார். அதற்கு நேர் மாறான நிலையை ராஜாஜி அடைந்திருந்த நாளிலும் 'அற்ற குளத்தில் அறு நீர்ப் பறவை போல்' அவர் விட்டுப் போய் விடவில்லை. எந்த நாளிலும் ராஜாஜியின் வாக்கே வேத வாக்கு என்று கொண்டு நடந்து

நிகழ்ச்சிச் சித்திரம்




அதே சமயம்
ரஸாக்கியர்கள் பத்து
மைல் பின் வாங்கி
மகத்தான 'வெற்றி'
பெற்றுள்ளனர்!
எல்லை
பத்துமைல் பின்னேற்றம்
பாகிஸ்தான் சர்க்கார் கான் அப்துல் கபார்கானை
ஒவ்வொரு சிறையாக மாற்றி வருகின்றனர்!
பெருங்கலகம்
கராச்சியிலிருந்து
டில்லிக்கு வந்துள்ள ஐ. நா. சபை
காஷ்மீர் கமிஷனின் மூளை
கராச்சி பிரசாரத்தினால்
கலங்காமல்
இருந்திருக்-
-குமா?
ஐ. நா. சபை
காஷ்மீர் கமிஷன்
இந்தியா
SHASTRY
பெர்லின்–பாலஸ்தீன் சச்சரவுகள்
வலுத்தால் இங்கே இட
நெருக்கடி இன்னும்
அதிகமாகி விடுமே?
என்னத்தைச்
செய்வது?

வந்தவர். அவருடைய கணவர் ஸ்ரீ ரகுராஜ பாரதி அவர்களும் அத்தகைய சலியா உறுதி படைத்த கனவான் ஆவர்.

சமீபத்தில் சென்னை நகர சபையில் 'ஆல்டர்மன்' பதவிக்கு ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டி வந்தபோது சென்னை நகர சபைக் காங்கிரஸ் கட்சியினர் ஸ்ரீமதி ராஜம் பாரதியை அப்பதவிக்கு நியமிக்கத் தீர்மானித்ததைப் பெரிதும் பாராட்டுகிறோம். 'ஆறு ஆல்டர்மன்' பதவிகளில் ஒன்று தான் மாதருக்கு என்று ஒதுக்கி வைக்கப் பட்டது. மற்ற ஐந்து பதவிகளுக்கும் சாதாரணமாய் ஆண் மக்களைத் தேர்ந்தெடுப்பது வழக்கம். எனினும் ஒரு பெண்மணிக்கு இன்னொரு அதிகப்படி ஆல்டர்மன் பதவியை யளிக்க நகர சபைக் காங்கிரஸ் கட்சியார் தீர்மானித்தது குறித்து மகிழ்ச்சி யடைகிறோம். ஸ்ரீமதி ராஜம் பாரதி அவர்கள் தம்முடைய ஆற்றலுக்கு ஏற்ற முறையில் தேசத் தொண்டு செய்வதற்கு இன்னும் பல சந்தர்ப்பங்கள் ஏற்படும் என்று எதிர்பார்க்கிறோம்.



ஸ்ரீமதி ராஜம் பாரதி

புதுமைப் பித்தன்

"புதுமைப் பித்தன்" என்ற புனை பெயர் கொண்ட ஸ்ரீ சொ. விருத்தாசலம் தமது 42-வது வயதில் அகால மரண மடைந்த செய்தி அறிந்து மிக்க துயர் உறுகிறோம். ஒரு மாமாங்க காலத்திற்குள் நூற்றுக் கணக்கான சிறு கதைகளும் கட்டுரைகளும் புதுமைப் பித்தன் எழுதியிருக்கிறார். ஏழை மக்களின் சுகங்களையும் கஷ்டங்களையும் நன்கு அறிந்து உணர்ந்த அநுதாபத்துடன் அபூர்வமான கதைகள் எழுதியிருக்கிறார். மறுமலர்ச்சி எழுத்தாளர் குழுவில் ஸ்ரீ சொ. விருத்தாசலம் இணையில்லாதவர் என்று கருதுவோர் பலர் உண்டு. இத்தகைய சிறந்த எழுத்தாளர் எழுத்துத் தொழிலில் சௌகரியமாக வாழ்க்கை நடத்த முடியவில்லையென்று சமீபத்தில் சினிமாவுக்குக் கதையும் சம்பாஷணையும் எழுதும் துறையில் இறங்கினார். இதுவே தமிழ் நாட்டிற்கு கஷ்டம், தமிழ் வளர்ச்சிக்கு கஷ்டம் என்று சொல்ல வேண்டும். சொ. வி. இப்போது அகால மரணம் அடைந்தது தமிழ் நாட்டின் பெருந் துரதிருஷ்டமாகும். புதுமைப் பித்தன் அவர்களின் குடும்பத்தாருக்கும் அவருடைய நண்பர் பெருங் குழுவுக்கும் நம்முடைய மனமார்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அறிவிப்பு

ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர் பகுதிகளுக்கு ஸ்ரீ P. திருவேங்கடம் (ஜவஹர் சுதேசி ஸ்டோர், ஸ்ரீவைகுண்டம்) போகல் இருந்த கல்கி விற்பனை ஏஜன்ஸியை சென்ற 31-5-48 தேதியோடு ரத்து செய்துவிட்டோம். மேற்கண்ட இடங்களுக்குக் கீழ்க்கண்டவர்களை ஏஜண்டுகளாக நியமித்திருக்கிறோம்.

ஸ்ரீவைகுண்டம்: ஸ்ரீ H. S. சிவசங்கரன் பிள்ளை, நியூஸ் ஏஜண்ட்.
ஆழ்வார்திருநகரி & குரும்பூர்: ஸ்ரீ N. திருமலை, நியூஸ் ஏஜண்ட், தென்திருப்பேரை
நாஸரத்: ஸ்ரீ M. D. மோசஸ், நியூஸ் ஏஜண்ட்.
ஆறுமுகநேரி: ஸ்ரீ S. சோமசுந்தரம் பிள்ளை, நியூஸ் ஏஜண்ட்.
திருச்செந்தூர்: ஸ்ரீ S. சுகிவாசன், நியூஸ் ஏஜண்ட்.
உடன்குடி: ஜனாப் M. O. ஜெயினுலாப்தீன், நியூஸ் ஏஜண்ட், மெயின் ரோடு.
குலசேகரப்பட்டினம்: ஜனாப் A. சாகுல் ஹமீத், நியூஸ் ஏஜண்ட்.

மேலே குறிப்பிட்டுள்ள ஏஜண்டுகளிடம்தான் அந்தந்த இடத்திலுள்ள கல்கி நேயர்கள் தயவு செய்து இனி தங்கள் சந்தாவைச் செலுத்தி ரசீதுகளைப் பெற்றுக்கொள்ளக் கோருகிறோம். மற்றவர்களிடம் சந்தா செலுத்தினால் அது செல்லாது.

சதாசிவம், மானேஜர், 'கல்கி'

அந்த ஊரில் நடந்ததென்ன?

நடு வழியில் இருட்டி விட்டதால் பிரயாணி அருகேயிருந்த தெருவிலுள்ள ஒரு வீட்டுத் திண்ணையில் போய் உட்கார்ந்தார். வீட்டுக்காரர் வெளியே வரவே, பிரயாணி தம்முடைய நிலைமையைத் தெரிவித்து இரவு அங்கேயே தங்க அனுமதிக்க வேண்டும் என்று கோரியதுடன், போஜனத்துக்கும் அஸ்திவாரம் போடத் தொடங்கினார்.

ரேஷன் காலமானதால் வீட்டுக்காரரின் நிலைமை தர்ம சங்கடமாகியது. அவர் தயங்கினார்.

அவரது தயக்கத்தைக் கண்ட பிரயாணி, "போட்டால் போடுங்கள். இல்லாவிட்டால் அடுத்த ஊரில் செய்தது போல் இங்கும் செய்து விடுகிறேன்" என்று ஒரு போடு போட்டு வைத்தார்.

அதைக் கேட்டதும், வீட்டுக்காரருக்குப் பீதி ஏற்பட்டு விட்டது. "இந்தப் பாழும் மனுஷன் அடுத்த ஊரில் என்ன செய்து தொலைத்தாரோ?" என்று எண்ணியவராய் மேற்கொண்டு எவ்விதப் பேச்சுமின்றி அவருக்குச் சாப்பாடு செய்து வைத்தார்.

போஜனம் முடிந்த பின் இருவரும் பேசிக் கொண்டிருந்தனர். பிரயாணி அடுத்த ஊரில் என்ன செய்தார் என்பதைக் கேட்க வேண்டும் என்ற ஆர்வத்தை வீட்டுக்காரரால் அடக்கிக் கொள்ள முடியவில்லை.

"அடுத்த ஊரில் என்ன செய்தீர்கள்?" என்று அவர் கேட்டதற்குப் பிரயாணி அளித்த பதில் இதுதான்:

"சாப்பாடு போட முடியாது என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்கள். அவ்வளவுதான்; அங்கவஸ்திரத்தை விரித்து அதில் படுத்துத் தூங்கிவிட்டேன். பிறகு காலையில் எழுந்து பேசாமல் போய்விட்டேன்" என்றார் பிரயாணி.

காஷ்மீர் பிரச்னையை நேரில் பரிசீலனை செய்வதற்காக ஐக்கிய நாடுகள் சபையால் நியமிக்கப் பட்டுள்ள கமிஷன் இந்தியாவுக்கு வந்திருக்கிறது அல்லவா?

மேற்படி கமிஷன் அடுத்த ஊரில் செய்ததுபோல் இங்கும் செய்யப் போகிறதா? அல்லது உண்மை நிலைமையை ஊடுருவி அறிந்து, ஐக்கிய நாடுகள் சபைக்கு உருவான யோசனைகளைக் கூறி அதன் மானத்தைக் காப்பாற்றப் போகிறதா?

• • •

வல்லரசுகளால் தங்களுக்குள் ஏற்படும் தகராறுகளையே தீர்த்துக் கொள்ள முடியவில்லை. அவைகளுக்குள்ள தகராறுகள் இன்று பெர்லின் நகரின் பகுதிகளிலுள்ள கால் கோடி ஜனங்களைக் கதறி யழும்படி செய்திருக்கின்றன.

மேற்படி நெருக்கடியைத் தீர்க்க வல்லரசுகள் செய்துவரும் காரியங்கள் மற்றொரு மகா யுத்தத்தில் கொண்டு வந்து விடுமோ என்று உலகம் கலங்குகிறது.

அந்த நெருக்கடியைத் தீர்க்க வல்லரசுகள் தங்களுடைய சொந்த யோசனைகளை விட்டு விட்டு, பெர்லின் நகரத்தின் உதவி மேயரான பிரபல ஜெர்மானியர் கூறியுள்ள யோசனையைப் பின்பற்றுமாயின் பெர்லின் நகரமும் ஜெர்மனியும் காப்பாற்றப் படும். உலகமும் மற்றொரு மகா யுத்தத்திலிருந்து தற்காலிகமாகவாவது காப்பாற்றப்படும்.

"பெர்லின் நகரிலிருந்து நான்கு வல்லரசுகளும் (ருஷ்யா, பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ்) வெளியேறி விடட்டும். வல்லரசுகளின் கொள்கையே இன்று பெர்லினை இத்தகைய வெட்கக் கேடான நிலைமையில் கொண்டு வந்து விட்டிருக்கிறது" என்று பெர்லின் நகர உதவி மேயர் வருந்துகிறார்.

மேற்படி யோசனை சுலபமாக நிறைவேறக் கூடியதுதான். எனினும் ஆதிக்கப் போட்டா போட்டியில் மூழ்கிக் கிடக்கும் வல்லரசுகள் அதற்கு இணங்கி வருமா?

நேரடியான, நேர்மையான முறையைக் கைக்கொண்டு காலதாமதமின்றி சுலபமாகத் தீர்க்க வேண்டிய பிரச்னைகளை வல்லரசுகள் மாதக் கணக்கில் குழப்பி வருவதற்கு எத்தனையோ உதாரணங்கள் கூறலாம்.

• • •

டச்சு - இந்தோனேஷ்யா நெருக்கடியைத் தீர்ப்பதற்காக ஐ. நா. சபைக்

கமிஷன் ஒன்று இந்தோனேஷ்யாவுக்குச் சென்று பல மாதங்கள் ஆகி விட்டன.

ஆனால், நெருக்கடி முற்றி வருகிறதேயன்றி தீருவதற்கான வழி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. "மீண்டும் டச்சு - இந்தோனேஷ்யா முட்டுக்கட்டை" என்ற செய்திதான் பத்திரிகைகளில் மீண்டும் மீண்டும் வெளியாகி வருகிறது!

அங்கு சென்றுள்ள ஐ. நா. சபைக் கமிஷன் இன்னும் எத்தனை மாதங்கள் முயற்சி செய்தாலும் டச்சு - இந்தோனேஷ்யா பிரச்னை தீருமென்று தோன்றவில்லை.

ஏனெனில் டச்சு ஏகாதிபத்திய ஆசைக்குப் பங்கம் நேராமல் இந்தோனேஷ்யர்களின் குடியரசுக் கோரிக்கையை எவ்வாறு நிறைவேற்ற முடியும்? இந்தோனேஷ்யர்களின் கோரிக்கை நிறைவேற வேண்டுமாயின் டச்சு ஏகாதிபத்திய ஆட்சி முறை ஒழிய வேண்டும்.

ஆனால் மேற்படி கமிஷன் என்ன செய்து வருகிறது, தெரியுமா? ஒரு புறம் டச்சு ஏகாதிபத்தியத்துக்கும் மற்றொரு புறம் இந்தோனேஷ்யாவுக்கும் நல்ல பிள்ளையாக நடந்து கொள்ள முயற்சித்து வருகிறது.

அந்தப் பிரச்னை தீராததற்குக் காரணம் மேற்படி இரண்டுங்கெட்ட நிலைதான்.

ஒவ்வொரு நாட்டுக்கும் அதனதன் அரசியலை நிர்ணயித்துக் கொள்ளப் பூரண உரிமை உண்டென்பது ஐ. நா. சபையின் முக்கிய கொள்கை. அப்படியிருக்க இந்தோனேஷ்யாவின் அரசியலை நிர்ணயிக்கும் அதிகாரத்தை டச்சு சர்க்கார் ஏன் விடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும்? டச்சு சர்க்காரிடமிருந்து அந்த அதிகாரத்தைப் பறிமுதல் செய்தாலன்றி, ஐ. நா. சபைக் கமிஷனின் முயற்சி இன்னும் எத்தனை மாதங்களாயினும் பலனைக் கொடுக்க நேறுவதில்லை.

* * *

பாலஸ்தீனப் பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்காக ஐ. நா. சபை அனுப்பியிருந்த கமிஷனும் கையை விரித்துவிட்டது!

மேற்படி சபை நியமித்த பஞ்சாயத்தாரின் வேண்டுகோளுக்கு இணங்கி அராபியர்களும் யூதர்களும் ஒரு மாத காலத்துக்கு ஆயுதங்களைக் கீழே வைத்திருந்தார்கள். ஆனால் கடைசியில் அவர் தயாரித்த திட்டத்தை அங்கீகரிக்க இரு சாராரும் மறுத்து விட்டார்கள். "இன்னும் கொஞ்ச காலத்துக்கு ஆயுதங்களை எடுக்காமல் இருங்கள். சமரசம் ஏற்பட மீண்டும் முயற்சிக்கிறேன்" என்றார் பஞ்சாயத்தார்.

ஆனால், அராபியர்களோ அல்லது யூதர்களோ அதற்குத் தயாராக இல்லை. பஞ்சாயத்தார் பாலஸ்தீனப் பிரச்னையைக் கை கழுவி விட்டு ஊருக்குச் சென்று விட்டார். எனவே மீண்டும் இரு சாராரும் ஆயுதங்களை எடுத்து விட்டார்கள்.

பாலஸ்தீன யுத்தம் மறுபடியும் உக்ரமாகத் தொடங்கி விட்டது. பாலஸ்தீனத்தில் பீரங்கிகள் முழங்கிக் கொண்டிருந்தபோது வந்த ஐ. நா. சபைக் கமிஷன் புறப்பட்டுச் செல்லும் போதும் அங்கு பீரங்கிகள் முழங்க ஆரம்பித்து விட்டன!

அவ்வாறாக, பாலஸ்தீனப் பிரச்னையையொட்டி ஐ. நா. சபையில் மாதக் கணக்கில் நடந்த விவாதம், பிறகு அச் சபை அனுப்பிய பஞ்சாயத்தாரின் முயற்சி எல்லாம் இறுதியில் விழலுக்கு இறைத்த நீராகி விட்டன.

* * *

இப்போது இந்தியாவுக்கு வந்துள்ள கமிஷனும் அந்த ஊரில் செய்ததுபோல் செய்து விடுமோ என்றே நினைக்க வேண்டியிருக்கிறது!

காஷ்மீர விஷயம் உலக முக்கியத்துவம் வாய்ந்தது என்றும், அந்தப் பிரச்னையைத் தீர்ப்பதில் காலதாமதம் செய்வது பலருடைய உயிருக்கு உலை வைப்பதாகும் என்றும் கமிஷனின் தலைவர் கூறினார்.

இந்த உண்மை திடீரென்று அவரால் கண்டு பிடிக்கப்பட்டு விடவில்லை. ஆதியிலே இந்திய சர்க்கார் அவ்விதமேதான் சொன்னார்கள்.

காஷ்மீர் பிரச்னை உலக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதற்காகத்தான் அதை இந்திய சர்க்கார் உலக மகா சபைக்குக் கொண்டு போனார்கள். ஜுனாகாத் விஷயத்தைப் பற்றியோ, ஹைதராபாத் விஷயத்தைப் பற்றியோ மேற்படி சபையிடம் முறையிட்டுக் கொள்ளவில்லை.

காஷ்மீர் பிரச்னையைத் தீர்ப்பதில் சிறிதளவும் காலதாமதம் கூடாது என்றும், காலதாமதம் செய்வது எண்ணிக்கையற்ற ஜனங்களின் உயிருக்கும் உடைமைக்கும் ஆபத்தை விளைவிப்ப

தாகும் என்றும் இந்தியப் பிரதிநிதி முதல் கூட்டத்திலேயே முறையிட்டார்.

ஆனால் ஐ.நா. சபை செய்ததென்ன? காலதாமதமே கூடாதென்ற விஷயத்தில் நாலு மாதம் இழுக்கடித்தது!

* * *

இவ்வோரிடத்திலும் சர்வ தேச சபைக் கமிஷன் எதுவும் சாதிக்க முடியாமல் கையை விரித்து விட்டுப் போகும்படி நேருவதற்குக் காரணம் என்ன என்பதைக் கவனிக்கவேண்டும்.

வல்லரசுகள் ஆதிக்கம் செலுத்தும் அந்தச் சபைக்கு எந்தப் பிரச்னையையும் பாரபட்சமின்றி நோக்கும் நேர்மையில்லை. உலக நாடுகளிடையே நீதியை நிலை நிறுத்தும் சக்தியும் இல்லை.

நேர்மையாயிருந்திருக்குமாயின் இந்தோனேஷ்யப் போரோ, பாலஸ்தீனப் படுகளமோ அல்லது காஷ்மீர யுத்தமோ இத்தனை மாதங்களாக நீடித்துக்கொண்டு போகுமா?

இப்போது இந்தியாவுக்கு வந்துள்ள ஐ. நா. சபைக் கமிஷனின் வேலையைப் பாகிஸ்தான் சர்க்கார் ஒரு விதத்தில் சுலபமாக இருக்கும்படி செய்திருக்கிறார்கள்.

கொள்ளைக்காரர்கள் காஷ்மீரத்தைச் சூறையாடி வருவதாகவும், அத்தகைய கொடியவர்களுக்குப் பாகிஸ்தான் சர்க்கார் கொலைக் கருவிகள் கொடுத்தும் இடவசதி அளித்தும் உதவி வருகிறார்கள் என்றும் இந்தியா மேற்படி சபையில் முறையிட்டுக் கொண்டது.

ஆனால் இப்போதோ வெளியில், பாகிஸ்தான் துருப்புகளே ஒளிவு மறைவு எதுவுமின்றிக் காஷ்மீரப் போர் முனையில் யுத்தம் செய்து வருகின்றன என்பது நிச்சயமாகி விட்டது.

காஷ்மீரப் போர் முனையில் பாகிஸ்தான் துருப்புகள் நேரடியாக ஈடுபட்டிருப்பதற்குச் சில முக்கிய காரணங்கள் உண்டு.

அங்கு இந்தியப் போர் வீரர்களின் தீரத்தினாலும் உறுதியினாலும் மலைஜாதியாரின் எதிர்ப்பு மழுங்கி விட்டது.

போதாக் குறைக்குப் பாகிஸ்தான் சர்க்கார் பட்டாணியர் மீது அடக்குமுறைப் பிரயோகம் செய்ய முற்பட்டிருப்பதுடன், மலைஜாதியார் மீதும் பாகிஸ்தான் விமானங்கள் வெடிகுண்டுகளை வீசி வருவதால், மலைஜாதியார் பாகிஸ்தானின் உண்மை ரூபத்தை உணர ஆரம்பித்திருக்கிறார்கள். எனவே இனி இஸ்லாத்தின் பெயரால் பாகிஸ்தான் மலைஜாதியாரிடையே மத வெறியைத் தூண்டிவிட முடியாது.


நைஜாமின் நாடி தளர்ந்து விடாமல் இருப்பதற்காகவும் பாகிஸ்தான் துருப்புகள் காஷ்மீரப் போரில் ஈடுபட்டிருக்கலாம்.

அது எப்படியாயினும், பாகிஸ்தான் துருப்புகள் இப்போது காஷ்மீர் யுத்தத்தில் ஈடுபட்டிருப்பது ஐக்கிய நாடுகள் சபையின் அடிப்படைக் கொள்கைக்கே முற்றிலும் முரணாகும்.

எனவே எத்தகைய சமரச முயற்சியும் ஆரம்பமாகுமுன், எத்தகைய திட்டமும் உருவாகு முன் காஷ்மீரப் போர் முனையிலிருந்து பாகிஸ்தான் துருப்புகளும் மலைஜாதியினரும் வாபஸாக வேண்டும்.

அவ்விதம் வாபஸ் ஆகும்படி கமிஷன் முயற்சி செய்ய வேண்டும். அந்த முயற்சியில் அது வெற்றி பெற்றால்தான், காஷ்மீரத்தில் சர்வஜன வோட்டு எடுப்பது போன்ற மற்ற முறைகளையொட்டியும் கமிஷன் வெற்றி பெறுவது சாத்தியமாகும்.

லக்ஷ்மி - ராமசுப்ரமண்யம்



சங்கீத வித்வான் மாயவரம் கிருஷ்ணய்யர் குமாரத்தி சௌபாக்கியவதி லக்ஷ்மிக்கும், தளபதி சமுத்திரம் ஸ்ரீ ஆ. விஸ்வநாத ஐயரின் குமாரன் சிரஞ்சீவி ராமசுப்ரமண்யத்துக்கும் சென்ற 1—7—'48 வியாழக்கிழமை யன்று மயிலாப்பூரில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. தம்பதிகளுக்கு ஏராளமான பரிசுகளும் வாழ்த்துச் செய்திகளும் வந்து குவிந்தன.

வாழ்க, லக்ஷ்மி—ராமசுப்ரமண்யம்!

முதல் எழுத்தாளர்

திருச்சிராப்பள்ளி பெரிய கடைத் தெருவில் ஒரு கட்டிடத்தின் மச்சில் இலவச வாசகசாலை ஒன்று இருந்தது. (இப்போது இருக்கிறதா என்று எனக்குத் தெரியாது.) நாலு பீரோக்கள் நிறையப் புத்தகங்கள் இருந்தன. பெரும்பாலும் ஆங்கிலப் புத்தகங்கள் தான். அவற்றில் தேசிய இயக்கம் சம்பந்தமான புத்தகங்கள் அதிகம் இருந்தன.

அறையின் நடுவில் நீளமான மேஜை ஒன்று போட்டிருந்தது. இரு புறத்திலும் சில கையில்லாத நாற்காலிகள் கிடந்தன. அவற்றில் ஒன்றில் உட்கார்ந்து "லோகமான்ய திலகர் வழக்கு" என்ற புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தேன்.

இன்னும் ஐந்தாறு பேர் அச்சமயம் அந்த இலவச வாசகசாலையில் இருந்தார்கள். மேஜையின் அருகில் கிடந்த நாற்காலிகளில் உட்கார்ந்து அவர்களில் சிலர் பத்திரிகையும் சிலர் புத்தகமும் படித்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு மனிதர் அப்போது மச்சுப்படி ஏறி மேலே வந்தார். வருகையில் அவரை ஒருவரும் கவனிக்கவில்லை. வந்ததும் நாற்காலியில் உட்காருவதற்குப் பதிலாக நடுவில் போட்டிருந்த நீள மேஜையின் முனையின் மேல் உட்கார்ந்தார். உடனே எல்லாரும் அவரைக் கவனித்தார்கள். நானும் பார்த்தேன். அறிவும் ஆற்றலும் ஆத்திரமும் தன்னம்பிக்கையும் அவருடைய முகத்தில் சுடர்விட்டுப் பிரகாசித்தன. பொதுவாக நல்ல அறிவாளி என்றும் ஆனால் ஏதோ கோபமாயிருக்கிறார் என்றும் தோன்றியது. கோபத்துக்கு அத்தாட்சி உடனே கிட்டியது.

வாசகசாலையின் மானேஜர் ஒரு சாதுவான அப்பாவி மனிதர். அவர் புது மனிதரின் அருகில் வந்து, "ஸார்! மேஜை மேல் உட்காரக்கூடாது. இறங்கி, நாற்காலியில் உட்காருங்கள்!" என்றார்.

இப்படிச் சொன்னவரை ஒரு தடவை பார்த்து விட்டுப் புதிதாக வந்தவர் வேறு பக்கம் நோக்கினார். பதில் சொல்லவும் இல்லை; கீழே இறங்கவும் இல்லை.

வாசகசாலை மானேஜர் மறுபடியும் "என்ன, ஸார்! நான் சொல்கிறது காது கேட்கவில்லையா?" என்றார்.

உடனே கிளம்பிற்று சொற் பிரவாகம். "காது கேட்கிறது ஐயா! காது கேட்கிறது. என்னைக் கீழே இறங்கத்தானே சொல்கிறீர்? என்னை எப்படியாவது கீழே இறக்கிவிட வேண்டுமென்று பார்க்கிறீர்!! அவ்வளவுதானே? இதனால்தான், ஸ்வாமி, இந்தியா இப்படி அடிமைப் பட்டுக் கிடக்கிறது. ஒருவரை யொருவர் நாம் கீழே இறக்கி விடவே பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதற்கு எப்போது சமயம் கிடைக்கும் என்று பார்த்துக் கொண்டிருக்கிறோம். மேலே தூக்கிவிடுவதற்கு விருப்பம் இல்லை; விருப்பம் இருந்தாலும் சக்தி இல்லை. கீழே இறக்கி விடுவதென்றால் நீ முந்தி, நான் முந்தி! இறங்கமாட்டேன், ஸ்வாமி! இறங்க மாட்டேன். அதற்காக என்னைத் தலையை வெட்டித் தஞ்சாவூருக்கு அனுப்பி விடுவதாயிருந்தால் அனுப்பிக் கொள்ளும். உம்மால் ஆனதைப் பாரும்...!"

வாசகசாலை மானேஜர் குறுக்கிட்டு "என்ன, ஸார்! ரொம்ப ரொம்பப் பேசுகிறீர்களே!" என்றார்.

"ஆமாம், சுவாமி! ரொம்பத்தான் பேசுகிறேன். ஏன் பேசக் கூடாது? நான் பேசக்கூடாது என்று சொல்ல நீர் யார் என்று கேட்கிறேன்! இந்த தேசத்திலே பிறந்ததற்கு வெறுமனே பேசக்கூடவா சுதந்திரம் இல்லை! வெள்ளைக்காரன் தான் பேசக்கூடாது என்று வாய்ப்பூட்டு போடுகிறான்! நீர் வேறே பேசக்கூடாது என்கிறீர். அந்த அடக்குமுறை யெல்லாம் என்னிடம் பலியாது. நான் பேசத்தான் பேசுவேன். நீர் கேட்டால் கேளும்; இல்லாவிட்டால் காதில் பஞ்சை வைத்து அடைத்துக் கொள்ளும். என்னைப் பேசக்கூடாது என்று நீர் என்ன சொல்வது? அப்படித்தான் பேசுவேன். இந்தியாவிலே பிறந்தவனுக்குப் பேசக் கூடவா சுதந்திரம் இல்லை? ஊதுகிற சங்கை நான் ஊதிக் கொண்டுதான் இருப்பேன். பொழுது விடியாவிட்டால் அதற்கு நான் பொறுப்பில்லை!"

புயல் அடித்து இடி இடித்து மின்னல் மின்னி மழை பெய்து விட்டது போலிருந்தது. பாவம்! அந்த வாசகசாலை மானேஜர் வெலவெலத்துப் போனார்! சற்று நேரம் மௌனம் குடிகொண்டிருந்தது. மேஜைமீது பிடிவாதமாக உட்கார்ந்திருந்த அந்த மனிதர் பக்கத்

திலே நான் கையில் வைத்துக் கொண்டிருந்த புத்தகத்தைப் பார்த்தார்.

"ஓகோ! இந்தப் பிள்ளையாண்டான் திலகர் பிரசங்கம் படிக்கிறான், திலகர் பிரசங்கம்! எதற்காகப் படிக்கிறான் தெரியுமா? இங்கிலீஷை 'இம்ப்ரூவ்' செய்து கொள்வதற்காகப் படிக்கிறான். இந்தப் புத்தகமே தமிழிலே இருக்கட்டும்; படிக்கமாட்டான். தூத்துக்குடி சிதம்பரம் பிள்ளை பிரசங்கங்களை யாராவது புத்தகம் போட்டிருக்கிறார்களா? கிடையாது! போட்டிருந்தாலும் யாராவது படிப்பார்களா? தமிழ்ப் புத்தகம் என்றால் கையினாலேயே தொடமாட்டோம். இந்த வாசக சாலையிலே இவ்வளவு புத்தகம் இருக்கிறதே, நல்ல தமிழ்ப் புத்தகம் ஒன்றாவது இருக்கிறதா?—இல்லை! தமிழனைப் போலத் துப்புக் கெட்டவன் இந்த உலகத்திலேயே கிடையாது. தமிழன் வேறு எந்த பாஷை வேணுமானாலும் படிப்பான்; தமிழ் மட்டும் படிக்க மாட்டான். 'தமிழிலே என்ன ஸார், இருக்கிறது?' என்று வெட்கமில்லாமல் கேட்பான். நான் தமிழன் என்ற சுரணையே கிடையாது. இத்தனை பேர் நீங்கள் இங்கே உட்கார்ந்திருக்கிறீர்களே! என்னென்னமோ பிரமாதமாய்ப் படிக்கிறீர்களே! சுப்பிரமணிய பாரதி என்று யாராவது கேட்டிருக்கிறீர்களா? அவர் எங்கே இருக்கிறார், என்ன செய்கிறார் என்று யாருக்காவது தெரியுமோ?—என்ன சுவாமி, எல்லாரும் சும்மா உட்கார்ந்திருக்கிறீர்களே! பேசமாட்டேன் என்கிறீர்களே! வாயைத் திறக்க மாட்டேன் என்கிறீர்களே? பதில் சொல்ல மாட்டேன் என்கிறீர்களே!—சரிதான்! என் பேச்சு ஒருவர் காதிலும் ஏறவில்லை போலிருக்கிறது! பின்னே நான் எதற்காகத் தொண்டையைப் பறி கொடுக்க வேணும்? செவிடன் காதிலே சங்கு ஊதுகிறவன் ஊதட்டும்! என்னாலே முடியாது, சுவாமி; என்னாலே முடியாது! நான் யாராவது காது கேட்கிற மனுஷன் இருக்கிறானா என்று தேடிப்பார்க்கிறேன். மானேஜர் ஸார்! இதோ மேஜையிலிருந்து இறங்கி விட்டேன். உமக்குத் திருப்திதானே? மனது குளிர்ந்து விட்டதோ இல்லையோ? மேஜையிலிருந்து மட்டும் இறங்கவில்லை: இந்த மச்சிலேயிருந்தும் இறங்கி விடுகிறேன். உம்முடைய மேஜையை நன்றாய்த் துடைத்து வைத்துக் கொள்ளும்! மேஜையை நான் எடுத்துக் கொண்டு போய்விடவில்லை; நன்றாய்ப் பார்த்துக் கொள்ளும்!"



இவ்விதம் சொல்லிவிட்டு அந்த மனிதர் தட தட வென்று இறங்கிப் போனார். அவர் கூறியதையெல்லாம் மேலே நான் எழுத்துக்கு எழுத்து சரியாக எழுதியிருப்பதாகச் சொல்லவில்லை. முப்பது வருஷத்துக்கு முந்தைய கதை. பேச்சின் தோரணை மட்டும் உண்மை. வார்த்தைகளில் சில வ. ரா. வின் வார்த்தைகளாக இருக்கலாம்; சில என்னுடைய வார்த்தைகளாகவும் இருக்கலாம்.

ஆம்; வாசகசாலைக்கு வந்து விட்டுப் போனவர் பேராசிரியர் வ. ரா. அவர்கள் தான். அவர் போனவுடனே அங்கிருந்த மற்றவர்கள் பேசியதிலிருந்து அந்த விவரம் தெரிந்து கொண்டேன்.

"இவர் யார், அப்பா, இந்த மனுஷர்? பொல்லாத பேர்வழியா யிருக்கிறாரே?" என்றார் ஒருவர்.

"தெரியாதா? திருப்பயணம் வ. ராமசாமி ஐயங்கார். பாரதியாரின் பக்தர். கொஞ்ச நாள் புதுச்சேரியி லிருந்தார்."

"புதுச்சேரியிலிருந்து இப்போது வந்துவிட்டாரோ? எதற்காக வந்தார்?"

"அது எனக்குத் தெரியாது. ஸ்ரீரங்கம் கே. வி. ரங்கசாமி ஐயங்காரிடம் இவருக்குக் கொஞ்சம் பழக்கம் உண்டு. ஒருவேளை அவரைப் பார்க்க வந்திருப்பார்!"

அன்றைக்கு ஸ்ரீ வ. ரா. அவர்களைப் பற்றி நான் தெரிந்துகொண்டது அவ்வளவுதான். ஆனால் அதுவே அப்போதைக்குப் போதுமானதா யிருந்தது. என்றைக்கும் மறக்க முடியாதபடி வ. ரா. என் மனதில் பதிந்துவிட்டார்.

* * *

இந்த வருஷத்தில் ஸ்ரீ வ. ரா. அறுபதாவது பிராயத்தை அடைகிறார். இதை முன்னிட்டு ஒருவிழா நடத்த வேண்டுமென்று தீர்மானித்து அதற்குப் பூர்வாங்கக் கூட்டம் ஒன்று உட்லண்ட்ஸ் ஹோட்டலில் மேமாதத்தில் நடந்தது. அன்று பேசிய நண்பர்கள் எல்லாரும் வ. ரா. வைப் பாராட்டினார்கள்; அவருடைய இலக்கியத் தொண்டைப் பாராட்டினார்கள்; அவருடைய குணாதிசயங்களைப் பாராட்டினார்கள். மணிவிழாவைச் சிறப்பாக நடத்த வேண்டுமென்றும், அச்சமயத்தில் அவருக்குப் பண

முடிப்பு ஒன்று அளிக்க வேண்டும் என்றும் கூறினார்கள். ஒரு பிரபல ஆசிரியர், "இந்த வயது காலத்தில் வ. ரா. வைத் தரித்திரம் பிடிக்கும்படி விடலாமா? அன்னவஸ்திரத்துக்கு அவரைக் கஷ்டப்படும்படி விடலாமா? பாவம் அல்லவா?" என்று உணர்ச்சியுடன் பேசினார்.

கூட்டம் முடிந்த அரைமணி நேரத்துக்கெல்லாம் வ. ரா. அவர்களின் வீட்டுக்குப் போனேன். வ. ரா. உற்சாகமாக இருப்பார் என்று எண்ணினேன். அதற்குப் பதிலாக அவர் இரைச்சல் போட்டுக் கொண்டிருந்தது என் காதில் விழுந்தது. எனக்கு முன்னாலேயே ஒரு நண்பர் சென்று பூர்வாங்கக் கூட்டத்தில் நடந்த நிகழ்ச்சிகளைச் சாங்கோபாங்கமாக அவருக்கு அறிவித்து விட்டார். வ. ரா. வின் வறுமையைப் பற்றிக் குறிப்பிட்டது அவருக்குப் பிடிக்கவில்லை யாகையால் சத்தம் போட்டுக் கொண்டிருந்தார். என்னைக் கண்டதும், "ஏங்காணும்! நான் தரித்திரன் என்பதற்காகவே எனக்குப் பண முடிப்பு அளிக்கப் போகிறீர்களா? நான் ஒன்றும் தரித்திரன் இல்லை. இந்த உலகத்தின் செல்வம் எல்லாம் என்னுடையதாயிற்றே! என்னுடைய ஏழ்மைக்காகப் பண முடிப்புக் கொடுப்பதாயிருந்தால் என்னைவிட ஏழைகள் எவ்வளவோ பேர் இருக்கிறார்களே! அவர்களுக்குக் கொடுப்பதுதானே! எனக்கு எதற்காகக் கொடுக்க வேண்டும்? நான் எழுத்தாளன், தமிழ் வளர்ச்சிக்கு ஏதோ கொஞ்சம் தொண்டு செய்திருக்கிறேன் என்பதற்காகப் பண முடிப்புக் கொடுப்பதாயிருந்தால் கொடுங்கள். இல்லாவிட்டால் வேண்டவே வேண்டாம்!" என்று பேராசிரியர் சீறினார்.

முப்பது வருஷத்துக்கு முன்னால் நான் பார்த்த வ. ரா. வின் குணாதிசயம் இன்று வரை சிறிதும் மாறவில்லை என்பதை அறிந்து கொண்டேன். அவருடைய பேச்சுத் திறமை, தர்க்கத் திறமை, சுய மதிப்பு முதலிய அம்சங்கள் அப்படியேதான் இன்றும் இருக்கின்றன.

"தயவு செய்து நான் சொல்கிறதைச் சற்றுக் கேட்கவேண்டும். ஒரே விஷயத்தைப் பற்றி ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாகத்தான் பேசுவார்கள். இறைவனுடைய சிருஷ்டியில் ஒருவருடைய முகத்தைப் போல் இன்னொருவர் முகம் இருக்கிறதா? அதுபோல மனப்பான்மையும் மாறுபடும். ஆனால் எல்லாரும் தங்களிடமுள்ள மதிப்பினாலும் அபிமானத்தினாலும்தான் பேசுவார்கள். வருகிற செப்டம்பர் மீ 17உ வரைக்கும் யார் எப்படிப் பேசினாலும் தாங்கள் கோபித்துக் கொள்ளாமல் பொறுமையுடனிருக்க வேண்டும். ரொம்பவும் கேட்டுக்கொள்கிறேன்!" என்றேன்.

"ரொம்ப அழகாயிருக்கிறது உம்முடைய உபதேசம்! பெண்ணுக்குக் கலியாணம் ஆகவேண்டிய சமயத்தில் பெண்ணின் தாயார் தகப்பனாரைப் பார்த்து, 'இந்தக் கல்யாணம் நடந்து முடிகிற வரையில் உங்கள் சொரூபத்தைக் காட்டாதீர்கள். கோபத்தையெல்லாம் அடக்கி வைத்துக் கொண்டிருங்கள்' என்று உபதேசிப்பாள். அந்த மாதிரி இருக்கிறது நீர் சொல்வது. என்னால் அப்படியெல்லாம் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. எனக்காக யாரும் பஞ்சப் பாட்டுப் பாட வேண்டாம். ஹைதராபாத் நைஜாமின் ஆயிரங் கோடி ரூபாயும் என்னுடையதுதான் என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன். என்னை யார் தடுப்பது? எழுத்தாளனைக் கௌரவப்படுத்த வேணும் என்பதற்காக ஏதாவது செய்தால் செய்யுங்கள். தரித்திரம் என்கிற தரித்திரப் பேச்சு வேண்டாம்!" என்று பேராசிரியர் பொங்கினார்.

கொஞ்சம் அதிகப் பிரசங்கித்தனமாகவே வ. ரா. வுக்கு நான் யோசனை சொல்லத் துணிந்தேன். அவரை விட்டுப் போகும்போது "வ. ரா. வாழ்க! அவருடைய தன்மதிப்பு வாழ்க!!" என்று வாழ்த்திக் கொண்டே போனேன்.

• • •

மகா கவி பாரதியார்தான் ஆசிரியர் வ. ரா. அவர்களின் மாதா பிதா குரு தெய்வம். பாரதியாருடைய பெருமையை இந்தியாவும் உலகமும் அறியும்படி செய்வதே வ. ரா. வின் புருஷார்த்தம். தமிழ் மொழியிடம் அன்பு அவருடைய மூச்சுக் காற்று. சீர்திருத்த ஆவேசம் அவருடைய மனம், புத்தி, சித்தம். சுதந்திரப் பற்று அவருடைய உயிர். தன்மதிப்பு அவருடைய ஆத்மா. எழுத்தாளரின் மேன்மை, முக்கியமாக, தமிழ் எழுத்தாளரின் முன்னேற்றம், அவருடைய மதம். வெகு காலத்துக்கு முன்பே சாதிப் பற்றை ஒழித்தவர் வ. ரா. அவர்கள். எனினும், அவரை 'எழுத்தாளர் சாதி' என்று குறிப்பிட்டால் ஆட்சேபிக்க மாட்டார் என்று நினைக்கிறேன்.

ஸ்ரீ வ. ரா. அவர்களைத் தமிழ் நாட்டின் முதல் எழுத்தாளர் என்றும், தமிழ் எழுத்தாளரின் முதல்வர் என்றும், தமிழ் எழுத்தாளரின் நிரந்தரத் தலைவர் என்றும் சொல்வது மிகையாகாது.

வ. ரா. வுக்கு முன்னால் பலர் தமிழில் எழுதியிருக்கிறார்கள். ஸ்ரீ வேதநாயகம் பிள்ளை, ஸ்ரீ ராஜம் ஐயர், ஸ்ரீ மாதவய்யா முதலியவர்கள் வாழ்க்கையில் வேறு இலட்சியங்களைக் கொண்டவர்கள்; வேறு தொழில் பார்த்தவர்கள். ஏதோ ஒழிந்த வேளையில் பிரதாப முதலியார் சரித்திரம், கமலாம்பாள் சரித்திரம், பத்மாவதி சரித்திரம் ஆகிய சிறந்த புத்தகங்களை எழுதி விட்டார்கள்.

பாரதியார் தேசிய சுதந்திர வீரர்: புரட்சிக்காரர்; சமயப் பற்றுக் கொண்டவர்; மகா கவி. அவருடைய கவிதையும் வசனமும் வெவ்வேறு இலட்சியங்களுக்குக் கருவியாக ஏற்பட்டவை.

ஸ்ரீ வ.உ. சிதம்பரம் பிள்ளையும் வ.வே.சு. ஐயரும் தேசபக்தியே உருவானவர்கள்; தியாக மூர்த்திகள். அவர்களும் எழுதினார்கள். ஆனால் ஒழிந்த நேரத்தில் 'ஹாபி'யாகக் கருதி எழுதினார்கள். எழுத்தாளர் தொழிலைப் பற்றி அவர்கள் பிரமாதமாகக் கருதவில்லை.

முதன் முதலில் தமிழ் நாட்டில் எழுத்தாளர் என்ற பெயருக்கு உரியவரானவர் ஸ்ரீ வ. ரா. அவர்கள்தான். எழுத்துத் தொழிலுக்கு அவர் தனிக் கௌரவம் கொடுத்தார்; தனித்த கௌரவம் கோரினார். எழுத்துத் தொழிலை ஒரு கலையாகக் கருதி அதையே தமது இலட்சியமாகக் கொண்டார்; ஜீவனோபாயமாகவும் கொண்டார். புதிய புதிய தமிழ் எழுத்தாளர்களை வ. ரா உண்டு பண்ணினார். அவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்தார். தமிழ் எழுத்தாளரின் கௌரவத்தைத் தம்முடைய சொந்த கௌரவமாகக் கருதினார். தமிழ் எழுத்தாளரின் சுய மதிப்பைப் பாதுகாப்பதில் கண்ணும் கருத்துமா யிருந்தார்; இப்போதும் இருந்து வருகிறார்.

தமிழ்நாட்டுக்கும் தமிழ் எழுத்தாளருக்கும் தமிழ் மொழிக்கும் வ. ரா. அவர்கள் செய்திருக்கும் சேவையை எடை போட்டு அளந்து சொல்ல முடியாது. அவருடைய தொண்டு அவ்வளவு மகத்தானது. உலகத்தில் எழுத்தின் சக்தி அபாரம் என்று எல்லாருமே ஒப்புக் கொள்கிறார்கள். நாடகத்தையும் சினிமாவையும் ரேடியோவையும் காட்டிலும் எழுத்தே அதிக சக்தி வாய்ந்தது என்று சென்ற பத்து வருஷ காலத்தில் உலக அரங்கத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. நாடகம், சினிமா, ரேடியோவினால் ஒரு நாட்டில் நடந்து வரும் சர்க்காரை மாற்ற முடியாது; ஆனால் எழுத்தின் சக்தியால் மாற்ற முடியும். எழுத்தின் அபார வலிமையை எடுத்துக் காட்டியதற்காகத் தமிழகம் வ. ரா. வுக்குக் கடமைப்பட்டிருக்கிறது. தமிழ் எழுத்தாளர் எல்லா விதத்திலும் அவருக்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

* * *

பேராசிரியர் வ. ரா. அவர்களின் மணிவிழாவை அவர் பிறந்த தினமாகிய செப்டம்பர் 17-ம் தேதி சென்னையில் சிறப்பாகக் கொண்டாடுவது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அன்றைய தினம் அவருக்கு ஒரு நிதி முடிப்பு அளிக்கவும் உத்தேசித்திருக்கிறது. நிதியின் தொகை எழுத்துத் தொழிலின் மேன்மைக்கும் எழுத்தாளரின் சுய மதிப்புக்கும் ஏற்றதாக இருக்க வேண்டும். ஸ்ரீ வ. ரா. அவர்களின் தொண்டுக்குப் பொருத்தமாக இருக்கவேண்டும்.


தாராளமாக வ. ரா. நிதிக்குப் பண உதவி செய்யும்படி தமிழ் மக்களைக் கேட்டுக் கொள்கிறோம். தமிழ் எழுத்தாளர் அனைவரும் தங்களுடைய காணிக்கையை நிதிக்கு அனுப்புவதோடு பெரு முயற்சி எடுத்துப் பணம் வசூலித்து அனுப்பும்படியும் கேட்டுக் கொள்கிறோம்.

மணி விழாக் கொண்டாடுவதற்கும் நிதி வசூல் செய்து அளிப்பதற்கும் ஸ்ரீ காமராஜ நாடார் அவர்களைத் தலைவராகக் கொண்ட கமிட்டி ஏற்பட்டிருக்கிறது. ஸ்ரீ கே. சீனிவாசன், ஸ்ரீ சி. ஆர். சீனிவாசன், ஸ்ரீ ராமநாத கோயங்கா முதலிய பத்திரிகை உலகச் சீமான்கள் கமிட்டியின் உதவித் தலைவர்கள்.

பேராசிரியர் வ. ரா. மணி விழா நிதிக்குப் பணம் அனுப்புவோர் மணி விழாக் கமிட்டியின். பொக்கிஷதாருக்கு அனுப்பி வைக்கலாம். பொக்கிஷதாரின் விலாசம்: ஸ்ரீ டி. சதாசிவம், மானேஜர், "கல்கி," கீழ்ப்பாக்கம், சென்னை.

ஜவாஹர் மலர்

சுதந்திர இந்தியாவின் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு நாளது ஜுலை 24-ந் தேதி தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்வதை முன்னிட்டு அடுத்த வாரத்துக் 'கல்கி' இதழ் (25—7—1948) ஜவாஹர்லால் மலராக வெளியாகும்.



முப்பத்திரண்டாம் அத்தியாயம்

காதலர் உலகம்

சீதாவும் லலிதாவும் கலியாணம் நிச்சயமான நாளிலிருந்து ஆனந்த மயமான கனவு லோகத்தில் சொர்க்க சுகத்தை அநுபவித்துக் கொண்டிருந்தார்கள். பசும்புல் தரையில் அழகிய பட்டுப் பூச்சிகள் வாணச் சிறகுகளை அடித்துக் கொண்டு அங்கு மிங்கும் சஞ்சரிப்பதைப் போல் அவர்கள் இந்திரபுரியின் நந்தவனத்தில் யதேச்சையாக அலைந்து திரிந்தார்கள். தேவ லோகத்துப் பாரிஜாத மரங்களினிடையே அவர்கள் கருவண்டுகளாக உலாவித் திரிந்து பாரிஜாத புஷ்பங்களில் கசிந்த இனிய தேனைத் தேவா ம்ருதத்தோடு பருகி மகிழ்ந்தார்கள்.

மாயா லோகம் போன்ற மேக மண்டலங்களுக்கு மேலே நின்று அவர்கள் ஆடிக் களித்தார்கள். நட்சத்திரங்களினிடையே வட்டமிட்டு ஒருவரை யொருவர் ஓடிப் பிடித்தார்கள். ஆகாச கங்கையைக் கையினால் அள்ளி ஒருவர்மேல் ஒருவர் தெளித்து மகிழ்ந்தார்கள். வெள்ளைப் புறாக்களாகி மந்தமாருதத்தில் மிதந்தார்கள். பசு மரக் கிளைகளில் இரு கிள்ளைகளாகி உட்கார்ந்து யாழிசை போன்ற மழலை மொழி பேசிக் கொஞ்சினார்கள்.

கலியாணம் நிச்சயமான நாளிலிருந்து அவர்கள் இருவருடைய உள்ளங்களும் உடல்களும் அதிசயமான வளர்ச்சி பெற்றிருந்தன. முகங்கள் புதிய காந்தி பெற்று விளங்கின. மேனியில் புதிய மெருகு தோன்றித் திகழ்ந்தது. தினந் தினம் பொழுது புலரும்போது அவர்களுக்கு மட்டும் ஒரு புதுமையான சௌந்தரியத்துடன் புலர்ந்தது. சூரியன் என்றுமில்லாத ஜோதியுடன் உதயமானான். அந்தி மயங்கி நிழல் படர்ந்து வரும் மாலை நேரத்தின் மோகனத்தையோ வர்ணிக்க முடியாது.

ஆகா! இரவின் இன்பத்தைத்தான் என்னவென்று சொல்வது? வானத்தில் பிறைச் சந்திரன் பிரகாசித்தால் அதன் அழகைப் பார்த்துக் கொண்டேயிருக்கலாம். முழுமதியாயிருந்தாலோ உள்ளம் கடலைப்போல் பொங்கத் தொடங்கிவிடும். சந்திரனே இல்லாத இரவு மட்டும் அழகில் குறைந்ததா, என்ன? அடாடா! கோடானு கோடி

வைரங்களை வாரி இறைத்தது போல் சுடர் விடும் நட்சத்திரங்களோடு வானம் விளங்கும் காட்சிக்கு இணை வேறு உண்டோ?

விழித்திருக்கும் வரையில் மூச்சு விடாமல் அவர்கள் பேசிக் கொண்டிருப்பார்கள். தூங்கினாலோ எத்தனை இன்பமயமான கனவுகள்!

சீதாவின் அன்னை அகண்ட காவேரியில் வேனிற் காலத்தில் ஓடும் பளிங்குபோல் தெளிந்த ஆற்று நீரில் குளிக்கும் ஆனந்தத்தைப் பற்றி ஒரு நாள் சொன்னாள். தன்னுடைய இளம் பிராயத்தில் அவ்விடம் அடிக்கடி சென்று குளிப்பதுண்டு என்று கூறினாள். மாமா கிட்டாவய்யரின் பிராணனை எடுத்துச் சீதா காவேரியில் போய்க் குளித்து வர உத்தரவு பெற்றாள். தோழிகள் இருவரும் ராஜம்மாளும் வண்டி கட்டிக் கொண்டு காவேரியில் குளிக்கச் சென்றார்கள். பிருந்தாவனத்தில் கண்ணன் வாழ்ந்திருந்த காலத்தில் கோபாலரும் கோபியரும் யமுனையில் இறங்கிக் கண்ணனோடு நீர் விளையாடியபோது அடைந்த ஆனந்தத்துக்கு இணையான ஆனந்தத்தைச் சீதாவும் லலிதாவும் அன்று அடைந்தார்கள். அவ்விதம் அகண்ட காவேரியில் குளித்துவிட்டுத் திரும்பி வரும்போதுதான் சூரியாவும் பாலகிருஷ்ணனும் குஸ்திச் சண்டை போடும் காட்சியைக் கண்டார்கள். சீதாவுக்கும் லலிதாவுக்கும் சற்று நேரத்துக்கெல்லாம் அது மறந்து போய் விட்டது. மத்தியானம் சாப்பாடு முடிந்ததும் அந்தரங்கம் பேசுவதற்குத் தனி இடத்தை நாடி அவர்கள் குளத்தங்கரை பங்களாவுக்குச் சென்றார்கள். அந்த வருஷம் கார்த்திகை மாதத்தில் நல்ல மழை பெய்திருந்தபடியால் பங்குனி மாதக் கடைசியானாலும் குளத்தில் தண்ணீர் நிறைய இருந்தது. குளத்தில் தவழ்ந்து வந்த குளிர்ந்த தென்றல் காற்று சீதாவையும் லலிதாவையும் பட்டப் பகலிலேயே காதலரின் மாயாஜாலக் கனவுலோகத்துக்குக் கொண்டு போயிற்று.

அவர்களுடைய சம்பாஷணை அன்று பரிகாசத்தில் ஆரம்பமாயிற்று.

"லலிதா! நலங்கின் போது உன்னைப் பாடச் சொல்வார்கள். 'ராமா பட்டாபி ராமா' கிருதியை நீ கட்டாயம் பாட வேண்டும். இல்லாவிட்டால் நான் உன்னோடு 'டூ'ப் போட்டு விடுவேன். அப்புறம் பேசவே மாட்டேன்!" என்றாள் சீதா.

"முதலில் நீ 'மருகேலரா ஓ ராகவா' கீர்த்தனத்தைப் பாடு! அதைக் கேட்டுத் தைரியப்படுத்திக் கொண்டு நானும் பாடுகிறேன். நீ தைரியசாலி, சீதா! எனக்கு அவ்வளவு தைரியம் இல்லையே! என்ன செய்வது?" என்றாள் லலிதா.

"அடி திருடி! உனக்கா தைரியமில்லை என்கிறாய்? ஒரு வருஷத்துக்கு முன்னால் ஒருவருக்கும் தெரியாமல் அல்லவா நீயும் மிஸ்டர் பட்டாபிராமனும் கலியாணம் நிச்சயம் செய்து கொண்டு விட்டீர்கள்? தைரியம் இல்லாமலா அப்படிச் செய்தாய்?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை, சீதா! நாங்கள் ஒருவருக்கொருவர் ஒரு வார்த்தை பேசிக் கொண்டதுகூட இல்லையே?"

"பேசிக் கொள்ளவில்லையா? அது எப்படி லலிதா? பொய் சொல்லாதே! வாயினால் நீ பேசினால்தான் பேச்சா? கண்களினால் பேசினால் பேச்சு இல்லையா! போன வருஷம் நீ தேவபட்டணத்துக்குப் போயிருந்ததையெல்லாந் தான் சொன்னாயே? அதைவிட வாய்ப்பேச்சு என்னத்திற்கு, லலிதா? சீதையும், ராமரும் என்ன செய்தார்கள்? கலியாணத்திற்கு முன்னால் அவர்கள் வாயினாலா பேசிக் கொண்டார்கள்? மிதிலாபுரியில் இராமர் வீதியோடு போய்க் கொண்டிருந்தார். சீதை கன்னிமாடத்தின் உப்பரிகையில் நின்று கொண்டிருந்தாள். ஒருவரையொருவர் கண்ணாலே மட்டுந்தான் பார்த்துக் கொண்டார்கள். அவர்களுக்குள் அழியாக் காதல் ஏற்படுவதற்கு அது போதவில்லையா?"

"போதாது என்று நான் சொல்லவில்லை. ஆனால் பேசுவதற்குத் தைரியம் இருந்தால் பேசக்கூடாது என்பது இல்லையே? உன் கலியாணம் நிச்சயமான பிறகு உன்னை அவர் அழைத்துக் கேட்டதற்குப் பதில் சொன்னாயே? அதை நினைக்க நினைக்க ஆச்சரியமாயிருக்கிறது. சீதா! அதை இன்னொரு தடவை சொல்லேன்

எனக்கு மறுபடியும் அதைக் கேட்க வேண்டும் போலிருக்கிறது!"

"அதற்கென்ன பேஷாகச் சொல்கிறேன். இன்னும் பத்து தடவை நீ கேட்டாலும் சொல்கிறேன். நிச்சயதார்த்தம் ஆனபிறகு அவர்கள்,—எனக்கு மாமனாராகவும் மாமியாராகவும் வரப்போகிறார்கள்,—என்னைக் கூப்பிடுவதாக அனுப்பிச் சென்றார்கள். ஒரு பக்கத்தில் எனக்குச் சந்தோஷமாயிருந்தது. மற்றொரு பக்கத்தில் என்ன கேட்பார்களோ என்னமோ என்று பயமாகவும் இருந்தது. ஆனாலும் அவர்கள் பேச்சைத் தட்ட முடியாமல் போனேன். அந்த மாமி என்னைக் கட்டிக் கொண்டு உச்சி முகந்து ஆசீர்வதித்தாள். 'நீதான் எங்கள் வீட்டுக்கு லக்ஷ்மி, சரஸ்வதி எல்லாம். உன்னால்தான் எங்கள் குலம் விளங்கப் போகிறது' என்று ஏதேதோ சொன்னாள். மாமனாரோ நீளமாக ஏதோ பேசிக் கொண்டேயிருந்தார். என்னுடைய அழகுக்காகவும் சமர்த்துக்காகவுந்தான் வரதட்சணையில்லாமலும், பணமில்லாமலும் பிள்ளைக்குக் கலியாணம் செய்துகொள்வதாக அவர் சொன்னது மட்டும் எனக்குப் புரிந்தது. அதே சமயத்தில் என்னுடைய கவனம் எல்லாம் மாப்பிள்ளையிடம் சென்றிருந்தது. பிறகு மாமனாரும் மாமியாரும் சற்று தூரமாகப் போனார்கள். நானும் போவதற்கு ஆயத்தமானேன். உடனே மாப்பிள்ளை என்னைப் பார்த்து, 'சீதா! போவதற்கு அவசரப் படாதே! சற்றுப் பொறு. உன்னை நான் ஒரு கேள்வி கேட்கப் போகிறேன். பதில் சொல்லுவாயல்லவா!' என்றார்.

"நான் தலைகுனிந்து மௌனமாயிருந்தேன். அவர் மறுபடியும் 'நேற்றைக்கெல்லாம் கலகலவென்று பேசிக் கொண்டிருந்து விட்டு இன்றைக்குத் திடீரென்று பேசாமடந்தையானால் நான் விடமாட்டேன். என்னுடைய கேள்விக்குப் பதில் சொல்லியே தீரவேண்டும். நீ என்னைக் கலியாணம் செய்து கொள்ள இஷ்டப்பட்டது எதற்காக?' என்று கேட்டார். அப்போது அவரை நிமிர்ந்து பார்த்தேன். நான் சொல்லப் போகும் பதிலை நினைத்து எனக்கே சிரிப்பு வந்தது. 'அந்தக் கேள்வியை நான் அல்லவா கேட்க வேண்டும்? நீங்கள் தானே என் சிநேகிதியைப் பார்ப்பதற்காக வந்துவிட்டு என்னைக் கலியாணம் செய்து கொள்ள இஷ்டப்படுவதாகச் சொன்னீர்கள்!' என்றேன். இதைக் கேட்டதும் அவர் சிரித்து விட்டார். ஆனால் உடனே முகத்தைக் கடுமையாக்கிக் கொண்டு, 'அப்படியானால் உனக்கு இந்தக் கலியாணத்தில் இஷ்டமில்லை யென்கிறாயா? இப்போது ஒன்றும் மூழ்கிவிடவில்லை. கலியாணத்தை நிறுத்திவிடலாம். உனக்கு மனதில்லை யென்றால் சொல்லி விடு!' என்றார். 'ஆமாம், எனக்கு மனதில்லைதான். என் மனது என்னிடத்தில் இல்லை. நேற்று சாயங்காலம் மோட்டாரிலிருந்து இறங்கியபோதே தாங்கள் என் மனதைக் கவர்ந்து கொண்டு விட்டீர்களே? இப்போது எப்படி எனக்கு மனது இருக்கும்?' என்றேன். அப்போது அவருடைய முகத்தைப் பார்க்க வேண்டுமே, லலிதா! அதில் குதூகலம் ததும்பியது. 'நான் எத்தனையோ பி. ஏ., எம். ஏ. படித்த பெண்களையெல்லாம் பார்த்திருக்கிறேன்; பழகியிருக்கிறேன். உன்னைப் போல் சமர்த்தான பெண்ணைப் பார்த்ததேயில்லை. உன்னை இப்போது பிரிந்து போக வேண்டுமே என்றிருக்கிறது!' என்று அவர் சொன்னார். என் வாய்க் கொழுப்பு நான் சும்மா இருக்கக் கூடாதா? 'இப்போது இப்படிச் சொல்கிறீர்கள். நாளைக்கு ஊருக்குப்போனதும் மறந்து விடுகிறீர்களோ, என்னமோ? பி. ஏ., எம். ஏ. படித்த பெண்கள் அங்கே எத்தனையோ பேர் இருப்பார்கள்!' என்று சொன்னேன். 'அதற்குள்ளே புகார் சொல்ல ஆரம்பித்து விட்டாயா? பி. ஏ. யும் ஆச்சு; எம். ஏ. யும் ஆச்சு! அவர்கள் எல்லாம் உன் கால் தூசி பெற மாட்டார்கள். உன்னைத் தவிர எனக்கு வேறு ஞாபகமே இராது!' என்று அவர் கூறியபோது என் மனம் குளிர்ந்தது. இருந்தாலும் கிறுக்காக, 'துஷ்யந்த மகாராஜா சகுந்தலையிடம் இப்படித்தான் சொன்னார். ஊருக்குப் போனதும் மறந்து விட்டார்' என்றேன். 'சீதா!' என்று அவர் அன்பு கனிய என்னை அழைத்து



'துஷ்யந்தன் ராஜா; அதனால் அவன் எதுவேணுமானாலும் செய்வான். நான் சாதாரண மனிதன்தானே!' என்றார். 'நீங்கள்தான் எனக்கு ராஜா!' என்று நான் சொன்னேன். 'துஷ்யந்தன் தேசத்துக்கு ராஜா; நான் உனக்கு மட்டுந்தான் ராஜா. ஆகையால் உன்னை என்னால் மறக்க முடியாது. அடையாளந் தருகிறேன், அருகில் வா!' என்றார். ஏதோ மோதிரம் அல்லது பவுண்டன் பேனா இப்படி ஏதாவது தரப் போகிறார் என்று நினைத்துக் கொண்டு அவர் அருகில் போனேன். அவர் எனது வலது கையைத் தமது இரண்டு கையாலும் பிடித்துக் கொண்டு கையில் முத்தம் கொடுத்தார். லலிதா! அதை நினைத்தால் இப்போதுகூட என் உடம்பெல்லாம் புல்லரிக்கிறதடி!"

இவ்விதம் சீதா சொல்லிவிட்டுப் பின்வருமாறு பாடினாள்.

"எண்ணும் பொழுதிலெல்லாம்-அவன்கை
இட்ட இடந்தனிலே
தண்ணென் றிருந்ததடி-புதிதோர்
சாந்தி பிறந்ததடி!

எண்ணியெண்ணிப் பார்த்தேன்-அவன்தான்
யாரெனச் சிந்தை செய்தேன்!
கண்ணன் திருவுருவம்-அங்ஙனே
கண்ணின்முன் நின்றதடி!"

சீதாவுக்கும் சௌந்தர ராகவனுக்கும் நடந்த சம்பாஷணையை ஐந்தாவது தடவையாகக் கேட்டுக் கொண்டிருந்த லலிதாவின் மனம் புயல் அடிக்கும் போது அலை கடல் பொங்குவது போலப் பொங்கியது. தன் மணாளன் பட்டாபிராமன் தன்னிடம் இப்படியெல்லாம் காதல் புரிவானா, இவ்வாறெல்லாம் அருமையாகப் பேசுவானா என்று அவள் உள்ளம் ஏங்கியது. அந்த எண்ணத்தைச் சட்டென்று மாற்றிக் கொண்டு, "சீதா! நீ துஷ்யந்தனைப் பற்றிச் சொன்னாயே, அது மட்டும் சரியல்ல. சகுந்தலை - துஷ்யந்தன் கதை எனக்கு ரொம்பப் பிடிக்கிறது. துஷ்யந்தன் பெரிய சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி. அவன் ரிஷி ஆசிரமத்தில் வளர்ந்த தாய் தகப்பன் அறியாத பெண்ணை மணந்து கொண்டானே? அது ஆச்சரியமில்லையா?" என்றாள் லலிதா.

"அது ஆச்சரியந்தான். ஆனால் அதைப் போல எத்தனையோ நடந்திருக்கிறது. அனார்கலி கதை உனக்குத் தெரியுமா, லலிதா! 'மங்கையர்க்கரசியின் காதல்' என்னும் புத்தகத்தில் அந்த அற்புதமான கதை இருக்கிறது" என்றாள் சீதா.

"எனக்குத் தெரியாதே! அது என்ன கதை, சொல்லு!"

"அக்பர் பாதுஷாவின் பிள்ளை ஸலீம் தன்னை இளம் பிராயத்தில் வளர்த்த தாதியின் வளர்ப்புப் பெண்ணைக் காதலித்தான். அவளையே கலியாணம் செய்து கொள்வதாகச் சத்தியம் செய்து கொடுத்தான். அரண்மனை நந்தவனத்தில் அவர்கள் பேசிக்கொண்டிருந்ததைப் பக்கத்திலிருந்த ரோஜாப்பூப் புதர் மறைவிலிருந்து அக்பர் பாதுஷா கேட்டுக் கொண்டிருந்தார். அவருக்குப் பின் பட்டத்துக்கு வரவேண்டிய மூத்த குமாரர் ஒரு தாதியின் வளர்ப்புப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்வதா என்று அவருக்கு ஆத்திரம் பொங்கிற்று. உடனே அனார்கலியைப் பிடித்துச் சிறையில் அடைக்க உத்தரவு போட்டுவிட்டார். 'அனார்கலி' என்றால் பாரஸீக பாஷையில் 'மாதுளை மொக்கு' என்று அர்த்தமாம். அது ஸலீம் அவளுக்கு அளித்த செல்லப் பெயர். சிறையில் அடைபட்ட அனார்கலி ஸலீமையே நினைத்து உருகிக் கொண்டிருந்தாள். அவன் தன்னை வந்து விடுவிப்பான், விடுவித்து மணம் புரிந்து கொள்வான் என்று ஆசையோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால் அக்பர் பாதுஷா செத்துப் போய் ஸலீம் பட்டத்துக்கு வருவதற்கு வெகு காலம் ஆயிற்று. கடைசியில் ஸலீம் சக்கரவர்த்தியானதும் முதல் காரியமாக அனார்கலியை விடுதலை செய்யப் போனான். அதற்குள் அனார்கலிக்குச் சித்தப் பிரமை பிடித்து விட்டது. ஸலீமை அவளால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை: 'உங்களையெல்லாம் இங்கே யார் வரச் சொன்னார்கள்? என்னை விடுதலை செய்ய நீங்கள் யார்? ஸலீம் வந்து என்னை விடுவிக்கப் போகிறார். அது

வரை இங்கேயேதான் இருப்பேன்' என்றான். இதைக் கேட்டு ஸலீம் மனம் உடைந்து போனான். அனார்க்கலியும் பிறகு சீக்கிரத்தில் இறந்து போனாள்."

இதைக் கேட்டபோது லலிதாவின் கண்களில் கண்ணீர் ததும்பிவழிந்தது.

"ஏனடி அழுகிறாய், அசடே," என்றாள் சீதா.

"எனக் கென்னமோ வருத்தமாயிருக்கிறது, அம்மா! அவர்களுடைய உண்மையான காதல் எதற்காக இப்படித் துக்கத்தில் முடிய வேண்டும்?" என்றாள் லலிதா.

"காதற் கதைகள் அநேகமாக அப்படித்தான் முடிகின்றன. ரோமியோ—ஜூலியட் கதையைப் பாரேன்! அவர்களுடைய காதலைப் போல் உலகத்திலேயே கிடையாது. ஆனால் கடைசியிலே இரண்டு பேரும் செத்துப் போகிறார்கள்."

"இரண்டு பேரும் ஒரு வழியாகச் செத்துப் போய்விட்டால் பாதகமில்லை, சீதா! ஒருவர் செத்து ஒருவர் இருந்தால் எவ்வளவு கஷ்டமாயிருக்கும்! ஸலீமைப் பார்! பிறகு அவன் தானே ஜஹாங்கீர் பாதுஷா ஆகி நூர்ஜஹானைக் கலியாணம் செய்து கொண்டான்? நூர்ஜஹான் உலகத்தில் எவ்வளவு பிரசித்தமான அழகியாய் இருந்தால்தான் என்ன? அதற்காக, அவனால் அனார்க்கலியை எப்படி மறக்க முடிந்தது?"

"சில புருஷர்கள் அப்படித்தான், லலிதா! ஆனால் எல்லாரும் அப்படியில்லை. ஜஹாங்கீரின் மகன் ஷாஜஹானைப் பார்! அவன் மும்தாஜ்மகால் என்பவளைக் கலியாணம் செய்து கொண்டான். அவள் செத்துப் போன பிறகும் அவளை ஷாஜஹான் மறக்கவில்லை. அவளுடைய ஞாபகமாகத் தாஜ்மகால் கட்டினான். தன் அரண்மனையிலிருந்து எப்போதும் தாஜ்மகாலைப் பார்த்துக் கொண்டேயிருந்தான். பார்த்துக் கொண்டே செத்துப் போனான். இந்தக் காதல் ரொம்ப உயர்வாயில்லையா, லலிதா!"

"உயர்வுதான்; ஆனாலும் சாவித்திரி சத்யவான் கதைதான் எனக்கு எல்லாவற்றிலும் அதிகம் பிடித்திருக்கிறது. இராஜ்யத்தை இழந்து காட்டுக்கு வந்து குருட்டுத் தாய் தந்தையருக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்த சத்தியவானைச் சாவித்திரி காதலித்தாள். ஒரு வருஷத்திற்குள் சத்தியவான் செத்துப் போய் விடுவான் என்று தெரிந்தும் அவளுடைய உறுதி மாறவில்லை. யமனுடனே வாதாடிப் போன உயிரைக் கொண்டு வந்தாள். இதுவல்லவா உண்மையான காதல்? லைலா மஜ்னூன், அனார்க்கலி கதைகளைவிட நம் தேசத்துக் கதைகள் உயர்ந்தவைதான்."

"அப்படி நம் நாட்டுக் கதைகள் என்று பார்த்தால், சுப்பிரமண்ய ஸ்வாமிக்கும் வள்ளிக்கும் நடந்த காதல் கலியாணத்தைப் போல் ஒன்றுமே கிடையாது. வள்ளி குறப் பெண்; சுப்பிரமண்யரோ சாக்ஷாத் பரமசிவனுடைய குமாரர். தேவ சேனாபதி. அப்பேர்ப்பட்டவர் குறவர் குடிசையைத் தேடி வந்து வள்ளியை மணந்து கொண்டார் என்றால், அது எப்பேர்ப்பட்ட அதிசயம்? மணந்தது மட்டுமா? ஒவ்வொரு சிவன் கோவிலிலும் சுப்பிரமண்யர் தமக்குப் பக்கத்தில் வள்ளியையும் வைத்துக் கொண்டிருக்கிறார். கேவலம் ஒரு குறத்தியை எல்லாரும் கும்பிடும் தெய்வமாக்கி விட்டார்! உண்மையான காதலுக்கு இதைக் காட்டிலும் வேறு என்ன கதை இருக்கிறது, லலிதா? சுப்பிரமண்ய சுவாமி — வள்ளி கதை எனக்கு ரொம்பவும் பிடிக்கும். சுப்பிரமண்ய சுவாமியைப் பற்றி ஒரு பாட்டுப் பாடுவாயே? அதைக் கொஞ்சம் பாடேன்!" என்றாள்.

உடனே லலிதா பின் வரும் காவடிச் சிந்தைப் பாட ஆரம்பித்தாள்:—

"பாளை வாய்க் கமுகில் வந்தூர்
வாளை பாய் வயல் சூழ்செந் தூர்
பாலனம் புரிய வந்த புண்ணியா!"

சீதா குறுக்கிட்டு, "இது இல்லை, லலிதா! 'பொன் மயில்' என்று ஒரு பாட்டுப் பாடுவாயே? அதைப் பாடு!" என்று சொன்னாள்.

"சரி" என்று சொல்லி லலிதா ஆரம்பித்தாள்.

"பொன் மயில் ஏறி வருவான்—ஐயன்
பன்னிரு கையால் தன்னருள் சொரிவான் (பொன்)

செங்கதிர் வேலன் சிவனருள் பாலன்
மங்கை வள்ளி மணாளன்
பங்கயத்தாளன் தீனதயாளன் (போன்)

புன்னகை தன்னால் இன்னல்கள் நீப்பான்
புன்மை இருள் கணம் மாய்ப்பான்
கன்னலின் இனிய தண்தமிழ் அளிப்பான்" (போன்)

பாட்டு முடியும் தருணத்தில், "பலே பேஷ்! லலிதா! இவ்வளவு ஜோராய்ப் பாடுகிறாயே? அன்றைக்கு மதராஸ்காரர்கள் வந்தபோது மட்டும் பாடவே மாட்டேன் என்று வாயை இறுக மூடிக் கொண்டாயே? அது ஏன்?" என்று கேட்டுக் கொண்டே சூரியா உள்ளே வந்தான். அவனைத் தொடர்ந்து ராஜம்மாளும் வந்தாள்.

சூரியாவுக்குப் பதிலாக சீதா, "அன்றைக்கு அவளுக்குப் பாடப் பிடிக்கவில்லை. அதனால் பாடவில்லை. நாளைக்குக் கலியாணத்தின் போது பார், அத்தான்! 'மாமவ பட்டாபி ராமா' கீர்த்தனம் பாடுகிறேன் என்று சொல்லியிருக்கிறாள்!" என்றாள் சீதா.

சூரியா, "ரைட்டோ! அதுதான் சரி! பட்டாபிராமனுக்கு அப்படித்தான் பட்டாபிஷேகம் செய்ய வேண்டும்!" என்றான்.

"சீதா! சூரியா உனக்கு அத்தான் இல்லை, அம்மாஞ்சி என்று எத்தனை தடவை சொல்கிறது?" என்று ராஜம்மாள் கேட்டாள்.

"மன்னித்துக் கொள், அம்மா! வண்டி குடை சாய்ந்ததே, அன்றைக்கு முதன் முதலில் சூரியாவைப் பார்த்தபோது பெரியம்மா 'அத்தான்' என்று சொன்னாலும் சொன்னாள். அதுவே வினையாக இருக்கிறது. 'அம்மாஞ்சி' 'அம்மாஞ்சி' என்று உருப்போட்டுக் கொண்டிருந்தாலும் சமயத்தில் அத்தான் என்று வந்துவிடுகிறது. 'அத்தரி பாச்சா' கதைதான்!"

இதற்குள் சூரியா, "அத்தை! அத்தங்காள் என்னை எப்படி அழைத்தால் தான் என்ன? அத்தான் என்றால் என்ன குறைவு? — அம்மாஞ்சி என்றால் என்ன உயர்த்தி?" என்றான்.

"ஆமாம், அம்மா! 'ரோஜாவை எந்தப் பெயர் இட்டு அழைத்தால் என்ன? வேறு பெயரால் அழைத்தால் அதன் மணம் குன்றிவிடுமா?' என்று ரோமியோ ஜூலியட் கதையில் ஓர் இடத்தில் வருகிறது"

"போதும், போதும்! ரோமியோ ஜூலியட்டும் ஆச்சு; மண்ணாங்கட்டியும் ஆச்சு! சீதா! இந்த மாதிரி அசட்டுக் கதையெல்லாம் படிக்காதீர்கள். இராமாயணம், பாரதம்; பாகவதம் இப்படி ஏதாவது நல்ல கதையாகச் சொல்லி, நல்ல விஷயமாகப் பேசிக் கொண்டிருங்கள்!" என்றாள் ராஜம்மாள்.

"ஆகட்டும், அம்மா! லலிதாவுக்கு நான் நளன்—தமயந்தி கதை சொல்கிறேன்" என்று கூறிவிட்டுச் சீதா லலிதாவைக் கையைப்பிடித்து அழைத்துக் கொண்டு பங்களாவை விட்டு வெளியேறினாள். அந்தரங்கம் பேசக் கூடிய ஏகாந்தமான இடத்தைத் தேடி அவர்கள் சென்றார்கள்.

* * *

லலிதாவும் சீதாவும் போனபிறகு ராஜம்மாள் சூரியாவைப் பார்த்து, "குழந்தை! சாலை யோரத்திலே தபால்காரனோடு நீ சண்டை போட்டுக் கொண்டிருந்தாயே! அது எதற்காக? எனக்கு என்னமோ சந்தேகமாயிருக்கிறது. என்னிடம் உண்மையைச் சொல்லு!" என்றாள்.

"அத்தை! அவசியம் சொல்லித்தான் தீர வேண்டுமா? அது உங்கள் சம்பந்தமான விஷயந்தான். கேட்டால் ஒருவேளை உங்களுக்கு வருத்தமாயிருக்கும். ஏற்கெனவே உங்களுக்கு எவ்வளவோ கவலை. மேலும் உங்களைத் துன்பப்படுத்துவானேன் என்று சொல்ல வேண்டாமென்று பார்த்தேன்!" என்றான் சூரிய நாராயணன்.

"அப்பா, சூரியா! இனிமேல் என் மனதை வருத்தப்படுத்தக் கூடிய விஷயம் உலகில் ஒன்றுமே இருக்க முடியாது. எத்தனையோ வருத்தங்களையும் கஷ்டங்களையும் அனுபவித்து அனுபவித்து என் மனதில் சுரணையே யில்லாமல் போய்விட்டது. எவ்வளவு வருத்தமான விஷயமாயிருந்தாலும் என்னை ஒன்றும் செய்து விடாது. தயங்காமல் சொல்லு!" என்றாள்.

கோவையில் பிரபல திருமணம்



கோயமுத்தூர் தங்கம் - வைர நகை வியாபாரி (K. R. & Sons) ஸ்ரீ கே. ராமகிருஷ்ண பிள்ளையின் குமாரன் சிரஞ்சீவி லக்ஷ்மணனுக்கும், பொள்ளாச்சி சப் - இன்ஸ்பெக்டர் ஸ்ரீ டி. என். விசுவநாதம் பிள்ளை குமாரத்தி சௌபாக்யவதி ஸரோஜினிக்கும் 8 - 7 - 48 வியாழக்கிழமையன்று கோயமுத்தூரில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. திருமண வைபவத்துக்கு உள்ளூரிலிருந்தும் வெளியூரிலிருந்தும் பல பிரமுகர்கள் வந்து தம்பதிகளை ஆசீர்வதித்தனர். மணமக்களுக்கு ஏராளமான பரிசுகளும் வாழ்த்துக்களும் வந்து குவிந்தன. அன்று மாலை அகில இந்திய வேணுகான நாதஸ்வர சக்கரவர்த்தி ஸ்ரீ டி. என். ராஜரத்தினம் பிள்ளையின் நாதஸ்வரக் கச்சேரியுடன் வைபவம் சிறப்பாக அமைந்தது.



"நினைவில்லாம லிருக்குமா? அந்த நாளெல்லாம் மறந்து போய்விடுமா, என்ன?" என்றான் அகிலாண்டம்.

அடுத்த க்ஷணம் பழைய ஞாபகங்கள் அகிலாண்டத்தின் கன்னங்களைச் சிவக்கச் செய்தன. அவளுடைய மலர்ந்த விழிகளையும், கன்னத்தில் விழுந்த சுழிகளையும் நோக்கிய ராமசந்திரம் அந்த நினைவு அலைகளில் அமிழ்ந்து போனான்.

2

ஏழு வருடங்களுக்கு முன்பு நடந்தவை அவை. புழக்கடைக் கிணற்றிலிருந்து இடுப்பில் ஜலம் நிறைந்த குடத்துடன், சற்றுத் தூரத்திலிருந்த அவரைக் கீரைப் பாத்தியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான் அகிலாண்டம். செழித்து வளர்ந்திருந்த கீரைப் பாத்தியில் குடத்து ஜலத்தை வார்த்து விட்டுத் திரும்பினவன், சற்றுத் தூரத்திலிருந்த வெள்ளரிக் கொடி யருகில் சென்றான்.

உடனே, "சித்தி! சித்தி! இங்கே ஓடி வா! நம்மாத்து வெள்ளரிக் கொடியில் எத்தனை பிஞ்சு விட்டிருக்கு, பார்!" என்று குதூகலத்தோடு கூவினான்.

"என்னடி கூச்சல் போடறே?" என்று கொல்லைப்புறத்துக் கதவண்டை வந்து நின்றாள் அவன் சித்தி பார்வதி.

"இல்லை, சித்தி! நம்மாத்து வெள்ளரிக் கொடியில் கணக்கில்லாமல் பிஞ்சு விட்டிருக்கு; அதைப் பார்க்கத்தான் உன்னைக் கூப்பிட்டேன். ஒன்று, இரண்டு, மூன்று நாலு......" என்று குடத்தைக் கீழே வைத்து விட்டுக் கொடியிலிருந்த பிஞ்சுகளை எண்ணலானான்.

சிறு குழந்தைப்போல் குதூகலமடைந்த அவனைப் பார்த்த பார்வதிக்குச் சிரிப்பு வந்தது. "அகிலா! வீட்டிலே வெள்ளரி நிறையக் காய்த்தால் என்ன வருமென்று சொல்வார்கள், தெரியுமோ?" என்று கேட்டாள்.

"என்ன வரும், சித்தி! எனக்குத் தெரியாதே!" என்று அவள் முகத்தை ஆவலோடு பார்த்தான் அகிலாண்டம்.

"சுருக்கக் கல்யாணம் வருமென்று சொல்வார்கள்!" என்று அவனை நோக்கிக் குறும்பாகக் கண்ணைச் சிமிட்டினாள் சித்தி.

அகிலாண்டம் உடனே, "போ, சித்தி! உனக்கு எப்பொழுதும் வேடிக்கைதான்!" என்று முகத்தைச் சுளித்து விட்டு மீண்டும்



வெள்ளரிப் பிஞ்சு

வேங்கடலட்சுமி

சித்திரை மாதத்துக் கடும் வெய்யில். மணி சுமார் பதினொன்று இருக்கும். அகிலாண்டம் சமையலறையில் தன்னுடைய வேலைகளையெல்லாம் முடித்துக் கொண்டு கூடத்துக்கு வந்தாள். அங்கே ஒரு மூலையில் இறைந்து கிடந்த விளையாட்டுச் சாமான்களுக்கு நடுவே, தரையில் குப்புறப் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள் பாலா. அவளை எடுத்துத் தொட்டிலில் போட்டு விட்டு, கையில் தமிழ்ப் பத்திரிகையுடன் தூணில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

கடை ரேழியில் செருப்புச் சத்தம் கேட்டது. அகிலாண்டம் எட்டிப் பார்ப்பதற்குள்ளாகவே அவள் கணவன் ராமசுந்தரம், "உஸ், அப்பாடா என்ன வெய்யில் என்ன வெய்யில்!" என்று சொல்லிக் கொண்டே உள்ளே வந்தான். சட்டையைக் கழற்றி ஆணியில் மாட்டி விட்டுக் குழாயண்டை சென்று கைகால் முகம் கழுவிக்கொண்டு கூடத்துக்கு வந்தான். மின்சார விசிறியைச் சுழல விட்டு விட்டுச் சாய்மான நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு, அதில் படுத்துக் கண்களை மூடிக்கொண்டான்.

அகிலாண்டம் பத்திரிகையைக் கீழே வைத்துவிட்டு, "தீர்த்தம் வேண்டுமா! இந்தப் பளபளக்கும் வெய்யிலில் எதற்காக வெளியில் போகவேணும்? சாயந்திரம் மெதுவாகப் போயிருக்கக் கூடாதா?' என்று கேட்டுக் கொண்டே எழுந்து வந்தாள். பிறகு, அவள் சமையலறைக்குள் போய்க் கையில் ஜிலுஜிலு வென்ற ஒரு டம்ளர் குளிர்ந்த தீர்த்தத்துடன் கூடத்துக்கு வந்தாள்.

டம்ளரைக் கையில் வாங்கி ஒரே மூச்சில் தண்ணீரைக் குடித்துத் தீர்த்தான் ராமசுந்தரம். காலி டம்ளரைக் கையில் வாங்கிக் கொண்டு உள்ளே போன அகிலாண்டம், ஐந்து நிமிஷத்துக் கெல்லாம் எதையோ எடுத்துப் புடவைத் தலைப்பில் மூடிக் கொண்டு அவன் அருகில் வந்து நின்றாள்.

"கண்ணைத் திறந்து பாருங்கள்! உங்களுக்கு ரொம்பப் பிடித்தமான வஸ்து ஒன்று கொண்டு வந்திருக்கிறேன்!"

"என்ன அது?" என்று கேட்டுக் கொண்டே கண்ணைத் திறந்து பார்த்தான் ராமசுந்தரம்.

"நான் சொல்ல மாட்டேன்; நீங்களே கண்டு பிடியுங்கள்!" என்று கன்னக் குழியப் புன்னகை செய்தாள் அகிலாண்டம்.

"எனக்கென்ன, ஜோஸியமா தெரியும்?"

"இதுகூடத் தெரியாதா? இந்த உலகத்தில் உங்களுக்கு ரொம்பப் பிடித்தமான வஸ்துக்கள் எத்தனை?"

'இந்த உலகில் எனக்கு ரொம்பப் பிடித்தமான வஸ்துக்கள் மூன்றுதான்."

"எதெல்லாம்?"

"ஒன்று நீ, இன்னொன்று பாலா!"

"சரிதான்; வேடிக்கை பண்ணுகிறீர்கள்! இன்னொன்று என்னது?"

"இன்னொன்று, நல்ல வெற்றிலைக் கொடிக்கால் கொல்லையில் காய்த்த ஜோரான இளம் வெள்ளரிப் பிஞ்சு!" என்றான்.

களுக்கென்று சிரித்தாள் அகிலாண்டம். "அதேதான்; உங்களுக்குப் பிடித்த அந்தச் சாக்ஷாத் வெள்ளரிப் பிஞ்சேதான் இது!" என்று கூடையைத் திறந்து காட்டினாள்.

அதில் தளதள வென்றிருந்த சோர்த்தியான இளம் வெள்ளரிப் பிஞ்சுகள் நிறைய இருந்தன.

துள்ளிக் குதித்தான் ராமசுந்தரம். "சீக்கிரம் போய்க் கத்தியை எடுத்துக் கொண்டு வா; நறுக்கித் தின்னலாம்." என்றான்.

"மெள்ளப் பேசுங்கள்; குழந்தை எழுந்துவிடப் போகிறாள்' என்று எச்சரித்து விட்டு, உள்ளே போய்க் கையில் கத்தியுடன் வந்து வெள்ளரிப் பிஞ்சுகளை நறுக்கித் தட்டில் குவிக்கலானாள்.

அதில் இரண்டு துண்டுகளை எடுத்து வாயில் திணித்துக்கொண்டு, "அகிலா! இந்த வெள்ளரிப் பிஞ்சுதானே நம்மை ஒன்று சேர்த்தது? உனக்கு நினைவில்லையா?" என்று சிரித்துக்கொண்டே கேட்டான் ராமசுந்தரம்.



குனிந்து வெள்ளரிப் பிஞ்சுகளை எண்ணலானான். பார்வதி சிரித்துக்கொண்டே உள்ளே போய் விட்டாள்.

சற்று நேரத்துக்கெல்லாம் வெள்ளரிக் கொடியில் இருந்த இருபத்தாறு பிஞ்சுகளை எண்ணி வைத்துவிட்டுக் குடத்தை எடுத்துக்கொண்டு உள்ளே போகப் புறப்பட்டான் அகிலாண்டம்.

குடத்திலிருந்து பெருகிய ஜலம் ஒரு சிறு பள்ளத்தில் தேங்கி அந்த இடத்தைச் சேறாக்கியிருந்தது. அதில் காலை வைத்தவுடன் அப்படியே சறுக்கி விட்டுவிட்டது. அதனால் ஒரு கால் மடங்கிவிடவே, அப்படியே 'தொபு'க்கென்று சேற்றில் உட்கார்ந்து விட்டான் அகிலாண்டம். குடம் கையிலிருந்து நழுவித் தூரத்தில் உருண்டு போய் விட்டது.

நல்ல வேளையாக அடியொன்றும் படவில்லை. முழங்காலில் மட்டும் கொஞ்சம் சிராய்த்து விட்டது. புடவையெல்லாம் ஒரே சேறு. மெதுவாக முழங்காலைக் கையால் தடவிக்கொண்டு எழுந்திருக்க யத்தனித்தான். 'களுக்' கென்று பின்னால் யாரோ சிரிக்கும் சத்தம் கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். அவனுக்கு ஒரே வெட்கமாய்ப் போய்விட்டது.

பக்கத்துவீட்டு வேலியண்டை நின்றுகொண்டிருந்த ராமசுந்தரம்தான் அவன் விழுந்ததைப் பார்த்துவிட்டு அப்படிச் சிரித்துக் கொண்டிருந்தான். அவசரமாய் எழுந்த அகிலாண்டம் சிவந்த முகத்துடன் வேகமாய் வீட்டை நோக்கிப் போகலானான். வெட்கத்துடன் கோபமும் பொங்கி வந்தது அவனுக்கு. அவன் கையிலிருந்து உருண்டு சென்ற குடம் கவனிப்பாரில்லாமல் அங்கேயே கிடந்தது. வீட்டுக்குச் சென்ற பிறகும் ராமசுந்தரத்தின் கேலிச் சிரிப்பு வெகு நேரம் வரை அவன் காதில் ஒலித்துக் கொண்டேயிருந்தது.

3

அடுத்த மூன்றாவது தினம் திருவாதிரை. வாசல் திண்ணையில் மாக்கோலமிட்டுச் செம்மண் கட்டிக்கொண்டிருந்தான் அகிலாண்டம். அப்பொழுது அந்த வழியே சென்ற ராமசுந்தரம் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு மெல்லிய குரலில், "காலில் அடியொன்றும் படவில்லையே! வெள்ளரிப் பிஞ்செல்லாம் எந்தமட்டில் இருக்கிறது?" என்று இடும்பாகக் கேட்டான்.

அகிலாண்டத்துக்குக் கோபம் பொங்கி வந்தது. வெடுக்கென்ற குரலில், "அடி பட்டாலும் நீங்கள் மருந்து போட வேண்டாம்; வெள்ளரிப் பிஞ்சு எத்தனை இருந்த போதிலும் உங்களுக்குக் கொடுக்கப் போவதில்லை!" என்று சொல்லிவிட்டுத் திரும்பிப்பாராமல் உள்ளே போய்விட்டாள்.

மத்தியானம் மூன்று மணிக்குமேல், "அகிலா, அகிலா! சித்தப்பா பொன்னாச்சியிலிருந்து ஆபீஸ் பியூனிடம் தாழம்பூ கொடுத்தனுப்பியிருக்கிறார். அதை எடுத்துக் கொண்டு போய்ப் பக்கத்து வீட்டு ரங்கம் மாமியிடம் கொடுத்து உனக்குத் தலை பின்னித் தைத்துவிடச் சொல்லு! ராக்கடியையும் எடுத்துக்கொண்டு போ!" என்று சொல்லிக்கொண்டே, இரண்டு தாழம் பூக் குருத்துக்களை அலமாரியிலிருந்து எடுத்துக் கொடுத்தாள் பார்வதி.

"வேண்டாம், சித்தி! எனக்கு அந்த மாமியை யெல்லாம் தெரியாது; நீயே வைத்துத் தைத்துவிடு! இல்லாவிட்டால் நாளைக்கு வைத்துப் பின்னிக் கொள்கிறேன்" என்றாள் அகிலாண்டம்.

"போடி, அசடு! எனக்கு இன்னிக்குத் தலைக்குமேலே காரியமிருக்கு! நாளைக்கு வைத்திருந்தால் வீணாக வாடிப்போய்விடும்" என்றாள் பார்வதி.

அகிலாண்டத்துக்குக் கொஞ்சம் கூட இஷ்டமேயில்லை; சித்தியோ விடமாட்டேன் என்கிறாள். ஆகவே, சற்றுப் பொறுத்து ராக்கடியையும், தாழம் பூவையும் கையில் எடுத்துக் கொண்டு வேண்டா வெறுப்பாகப் பக்கத்து வீட்டுக்குள் நுழைந்தாள். அவள் போன சமயம் ரங்கம் மாமி சமையலறையில் ஏதோ வேலையாயிருந்தாள். அவள் பிள்ளை ராமசந்திரம் தாழ்வாரத்து ஓரமாகச் சாய்மான நாற்காலியில் உட்கார்ந்து ஏதோ படித்துக் கொண்டிருந்தான்.

அடியோசை கேட்டவுடன் நிமிர்ந்து பார்த்தான் அவன். ராமசந்திரத்தைக் கண்ட அகிலாண்டம் தடை கட்டிய பாம்பைப் போல் அங்கேயே நின்றுவிட்டாள். ஒரு நிமிஷம் சுழித்துத் திரும்பிவிடும் உத்தேசத்துடன் ஓடிப் பின்வாங்கினாள்.

அந்த ஒரு நிமிஷமும் அவளை ஒரு குறும்புச் சிரிப்புடன் உற்று நோக்கிக் கொண்டிருந்த ராமசந்திரம், அவள் திரும்ப எத்தனிப்பதைக் கண்டதும், "அம்மா உள்ளே இருக்கிறாள். கூப்பிடுகிறேன்" என்று கனி சென்று சொல்லிவிட்டு, "அம்மா! இங்கே வா! யாரோ வந்திருக்கிறார்கள், பாரு!" என்றான்.

"யார் அது?" என்று கேட்டுக் கொண்டே சமையலறையிலிருந்து வெளியே வந்த ரங்கம் மாமி, அகிலாண்டம் கையில் தாழம்பூவுடன் நிற்பதைக் கண்டதும், "வாடி அம்மா, வா! பார்வதி காலையிலேயே சொன்னாள் — தாழம்பூ வந்திருக்கு, எங்க அகிலாண்டத்துக்குக் கொஞ்சம் தைத்து விடுகிறீர்களான்னு! உள்ளே வந்து உட்காரு! கைக்காரியமாயிருக்கேன்; இந்த நிமிஷத்திலே வந்துவிடுகிறேன்" என்றாள்.

அவள் தயக்கத்தைக் கண்ட ராமசந்திரம் தன்னுடைய நாற்காலியைச் சுவரோரமாக இழுத்துப் போட்டுக் கொண்டான். அகிலாண்டம் தலை குனிந்தபடியே அவனைத் தாண்டி 'விறு விறு' வென்று சென்று சமையலறைக்குள் நுழைந்தாள்.

"வேறே யாருமில்லை; என் பிள்ளை தான் பட்டணத்திலே யிருந்து லீவுக்கு இங்கே வந்திருக்கிறான்" என்று ரங்கம் மாமி அவளிடம் கூறியது ராமசந்திரத்தின் காதில் விழுந்தது. அதைக் கேட்டதும் அவனுக்குச் சிரிப்பு வந்தது.

சற்றுப் பொறுத்து, "மயில் தோகை மாதிரி யிருக்கும் உன் தலை மயிரைப் பின்னிவிடுவதற்கு ஆசையாயிருக்கு! நீ வேணுன்னு தினம் வந்துவிடு; உனக்குத் தலை வாரிப் பின்னிவிடுகிறேன்" என்றாள் ரங்கம் மாமி.

சிறிது நேரத்துக்குப் பிறகு அகிலாண்டம் தலையைச் சாட்டைபோல் பின்னிவிட்டுத் தாழம்பூ தைத்துக்கொண்டு போவதையும், பின்னால் நின்றுகொண்டிருந்த தன் தாயார், "பார்வதி! என் கண்ணே பட்டுவிடும்போலிருக்கு; அந்தம்ச்சப்புறம் குழந்தைக்கு உப்பு மிளகாய் சுத்திப் போடு!" என்று சொல்லிக் கொண்டிருப்பதையும் ராமசந்திரம் கண்டான். அவனுக்கு ஏனோ மீண்டும் சிரிப்பு வந்தது.

4

ஏழெட்டு நாட்கள் கழித்துத் தோட்டத்து மதிலின் படர்ந்திருந்த மல்லிகைக் கொடியில் அரும்பு பறித்துக் கொண்டிருந்தாள் அகிலாண்டம். "பொன்னாச்சியிலிருந்து அப்புறம் தாழம்பூ வரவேயில்லையா? — வெள்ளரிப் பிஞ்செல்லாம் முற்றிப் போச்சா?" என்று மெல்லிய குரலில் கேட்டான் ராமசந்திரம்.

அகிலாண்டம் திரும்பிப் பார்த்தாள். அவளுக்கு வழக்கமாக வரும் துடுக்கான பதில் அன்று ஏனோ வரவில்லை. ஒரு விநாடி கழித்து அவளுடைய முகத்தை நோக்கிய ராமசந்திரம் அப்படியே வாயடைத்துப் போனான். அகிலாண்டத்தின் அகன்ற விழிகளில் கண்ணீர் தளும்பி நின்றது.

தூக்கிவாரிப் போட்டது அவனுக்கு. சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, "அகிலா! என்னை மன்னித்து விடு. சும்மா வேடிக்கைக்குச் சொன்னேன்! உன்னை வருத்தப்படுத்தும் எண்ணமே இல்லை எனக்கு. கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்—நீ அழாதே, அகிலா!" என்றான் மெல்லிய குரலில்.

அழுகைக்கு நடுவிலும் சிரிப்பு வந்தது அகிலாண்டத்துக்கு. "சரிதான்; அப்படியெல்லாம் என்னை யொன்றும் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளாதீர்கள்; யாராவது பார்த்தால் சிரிக்கப் போகிறார்கள்!" என்றாள் கண்ணைத் துடைத்துக் கொண்டே.

"அப்பாடா!" என்று ஒரு பெருமூச்சு விட்டவண்ணம் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு, "என் மாமா ஊரிலிருந்து வந்திருக்கிறார்!" என்றான் ராமசந்திரம்.

"என் சித்தப்பாவும் பொள்ளாச்சியிலிருந்து வந்திருக்கிறார்!" என்றாள் பதிலுக்கு அகிலாண்டம்.

"என்ன கொண்டு வந்திருக்கிறார்?—தாழம்பூவா?"

"இல்லை, வெள்ளரிப் பிஞ்சு!"

இருவரும் களுக்கென்று சிரித்தார்கள்.

ஒரு நிமிஷம் பொறுத்து, "மாமாவும் அம்மாவும் சாயந்திரம் உங்கள் வீட்டுக்கு வருவார்கள்" என்றான் ராமசந்திரம்.

"எதற்கு?"

"உனக்குத் தெரியாதா?"

"தெரியாதே!"

"அதுதான், உன்னுடைய............நம்முடைய......என்னுடைய......"

"ஓகோ, சரிதான்! தெரிந்து கொண்டேன்!" என்று கண்களை மலர விழித்து, அவனுடைய முகத்தை ஒரு தினுசாகப் பார்த்தாள் அகிலாண்டம். சொக்கிப் போனான் ராமசந்திரம்.

அப்புறம் என்ன? அந்த வருஷம் சித்திரை மாதத்திலேயே ராமசந்திரத்துக்கும் அகிலாண்டத்துக்கும் கல்யாணம் நடந்தது.

"என்ன, தூங்கிப் போய் விட்டீர்களா?" என்று கேட்டாள் அகிலாண்டம்.

"யார், நானா? தூங்கவில்லையே!" என்று கண்ணைக் கசக்கிக் கொண்டே நிமிர்ந்து உட்கார்ந்தான் ராமசந்திரம்.

"இந்தாருங்கள், வெள்ளரிப் பிஞ்சை மறந்து விட்டீர்களா?" என்று தட்டை நீட்டினாள் அகிலாண்டம்.

அதற்குள் விழித்துக் கொண்ட பாலா, தன் குஞ்சுக் கையை நீட்டி, "அம்மா, எனக்கு!" என்றான்.

எழுந்து போய் அவனைத் தூக்கிக் கொண்டுவந்து ராமசந்திரத்தின் மடியில் உட்கார வைத்தாள் அகிலாண்டம்.

"என்னடா, கண்ணு! உனக்கும் வெள்ளரிப் பிஞ்சு பிடிக்குமோ?" என்று குழந்தையை ஆசையோடு அணைத்தபடி, ஒரு துண்டை அவன் கையில் கொடுத்தான் ராமசந்திரம்.


"பிடிக்குமென்று சொல்லு!" என்றாள் அகிலாண்டம்.

குழந்தை தன் அரிசிப் பல்லைக் காட்டிச் சிரித்தான். ராமசந்திரமும் அகிலாண்டமும் அவனுடன் சேர்ந்து சிரித்தார்கள்.

அசகாய சூரர்!



"உங்களுக்கென்ன ஸார்! ரெண்டு பசங்களுக்குக் காலேஜிலே 'ஸீட்' வாங்கிக் கொடுத்திருக்கேன்! மனை வெச்சேன்னு, வாடகைக்கு எனக்கு ஒரு வீடு தேடித் தருவது உங்களுக்கு ஒரு பிரமாதமா, என்ன! கொஞ்சம் தயவு பண்ணணும்........"



"இன்னொரு சிம்மாசனம் வெளிப் பார்வைக்கு வெறுமையா யிருந்தது. ஆனால்......"

ஒன்பதாவது சாம்ராஜ்யம்

"கல்கி"

II

இரண்டாவது இராம பட்டாபிஷேகத்துக்கு முதல் நாள் இரவு அயோத்தி நகர வாசிகள் தூங்கியிருக்க மாட்டார்கள் என்று சொன்னேனல்லவா? தூக்கத்துக்குப் பெரிய சத்ரு கவலை. அயோத்தி வாசிகளுக்குக் கவலையினால் தூக்கமில்லாமல் போயிருக்கும். என்ன கவலை என்று கேட்டால், கிஷ்கிந்தாபுரி ராஜ்யத்திலிருந்து அவ்வளவு வானரங்கள் வந்திருக்கின்றனவே, அவை என்ன செய்யப் போகின்றனவோ, மதுவனத்தை அழித்த வானரங்கள் வீட்டுக் கொல்லை வாழைத் தோட்டங்களைச் சும்மா விடுமா என்ற கவலை ஒரு பக்கம் இருக்கலாம். பதினாலு வருஷம் இராஜ்யம் ஆண்டு ருசி கண்ட பரதன் இராஜ்யத்தைச் சரியாகத் திருப்பிக் கொடுக்க வேண்டுமே, கடைசி நிமிஷத்தில் மறுத்து விட்டால் என்ன செய்வது என்ற கவலையுமிருக்கலாம். இராஜ்யத்தைக் கொடுத்தாலும் பரதன் அந்தப் பாதரட்சைகளை இராமனுக்குத் திருப்பிக் கொடுப்பானா, கொடுக்க மாட்டானா என்று சந்தேகப்பட்டிருக்கலாம்.

"இந்தப் பரத மகாராஜா இருக்கிறாரே? இவர் இலேசுப்பட்டவர் அல்ல. இராமர், பாவம், தகப்பனார் சொன்னாரே யென்று காட்டுக்குப் போனார். உடுத்த துணியோடும் அணிந்த பாதரட்சையோடும் புறப்பட்டுப் போனார். காட்டிலே இராமர் முள்ளிலும் கல்லிலும் நடக்க வேணுமே என்று கூட யோசியாமல் இந்தப் பரதர் இராமருடைய இரண்டு பாதரட்சைகளையும் வாங்கிக்கொண்டு வந்து விட்டார். ஒரு பாதரட்சையையாவது கொடுத்துவிட்டு வரக்கூடாதா? இரண்டையும் கொண்டுவந்து விட்டார்! பொல்லாத பரதர் ஆச்சே இவர்! காலைக்கு என்ன செய்கிறாரோ, என்னமோ?" என்று ஒரு அயோத்தி வாசி இன்னொரு அயோத்தி வாசியிடம் சொல்லிக் கவலைப் பட்டிருக்கலாம். யார் கண்டது?

அந்த மாதிரி கவலைகள் ஜூன் மீ 20உ இரவு என்னையும் தொல்லைப் படுத்தின. மறுநாள் காலையில் மவுண்ட்பேட்டன் தம்பதிகள் உண்மையாகவே புறப்பட்டுப் போய் விடுவார்களா என்பது முக்கியமான கவலை. கடைசி நிமிஷத்தில் ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லிக் கொண்டு நின்று விட்டால்?

அப்படி அவர்கள் புறப்பட்டுப் போவதாயிருந்தாலும் அந்தத் தங்கத்தட்டுகளை

விஜமாகவே விட்டு விட்டுப் போவார்களா என்று கவலையாயிருந்தது. இங்கிலாந்தின் அரசர் இந்தியாவுக்குப் பரிசாக அளித்த தங்கத் தட்டுகளையும் அதைச் சேர்ந்த தங்கச் சாமான்களையுந் தான் சொல்லுகிறேன். கொடுக்கிறாற் போல் கொடுத்து விட்டு, மூட்டை கட்டும்போது மறந்தாற் போல் எடுத்து வைத்துக் கொண்டு போய்விட்டால்!

பழைய தேசியப் பிரசார நாட்களிலே ஆங்கிலேயரின் பொன்னாசையைப் பற்றிக் காங்கிரஸ் பிரசங்கிகள் நல்ல நல்ல கதையெல்லாம் சொல்வார்கள்.

"சந்திர மண்டலத்தில் தங்கம் இருக்க முடியாது. ஏன் தெரியுமா? அங்கே மட்டும் தங்கம் இருந்திருந்தால் இங்கிலீஷ்காரன் இதற்குள் அங்கே போய்க் கொடி போட்டிருப்பான்!"


இம்மாதிரியெல்லாம் இங்கிலீஷ்காரரைப் பற்றிப் பேசியும் கேட்டும் பழக்கமானவர்களுக்கு மேற்கண்டவாறு சந்தேகம் உண்டாவது இயல்பேயல்லவா? நூற்றைம்பது வருஷமாக இந்தியாவை ஆண்டு ருசி கண்டவர்கள் உண்மையாகவே காலைக்குக் கடைசித் தடவையாகப் "போகிறோம்" என்று விடை பெற்றுக் கொண்டு போய்விடப் போகிறார்களா? அல்லது ஒரு வேளை கதையிலே வரும் சாஸ்திரிகளின் சம்சாரம் "சண்டை வந்தது, சாஸ்திரிகளே! சாத மூட்டையைக் கீழே வையும்!" என்று சொன்னதைப் போல், நடந்து கொள்வார்களா? காஷ்மீர் சண்டை, ஹைதராபாத் சண்டை என்று சொல்லுவதற்குக் காரணங்களும் இருக்கின்றனவே? இம்மாதிரியான சந்தேகம் பழைய டில்லி நகரின் முனிசிபாலிடி அங்கத்தினர்களுக்கும் ஒரு வேளை இருந்ததோ என்னமோ தெரியவில்லை. பல பேருக்கு முன்னிலையில் மவுண்ட் பேட்டன் தம்பதிகள் நிச்சயம் புறப்பட்டுப் போகிற விஷயத்தைச் சாட்சி வைத்து ஊர்ஜிதப் படுத்திக் கொண்டுவிட ஏற்பாடு செய்திருந்தார்கள்!

20ஆம் மாலை பழைய தில்லியில் உள்ள காந்தி மைதானத்தில் மவுண்ட் பேட்டன் தம்பதிகளுக்குப் பிரிவுபசாரம் நடத்துவதற்காக ஒரு பொதுக் கூட்டம் ஏற்படுத்தியிருந்தார்கள். என்னையும் சேர்த்து அந்தப் பொதுக் கூட்டத்தில் மொத்தம் 1,16,666⅔ ஜனங்கள் வந்திருந்தனர். இவ்வளவு கணக்காக ஜனத்தொகையை எப்படிக் கண்டு பிடித்தேன் என்று நேயர்களுக்கு வியப்பாயிருக்கலாம். மறுநாள் காலையில் தில்லியில் வெளியாகும் மூன்று தினப் பத்திரிகைகளை வாங்கிப் பார்த்தேன். ஒரு பத்திரிகையில் மேற்படி கூட்டத்துக்கு வந்திருந்தவர்கள் இரண்டு லட்சம் பேர் என்றும், இன்னொன்றில் ஒரு லட்சம் பேர் என்றும், மூன்றாவது பத்திரிகையில் ஐம்பதினாயிரம் பேர் என்றும் போட்டிருந்தது. மூன்றையும் கூட்டி மூன்றால் வகுத்துச் சராசரி கண்டு பிடித்த ஒரு லட்சத்துப் பதினாயிரத்துச் சொச்சம் என்று நிச்சயித்தேன்.

கணக்கு எப்படியிருந்தாலும் மொத்தத்தில் கூட்டம் அபாரமாயிருந்தது. அந்த மாபெரும் ஜனக் கூட்டத்தில் மவுண்ட் பேட்டன் தம்பதிகளும் பண்டித ஜவஹர்லால் நேருவும் பிரசன்னமானதும் ஒரே கரகோஷமும் ஜய கோஷமுமாயிருந்தது. கோஷம் முழுவதும் ஜவாஹர்லால்ஜிக்கா அல்லது மவுண்ட் பேட்டன் தம்பதிகளுக்கும் அதில் பங்குண்டா என்ற சந்தேகம் சிறிது ஏற்பட்டது. மவுண்ட் பேட்டன் தம்பதிகள் மட்டும் மேடையின் முகப்பில் வந்து நின்று ஜனங்களைப் பார்த்துக் கும்பிட்டதும் கூட்டத்தில் எழுந்த கோஷமானது சந்தேகத்தை நிவர்த்தி செய்தது. ஜனங்களின் பலமான கரகோஷத்தோடு "பண்டிட் மவுண்ட் பேட்டனுக்கு ஜே!" என்னும் கோஷமும் கலந்து எழுந்தது.

"பண்டிட் மவுண்ட் பேட்டன்" என்று டில்லி மக்கள் கோஷமிடுவதில் இரண்டு கருத்துக்கள் அடங்கியிருக்கின்றன. முதலாவது, மவுண்ட் பேட்டன் தம்முடைய ஆட்சி காலத்தில் இந்தியரைப் போலவே நடந்து கொண்டிருக்கிறார்,—இந்தியரைப் போலவே இந்தியாவின் சுதந்திரத்தை ஸ்தாபிப்பதில் ஊக்கம் காட்டியிருக்கிறார் என்பது. இரண்டாவது, பண்டித ஜவா

பிரிட்டிஷ் அரசர் இந்தியாவுக்கு அளித்த தங்கப் பரிசுகள்





கண்ணீரும் கம்பலையுமாய்......

ஹர்லாலுக்கும் மவுண்ட் பேட்டன் தம்பதிகளுக்கும் ஏற்பட்டிருந்த அந்நியந்த கட்பை அது குறித்தது.

•   •   •

இந்த இடத்தில் ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். லார்ட் மவுண்ட்பேட்டன் இந்தியா தேசத்தைப் பிரித்துச் சுதந்திர அரசாங்கத்தை ஏற்படுத்துவதில் ரொம்பவும் அவசரம் காட்டினார் என்றும், அதனாலேதான் பஞ்சாபில் விபரீதங்கள் நடந்தனவென்றும், லட்சக் கணக்கான ஜனங்கள் இறந்தோ அங்கஹீனமடைந்தோ போனார்கள் என்றும் பாகிஸ்தான் நிதி மந்திரி குலாம் மூகம்மது என்பவர் இங்கிலாந்தில் சென்ற வாரத்தில் சொன்னார்.

நான் விசாரித்தவரையில் உண்மை இதற்கு நேர் விரோதமானதென்று தெரியவந்தது. அவ்வளவு அவசரப்படாமல் நிதானமாகக் காரியத்தை நடத்தியிருந்தால் அதன் பலனான விபரீதம் இன்னும் பன் மடங்கு பயங்கரமாயிருந்திருக்கும். காரணம் இதுதான் :—

1942-ம் வருஷத்து இயக்கம், ஐ. என். ஏ. இயக்கம் இவற்றினால் கலகலத்துப் போயிருந்த இந்தியாவின் சைன்யத்தில் முஸ்லிம் லீக் தலைவர்களின் துவேஷப் பிரசாரம் மிகப் பயங்கரமான பலனை உண்டாக்கியிருந்தது. எரிமலைக்கு உள்ளே நெருப்புக் குழம்பு பொங்கிக் கொண்டு எந்த நிமிஷமும் வெடிக்கத் தயாராயிருக்குமே, அத்தகைய நிலைமையில் இந்திய சைன்யம் இருந்தது. இந்திய சைன்யத்தில் முஸ்லிம் வீரர்கள் ஏறக்குறைய 100-க்கு 40 பேர் வீதம் இருந்தார்கள். எந்த நிமிஷமும் முஸ்லிம் பகுதி சைன்யமும் மற்ற ஹிந்து — சீக்கியத் தொகுதி சைன்யமும் தங்களுக்குள் சண்டை தொடங்கலாம் என்ற மிகப் பெரிய அபாயம் ஏற்பட்டிருந்தது. இன்னும் கொஞ்ச நாள் தாமதித்திருந்தால் அப்படி நேரிட்டிருக்கலாம். அப்புறம் யார் அதைத் தடுக்க முடியும்? இங்கிலீஷ் சைன்யங்களோ ஏறக் குறையக் கப்பலேற்றியாகி விட்டது. இந்த நிலைமையில் சைன்யங்களுக்குள் சமூகத் துவேஷச் சண்டை ஏற்பட்டிருந்தால் இந்தியா முழுவதிலும் அராஜகம் பரவியிருக்கும். பிற்பாடு அமைதியும் நல்லரசாட்சியும் ஏற்பட எத்தனையோ காலம் ஆகும். அந்த நிலையில் இந்தியா சுதந்திரம் அடைந்தாலும் அடைந்த சுதந்திரத்தை நிர்வகிப்பது அசாத்தியம்.

வேவல் ஆட்சியின்போது முதன் முதலாகப் பண்டித ஜவாஹர்லாலின் மந்திரி சபை பூரண அதிகாரத்துடன் ஏற்பட்டது. ஆரம்பத்தில் அதில் முஸ்லிம் லீகர்கள் சேரவில்லை. பிறகு மகானுபாவர் வேவல் பெரு முயற்சி செய்து லியாகத் அலிகான் முதலியவர்களைச் சேர்த்து விட்டார். மத்திய சர்க்காரில் முஸ்லிம் லீகர்கள் நுழைந்த காரணத்தினால் இந்தியாவின் சிவில் நிர்வாகத்திலும் சமூகத்துவேஷம் பரவலாயிற்று. போலீஸ் உள்படச் சகல இலாகாக்களும் சின்னாபின்னப் பட்டு வந்தன. இதையெல்லாம் பார்த்துத்தான் நமது மாபெரும் தேசத் தலைவர்கள் இந்தியாவைப் பிரித்துத் தொலைப்பதற்கு இணங்கினார்கள். பிரிப்பது என்று தீர்மானித்த பிறகு நாள் ஆக ஆக நிலைமை சீர்கேடு அடையும் என்று உணர்ந்து பிரிவினையைக் காரியத்தில் கொண்டுவர அவசரப்பட்டார்கள். அந்த அவசரத்தின் அவசியத்தை உணர்ந்து தான் மவுண்ட் பேட்டனும் துரித காலத்தில் காரியத்தை நடத்தினார்.

•   •   •

பாருங்கள்! இந்த ஆங்கிலேயர் கொஞ்சமும் விதரணை தெரியாதவர்கள். ஒரு காரியத்தைச் செய்வதற்கு நாள் கிழமை நட்சத்திரம் ராகுகாலம் ஒன்றும் அவர்கள் பார்ப்பதில்லை. அதையெல்லாம் பார்க்கும் நேரத்தில் காரியத்தையே செய்து முடித்து விடுகிறார்கள்! ராபர்ட் கிளைவ், வாரன் ஹேஸ்டிங்ஸ் ஆகியவர்கள் இந்தியாவுக்குப் புறப்பட்டபோது நாள் நட்சத்திரம் நல்ல வேளை பார்த்துக் கொண்டா புறப்பட்டார்கள்? அப்படிப் புறப்பட்டிருந்தால் நூற்றைம்பது வருஷம் ஆண்ட ராஜ்யத்தை இப்படி

அகாரணமாகவும் அநாவசியமாகவும் கைவிட்டு விட்டுப் போகும்படி நேரிட்டிருக்குமா? சர்ச்சில் இப்போது 'லபோ' 'லபோ' என்று அடித்துக் கொள்கிறாரே, அதில் என்ன பிரயோஜனம்? ராபர்ட் கிளைவுக்கும் வாரன் ஹேஸ்டிங்ஸுக்கும் அவர் நாள் பார்த்துக்கொண்டு புறப்படும்படி சொல்லியிருக்க வேண்டும்! அப்போது பேசாமலிருந்துவிட்டு,—பேசாமல் மட்டும் என்ன? பிறக்காமலே இருந்து விட்டு, — இப்போது சர்ச்சில் அலறுவதில் என்ன பிரயோஜனம்?

கிளைவும் ஹேஸ்டிங்ஸுந்தான் நல்ல வேளை பார்த்துக் கொண்டு புறப்படவில்லை. லார்ட் மவுண்ட் பாட்டன் திரும்பிப் போகும் பிரயாணத்துக்காவது நல்ல வேளை பார்த்துக் கொண்டு புறப்பட்டாரா? அதுவும் இல்லை! 21ந் தேதி திங்கட்கிழமை காலை 7-30க்குச் சரியான கொழுத்த ராகுகால வேளையில் மவுண்ட் பேட்டன் தம்பதிகள் புறப்படுவதாயிருந்தது! இது என்னுடைய மனக் கலக்கத்தை அதிகமாக்கிற்று. அவர்கள் சரியாகப் புறப்பட வேண்டுமே, ஆகாச விமானக்கூடம் வரையில் போய்ச் சேர வேண்டுமே, விமானத்தின் என்ஜின் மக்கர் பண்ணாமல் கிளம்ப வேண்டுமே என்று மனது எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியது. ராகுகாலத்திலே தான் கிளம்புகிறார்கள்,—நாமாவது சகுனத் தடையாக எதிரில் போகாமல் இருப்போம்,—என்று வீட்டிலேயே இருந்து விட்டேன். எனினும் மவுண்ட் பேட்டன் தம்பதிகள் உண்மையிலேயே கிளம்புகிறார்களா என்று பார்த்துக் கொண்டு வருவதற்கு ஆசாமியை அனுப்பினேன். அனுப்பிய ஆசாமி விமானக்கூடம் வரையில போய்த் திரும்பினார். மவுண்ட் பேட்டன் தம்பதிகள் உண்மையிலேயே புறப்பட்டுச் சென்று விமானத்திலும் ஏறிப் பறந்து போய் விட்டார்கள் என்று தெரிவித்ததுடன், அதற்கு அத்தாட்சியாகப் போட்டோ பிடித்துப் படமும் கொண்டு வந்தார். அப்போது தான் எனக்கு நிச்சயப்பட்டது; மனதும் நிம்மதியடைந்தது.

போய்ப் பார்த்து வந்த மனிதர் மவுண்ட்பேட்டன் தம்பதிகளின் வருத்தத்தைப் பற்றி ரொம்பவும் சொன்னார். அழமாட்டாக் குறை தானாம். லேடி மவுண்ட்பேட்டன் கண்ணீரும் கம்பலையுமாய்த் தோன்றினாராம். தம்பதிகள் மாற்றி மாற்றிப் பிரதம மந்திரியின் கையையும் புது கவர்னர் ஜெனரலின் கையையும் பிடித்துக் குலுக்கினார்களாம். மற்ற மந்திரிகளின் கையைப் பிடித்துக் குலுக்கினார்களாம். உத்தியோகஸ்தரின் கரங்களைப் பிடித்துக் குலுக்கினார்களாம். குதிரை வீரர்களின் கைகளை எட்டிப் பிடித்துக் குலுக்கினார்களாம். குதிரைகளுக்குக் கைகள் இருந்தால் அவற்றின் கைகளைப் பிடித்தும் அவர்கள் குலுக்கியிருப்பார்களாம்!

உண்மைதான்; பிரதம மந்திரி நேரு, கவர்னர் ஜெனரல் ராஜாஜி முதலியவர்களுடன் பழகி விட்டால் பிரிவது கஷ்டமாகத்தான் இருக்கும். இதைப் பற்றிப் பொய்யாமொழிப்புலவர் இரண்டாயிரம் வருஷத்துக்கு முன்பே சொல்லி யிருக்

கடைசிக் கை குலுக்கல்......





இந்தியாவின் பிரதம மந்திரி

பண்டித ஜவாஹர்லால் நேரு

அவர்களின் முன்னிலையில்

ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி

அவர்களின் சங்கீதக் கச்சேரி

★

சங்கீத ரத்ன ஸ்ரீ சௌடய்யா ... வயலின்
கல்பாத்தி ஸ்ரீ ராமநாதன் ... மிருதங்கம்

★

24-7-48 சனிக்கிழமை இரவு 9-மணிக்கு சென்னை மவுண்ட் ரோடு

ராஜாஜி ஹாலில்

டிக்கட்டுகள்: ரூ. 100/- ரூ. 25/- ரூ. 10/-

ஆதரவாளர்களுக்கும் நன்கொடையாளருக்கும்
சில ஸீட்டுகள் ஸ்பெஷலாக ரிசர்வ் செய்யப்படும்.

கச்சேரியில் வசூலாகும் தொகை பூராவும் பிரதம மந்திரி நேருவின் அகதிகள் கஷ்ட நிவாரண நிதிக்குப் பண முடிப்பாக பண்டித ஜவாஹர்லால் நேரு அவர்களிடம் சமர்ப்பிக்கப்படும்.

டிக்கட்டுகள் கீழ்க்கண்ட இடங்களில் கிடைக்கும்:

1. "ஹிந்து" ஆபீஸ், மவுண்ட் ரோடு
2. "கல்கி" ஆபீஸ், கீழ்ப்பாக்கம்
3. மயிலை சங்கீத சபா, மயிலாப்பூர்
4. நேவல் ஆபீஸ், போர்ட் செயிண்ட் ஜார்ஜ்
5. ராஜாஜி ஹால், மவுண்ட் ரோடு

என். கே. ஜெயின், கௌரவ காரியதரிசி
பிரதம மந்திரி நேருவின்
அகதிகள் கஷ்ட நிவாரண நிதிக் கமிட்டி

கிறார். "நல்லவர்களோடும் அறிவாளிகளோடும் சிநேகம் செய்வது ஆபத்து; ஏனெனில் அவர்களைப் பிரிய நேரிடும் போது மனது ரொம்பவும் துன்பம் அடையும். தயவர்களோடும் மூடர்களோடும் பழகுவதில் ஓர் அநுகூலம் இருக்கிறது: அவர்களைப் பிரியும் போது மனதிற்குக் கஷ்டம் ஒன்றும் நேர்வதில்லை" என்ற கருத்துடன்

"பெரிதினிது பேதையார் கேண்மை,
பிரிவின்கண்
பீழை தருவதொன்று இல்!"

என்று திருவள்ளுவர் கூறினார். அவருடைய வாக்கு இரண்டாயிரம் வருஷத்துக்குப் பின்பும் உண்மையாகவே இருக்கிறது. லார்ட் மவுண்ட் பேட்டன் இந்தியாவின் கவர்னர் ஜெனரலா யிருந்ததற்குப் பதிலாகப் பாகிஸ்தான் கவர்னர் ஜெனரலா யிருந்தால் இந்தப் பிரிவுத் துயரம் மவுண்ட் பேட்டன் தம்பதிகளைப் பீடித்திரா தல்லவா?

• • •

காலை 10 மணியிலிருந்தே கவர்னர் ஜெனரல் மாளிகையின் தர்பார் மண்டபத்தில் அழைக்கப்பட் டிருந்த பிரமுகர்கள் வரத் தொடங்கி விட்டார்கள். பிரதம மந்திரி நேரு தமது செல்வக் குமாரி இந்திரா நேருவுடன் வந்தார். காங்கிரஸ் தலைவர் பாபு ராஜேந்திரப் பிரஸாத், இந்திய சட்ட சபைத் தலைவர் மவ்லங்கர், மற்ற மந்திரிகள் வந்தார்கள். டாக்டர் அம்பேத்கரும் ஸ்ரீ காட்கிலும் புதுமணம் புரிந்த மனைவிமார் சகிதமாக வந்தார்கள். அமெரிக்க, சீன, பர்மிய ஸ்தானாதிபதிகள் வந்தார்கள். பெரிய உத்தியோகஸ்தர்களும் அவர்களுடைய பத்தினிமார்களும் விஜயம் செய்தார்கள்.

சரியாக மணி 10-30 அடித்ததும் வாத்திய கோஷங்கள் முழங்கின. இராணுவ உடை தரித்த மெய் காவலர்கள் முன்னும் பின்னும் புடைசூழ்ந்து வரப் புது கவர்னர் ஜெனரல் மண்டபத்தில் பிரவேசித்தார். பிரதம மந்திரி ஜவாஹர்லால், காங்கிரஸ் அக்கிராசனர் பாபு ராஜேந்திரப் பிரஸாத், இந்திய சட்ட சபைத் தலைவர் மவ்லங்கர், பெடரல் கோர்ட் தலைமை நீதிபதி கனம் கனியா ஆகியவர்கள் உள்படத் தர்பார் மண்டபத்தில் இருந்தவர் அனைவரும் புது கவர்னர் ஜெனரல் வரும்போது எழுந்து நின்று மரியாதை செய்தார்கள். ராஜாஜி உட்கார்ந்த பிறகு எல்லாரும் உட்கார்ந்தார்கள். பிறகு ராஜாஜி விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொண்டபோது மறுபடியும் எழுந்து நின்றார்கள். ராஜாஜியின் அற்புதமான பிரசங்கத்தை உட்கார்ந்து கேட்டார்கள். அதிலே ராஜாஜி தம் சகாக்களைப் பற்றிக் குறிப்பிட்ட போது எல்லாருக்கும் மெய் சிலிர்த்தது. "இந்திய அரசாங்கத்தை நடத்தும் என்னுடைய சகாக்களுக்கு இனி தேச நலத்தையும் தேசத்தின் கௌரவத்தையும் தவிர வாழ்க்கையில் வேறு எந்தவித சிரத்தையும் கிடையாது" என்று ராஜாஜி கூறினார். எவ்வளவு உண்மை! ஆனாலும் இதை இவ்வளவு நன்றாக மனதில் படும்படி வேறு யாரும் கூறியிருக்க முடியாது.

பிரசங்கம் முடிந்த பிறகு "ஜனகண மன" என்னும் தாகூரின் தேசிய கீதத்தை வாத்தியங்கள் முழங்கின. முப்பத்திரண்டு குண்டுகள் 'டும்' 'டும்' என்று எதிரொலி செய்து ஒலித்தன.

ராஜாஜி மண்டபத்தை விட்டுப் போவதற்குக் கிளம்பியபோது மறுபடியும் அனைவரும் எழுந்து நின்றார்கள்.


'படார்' என்று ஒரு பெரிய சத்தம் தர்பார் மண்டபத்துக்குள்ளே கேட்டது. ஜனவரி 30உ சம்பவம் எல்லாருக்கும் ஞாபகம் இருந்தபடியால் சிலர் கொஞ்சம் திடுக்கிட்டுப் போனார்கள்: ஆனால் சீக்கிரத்தில் விஷயம் தெரிந்தது.

மின்சார தீபத்தைத் தாங்கியிருந்த ஒரு ஸ்தம்பத்தின்மீது யாரோ ஒருவர் சாய, அது தடார் என்று கீழே விழுந்து, பல்பு உடைந்ததினால் ஏற்பட்ட சத்தம் அது. டில்லியின் எட்டாவது சாம்ராஜ்யம் அதாவது பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் சமாப்தி ஆனதற்கு அந்த ஸ்தம்ப வீழ்ச்சியும் பல்பு நொறுங்கியதும் அறிகுறிகள் என்று ஒருவர் சொன்னார். "ரொம்ப சரி!" என்று பலரும் ஆமோதித்தார்கள்.

தர்பார் மண்டபத்தின் பிரதான மேடையில் இரண்டு சிம்மாசனங்கள் போடப் பட்டிருந்தன. பிரிட்டிஷ் வைஸ்ராய்—கவர்னர் ஜெனரல்கள் தம் பதியாகத்தான் வருவார்கள். தர்பார் வைபவங்களில் இருவரும் இரண்டு சிம்மாசனங்களிலும் அமர்வார்கள்.

ஆனால் இந்த வைபவத்தின் போது ஒரு சிம்மாசனத்துக்குத் தான் உபயோகம் இருந்தது. இன்னொரு சிம்மாசனம் வெளிப்பார்வைக்குக் காலியாகவே தோற்றமளித்தது. ஆனால் என் மனக் கண்ணின் முன்னால் அந்த இரண்டாவது சிம்மாசனத்தில் காந்தி மகான் அமர்ந்து பெரும் பொறுப்பை ஏற்கும் ராஜாஜிக்கு ஆசி கூறுவது போலவும் "எந்த இலட்சியத்துக்காக நான் உயிர்த் தியாகம் செய்தேனோ அதை மறந்து விடாதீர்கள்!" என்று சபையோரைப் பார்த்துச் சொல்வது போலவும் தோன்றியது.

புதிய 40 B. H. P. "பௌலர்" வெர்டிகல் 1100 R. P. M. டீஸல் ஆயில் என்ஜின்களும், S. L. 3" கிர்லோஸ்கர் பம்புகளும், இங்கிலீஷ் 8 H. P. மோட்டாருடன் இணைக்கப்பட்டுள்ள 4"×3" பம்பு செட்டுகளும் தற்சமயம் கைவசமுள்ளன.



விவரங்களுக்கு :

ஸாம்ஸன் & கோ.

என்ஜின், எலக்ட்ரிக் மோட்டார், பம்புஸெட் வியாபாரிகள்

8/22, பிராட்வே, மதராஸ்

கோல்கேட்

சுவாசத்தையும் பற்களையும் சுத்தப்படுத்துகின்றது


கோல்கேட் பவுடரோ அல்லது கிரீமோ உங்கள் இஷ்டப்படி வாங்கிக் கொள்ளலாம்.

★ உங்களது பற்களைச் சுத்தம் செய்வதுடன் உங்களது சுவாசத்தையும் சுத்தமாக்குகிறது.

★ கோல்கேட்டிலுள்ள மிருதுவான பளபளப்பூட்டும் பொருளானது எனாமலை மிக எளிதாகவும், கெடு விளைவிக்காமலும் பரிபூரணமாகவும் சுத்தப் படுத்துகின்றது.

★ கோல்கேட் ஒரு சிறந்த உயர் ரகப் பொருள், மிருகக் கொழுப்பு அற்றது.

★ பல் வைத்தியர்களால் சிபார்சு செய்யப் படுவது. விலை குறைவு-அதிக நாட்கள் வரும்.



வட்ட மேஜை

மதுரை.
2—7—48

விளையாடுவதற்கு இடம்

"கல்கி" மாமா அவர்களுக்கு,

தங்கள் வட்ட மேஜையில் என்னைப் போன்ற குழந்தைகளுக்கும் இடம் உண்டு என்று நினைக்கிறேன்.

சிறுவர்கள் விளையாட வேண்டும், தேகப் பயிற்சி செய்ய வேண்டும் என்றெல்லாம் பெரியவர்கள் சொல்கிறார்கள். பாரதியாருடைய பாட்டில் கூட "ஓடி விளையாடு, பாப்பா!" என்று சொல்லப் பட்டிருக்கிறது. எல்லாம் சரிதான். ஆனால் எங்களுக்கு விளையாட இடம் எங்கே இருக்கிறது? சாயங்காலம் பள்ளிக்கூடம் விட்டதும் வீட்டுக்கு வந்து என் சின்னத் தம்பிகளுடனும் மற்றவர்களுடனும் வாசலில் பந்தோ அல்லது வேறு ஏதோ வைத்துக் கொண்டு ஓடி விளையாடினால், உள்ளேயிருந்து "அட, கடன்காரா! வாசலிலே இப்படிக் குழந்தைகளோடு ஓடினால் மோட்டார், வண்டி ஏதாவது நசுக்கி விட்டால் என்ன பண்ணுவது? உள்ளே வாடா!" என்று வைகிறார்கள். உள்ளே போய் விளையாடினால், "ஏண்டா, இப்படிப் பந்தை விட்டெறிஞ்சால், படமெல்லாம் உடைஞ்சு போகாதா? வீட்டுக்குள்ளேயே வந்து கழுத்தை அறுக்கிறீர்களே!" என்கிறார்கள். மாடிக்குப் போய் விளையாடினால், "டேய், தடியா! மாடி இடிஞ்சு விழுந்துடப் போறது? இப்படிக் குதிக்கிறாயே! கீழே இறங்கி வா, காலை ஒடிச்சுப்பிடறேன்!" என்கிறார்கள்.



நாங்கள் எங்கேதான் போய் விளையாடுவது? உங்கள் ஊரிலேயாவது சமுத்திரக் கரை இருக்கு. சாயங்கால வேளையிலே எல்லாரும் அங்கே போய் விளையாடுவார்கள். இங்கே அதுவும் இல்லை. இந்த ஊரிலே இப்போது இரண்டு பார்க் இருக்கு. ஒன்று கூட எங்களுக்குப் பிரயோஜனம் இல்லை. அழகாய்ப் புல் தரை கிடையாது. ஒரே ஒரு மரம் இருக்கு. அது நிறையக் காக்காய் அடைந்து கொண்டு கீழே எல்லாம் அசிங்கமாய் இருக்கிறது. நாங்கள் என்ன செய்வது?

அம்பி.

ஜப்பல்பூர்
25—6—48

அழிகளா இல்லை?

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

இப்போதெல்லாம் ரயில் புறப்படுவதற்கு ஒரு மணிக்கோ அல்லது அரை மணிக்கோ முன்புதான் டிக்கட் கொடுக்க ஆரம்பிக்கிறார்கள். பாதி வரிசை முடிவதற்குள்ளே டிக்கட் காலியாகிவிடுகிறது, அல்லது ரயில் கிளம்பிவிடுகிறது. யாராவது ஒருவருடைய குழந்தையோ மனைவியோ அசௌக்கியமாக இருந்து நிச்சயமாக அந்த வண்டியில் போக வேண்டும் என்று நினைத்தால், இந்த 'க்யூ' வரிசையை நம்பிக்கொண்டிருக்க முடியுமா? எப்படியோ ஆளைத் தேடிப் பணத்தைக் கொடுத்தாவது டிக்கட் வாங்கிவிடுகிறார்கள். தேவையான முறையில் டிக்கட் கிடைக்கும்படி செய்தால் யாரும் லஞ்சம் கொடுக்க மாட்டார்கள்.

லக்கேஜ் பதியுமிடத்தை எடுத்துக் கொள்வோம். இங்கேயும் வண்டி கிளம்புவதற்குச் சிறிது நேரத்துக்கு முன்புதான் லக்கேஜைப் பதிய ஆரம்பிக்கிறார்கள். ஒருவனிடம் நிறைய சாமான்கள் இருந்தால், அவன் எப்போது க்யூ வரிசையில் நின்று டிக்கட் வாங்குவது? எப்போது தன் சாமான்களைப் பதிவு செய்வது? எப்போது வண்டியில் இடம் பார்த்து ஏறுவது? முதலிலேயே பதிவு செய்வதற்கோ அல்லது 'க்யூ' வரிசையில் நிற்காமல் டிக்கட் கிடைப்பதற்கோ பணம் கொடுத்துத் தனக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொள்கிறான். அவன் எவ்வளவுதான் லஞ்சம் கூடாது என்ற திட சித்தனாக இருந்தாலும் சந்தர்ப்பக் கோளாறுகளால லஞ்சம் கொடுக்க நேரிடுகிறது.

தற்போதைக்கு அதிகமான ரயில்களை விட முடியாதிருக்கலாம். ஆனால் இம்மாதிரியான லஞ்சத்தைத் தடுக்கக்கூடவா வழிகள் இல்லை? 24 மணி நேரமும் டிக்கட் கொடுக்கும்படியாகவோ அல்லது லக்கேஜ்களை எப்போதும் பதியும்படியாகவோ உத்தரவு போட்டால் இது மாதிரியான லஞ்சம் ஒழிந்துவிடுமே!

"பொது ஜனம்".

மயிலாப்பூர்
4—7—48

ஏன் பயப்பட வேண்டும்?

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

'பெண்கள் முன்னேற்றம்' 'பெண்கள் முன்னேற்றம்' என்று கொஞ்ச நாட்களுக்கு முன் எங்கும் ஒரே பேச்சாக இருந்தது. அதன்படியே பெண்கள் பலர் படித்தும், பாடியும், வேலையில் சேர்ந்தும் முன்னேற்ற மடைந்தார்கள். பெண்கள் முன்னேற்றத்தில் வெகு ஊக்கம் கொண்டவர்கள் போலக் நடித்த ஆண்களே இப்பொழுது, "ஐயோ! அந்தப் பெண் பி. ஏ., படிச்சிருக்கு! அது வேண்டாம். இந்தப் பெண் எப். ஏ., படிச்சிருக்கு, வேண்டாம்" என்று அவர்களை வாழ்க்கைத் துணைவியாய் ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். பி. ஏ., படித்தால் இரண்டு கொம்பு முளைத்து விடுமா? அல்லது அடங்கி ஒடுங்கி நடக்கமாட்டார்கள் என்ற பயமா? இதனால் எத்தனையோ பெண்கள் தங்களுக்கு எங்கே விவாகமே ஆகாமல் இருந்து விடுமோ என்று பயந்து படிப்பை அரை குறையாக நிறுத்தி விடுகிறார்கள். "ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோம் இந்த நாட்டிலே" என்ற பாட்டைப் பொய்யாக்குகிறார்கள் இந்த ஆண்பிள்ளைகள்.



ஆண்கள் எதற்காகப் படித்த பெண் வேண்டாம், உத்தியோகம் செய்யும் பெண் வேண்டாம் என்று பயப்படுகிறார்கள் என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

எஸ். ராஜம்.

ஈரோடு,
4—7—48

சர்க்கார் கவனிக்குமா?

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

மோட்டார் சொந்தக்காரர்கள் முன் போல வேண்டிய தங்களுக்குத் தேவையான அளவு பெட்ரோலை வழக்கம்போல் அதிக விலை கொடுத்து வாங்கி உபயோகித்து வருகிறார்கள். கண்ட்ரோலைக் கடுமையாக்கி, மிகவும் நெருக்கிப் பிடித்தால் "வியாதி" தீருவதற்குப் பதில், தவறான முறையை அதிகரிக்கிறது.

ஒவ்வொரு காரிலும், சரியோ அது செல்லும் தூரத்தைக் குறிக்க மீட்டர் இருக்கிறது. ஒவ்வொரு காரும் ஒரு காலன் பெட்ரோலுக்கு ஓடும் அதிக பட்ச சராசரி தூரமும் தெரிந்த விஷயம். ஆதலால் ஒருவருக்கு ஒரு மாதத்தில் கொடுக்கப்படும் பெட்ரோலுக்கு, இவ்வளவு மைல்கள்தான் போகக்கூடும் என்று நிர்ணயிக்க முடியுமல்லவா? இதைக்கொண்டு ஒவ்வொரு மாதமும் பெட்ரோலுக்கு மனுச் செய்து கொள்ளும் பொழுது, சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர் அவரவருக்குக் கொடுக்கப்பட்ட பெட்ரோலின்தான் கார் ஓடியிருக்கிறதா அல்லது அதிகம் போயிருக்கிறதா என்று தணிக்கை செய்து திருப்திகரமாக இருந்தால் மட்டிலும் மேற்கொண்டு பெட்ரோல் வழங்கலாம். மைல்-மீட்டர் சரியாக வேலை செய்யாத எந்தக் காருக்கும் பெட்ரோல் வழங்கக் கூடாது. டிராபிக் கான்ஸ்டேபிள்கள் மோட்டாரின் லைசென்ஸ் முதலியவைகளை அவ்வப்பொழுது தணிக்கை செய்து வருவதுபோல், மைல்மீட்டரும் சரியாக வேலை செய்கிறதா என்று கண்காணித்துக் கொள்ள வேண்டும்.



எத்தனை லாரி சொந்தக்காரர்கள் தமக்குக் கிடைக்கும் பெட்ரோல் கூப்பன்களை அதிக விலைக்கு விற்றுவிட்டு, லாரிகளை வெளியில் எடுக்காமலேயே ஜீவனம் நடத்துகிறார்கள் தெரியுமா? பொதுஜன சர்க்கார் இதைக் கவனிக்குமா?

அ. கோபாலகிருஷ்ணன்.

மேலநத்தம்
17-6-48

பள்ளிக்கூடச் சம்பளங்கள்

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு.

1946-47-ல் பள்ளிக்கூடங்களில் வருஷத்தில் எட்டுத் தவணை சம்பளத்தை வசூலித்தனர். ஆனால் தற்போது பத்துத் தவணை வசூலிக்கின்றனர். முன்பு முழுச் சம்பளம் கொடுக்கும் மாணவன் மிடில் ஸ்கூல் வகுப்புகளில் வருஷத்திற்கு 22 ரூபாய் செலுத்துவான். ஆனால் இப்போது 40 ரூபாய் செலுத்த வேண்டியிருக்கிறது. முன்பு ஹைஸ்கூல்களில் படிக்கும் ஒரு மாணவன் 42 ரூபாய் செலுத்துவான் இப்போது 70 ரூபாய் செலுத்த வேண்டியிருக்கிறது. இது தவிரப் புஸ்தகங்கள் வாங்கப் பணம், ஸ்பெஷல் பீஸ் முதலானவைகள் வான அளவை எட்டிக் கொண்டிருக்கின்றன.

அரசாங்கத்தின் புள்ளி விவரங்களிலிருந்து எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைக்கு முன்னைவிட அதிகமான மாணவர்கள் ஆஜராயிருக்கலாம். ஆனால் ஏழை, நடுத்தர வர்க்கப் பெற்றோர்கள் எவ்வளவு அல்லல்களுக்குட்பட்டுத் தங்கள் பையன்களைக் கல்வி பயிலக் கலாசாலைகளுக்கு அனுப்புகிறார்கள் என்பதை நமது அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அத்துடன் நியாயமான சம்பளத்தை மாணவர்களிடமிருந்து வசூலிக்கும்படிச் செய்து ஏழை மக்களின் கல்வி சம்பந்தப்பட்ட துயரைத் தீர்க்குமென்று மனப்பூர்வமாய் நம்புகிறேன்.

எம். சீதாராமன்.

கும்பகோணம்
17-6-48

பஞ்சம் தவிர்க்கும் வழி

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

தற்பொழுது நிலைத்திருக்கும் உணவுப் பஞ்சத்தைப் போக்கச் சென்னை சர்க்கார் உணவுக் களஞ்சியமாகத் திகழும் தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ள நிலங்களைத் தாங்களே மிராசுதார்களிடமிருந்து நீண்ட காலக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டு, தாங்களே தங்களுக்குக் கீழ் பண்ணையாட்களை நியமித்து அவர்களுக்கு மாதச் சம்பளமாகவோ அல்லது வருஷத்திற்கு நெல்லாகவோ சம்பளம் கொடுத்து, மேற்படியார்கள் வேலையைக் கண்காணிப்பதற்குச் சில சில்லறை அதிகாரிகளையும் ஆபீசர்களையும் நியமித்து, அல்லது தற்போதுள்ள தாலுக்கா சப்ளை ஆபீசர், ஜில்லா சப்ளை ஆபீசர், தானியக் கொள்முதல் ஆபீசர் இவர்களைக் கிராமங்களில் ஆபீஸை வைக்கும்படி செய்து பார்த்து வரச் செய்ய வேண்டும். வயல்களில் அறுவடை முடிந்தவுடன் பாக்கி இருக்கும் ஆறு மாத காலத்தில் மேற்படியார்களைக் கொண்டு வாய்க்கால்களில் தண்ணீர் ஓடுவதற்குச் சௌகரியமாகக் கோரை முதலியவைகள் முளைக்கா வண்ணம் வெட்டி வெட்டி, உள் வாய்க்கால், தலைப்பு வாய்க்கால் முதலியவைகளை வெட்டி வரப்புகளை உயர்த்தி, போக்குவரத்துப் பாட்டைகளை வண்டி செல்லுவதற்குத் தக்கவாறு அமைத்துச் செப்பனிட வேண்டும்.

இரண்டாவதாக மேற்படி நியமிக்கப்பட்ட அதிகாரிகள் தாங்களே ஏரு, வண்டிக் கட்டு, மராமத்துச் சாமான்களை வைத்துக் கொண்டு பண்ணையாட்களுக்குக் கொடுத்து நிலத்தைப் பண்படுத்தலாம்.

இதனால் அதிகமாகச் சாகுபடி செய்து மிராசுதாருக்குக் கொடுக்கவேண்டிய நெல், பண்ணையாட்கள் சம்பளம், இதரச் செலவு போக மீதியைத் தாங்கள் ஆதாயமாகக் கொள்வதுடன், மிராசுதார் சொந்த உபயோக நெல் போக மீதியை கண்ட்ரோல் விலைக்குத் தாங்களே எடுத்துக் கொள்ளலாம். இதனால் பதுக்கல் கொள்ளை ஒழியும்.

சா. அழகர்சாமி.

வல்லம்
17—6—48

சீர்திருத்தம் அவசியம்

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

தங்கள் ஜூன் 13ந் தேதி இதழில் வட்ட மேஜையில் "எழுத்துச் சீர்திருத்தம்" என்ற தலைப்பின் நண்பர் கிருஷ்ணசாமி அவர்களால் வரையப்பட்ட கடிதம் கண்டேன். 'லைனோ' டைப்பில் தமிழ் எழுத்துக்களைக் கொண்டு

வரவேண்டியது அவசியம் என்கிறார். ஆனால் நடை முறையில் உபயோகத்திலிருக்கும் எழுத்துக்களை மாற்றுவது விரும்பத் தக்கதல்ல என்கிறார். "கூழுக்கும் ஆசை; மீசைக்கும் ஆசை" என்பது போல இருக்கிறது நண்பர் கருத்து. அழகான எழுத்துக்களை இயந்திர காலத்திற்காகச் சிதைப்பது விரும்பத் தக்கதல்ல என்கிறார். எழுத்துக்களை மாற்றியமைப்பதை, 'லினோ' டைப்பிற்கு ஏற்றவாறு திருத்துவதை அவர் சிதைத்தல் என்கிறார். சீர்திருத்தம் செய்வதற்குப் பெயர் சிதைத்தலா? தவறுள்ள அகராதியால் ஏற்பட்ட விளைவு. எல்லா நாடுகளும் முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கிற இந்த அணுசக்தி காலத்தில் நாம் அவர்களை விட வேகமாக முன் செல்லா விட்டாலும், பின் தொடரவாவது வேண்டாமா? பின் தொடரும் முயற்சிகளில் ஒன்றுதான் தமிழ் எழுத்துக்களை 'லினோ' டைப்பிற்குத் தக்க மாதிரி மாற்றுவது. அதையும் மறந்து மட்டந்தட்ட நினைத்தால் அவர்களது முன்னேற்றப் பாதையில் நாம் முதல் படியைக்கூடக் காண முடியாத பாதாள லோகத்தில் சஞ்சரிக்க வேண்டியதுதான். மொழி வல்லுனர்கள் அடங்கிய தமிழ் எழுத்துச் சீர்திருத்தக் குழுவினர் 'லினோ' டைப்பிற்கு எந்தவித எழுத்துக்கள் சரி என்று முடிவு செய்கிறார்களோ அதையே நாம் ஆதரிக்கலாம். எப்படியேனும் கால மாறுபாட்டிற்குத் தகுந்தாற்போல் விஷயங்களை வெகு விரைவில் வெளியிடுவதற்குத் தகுந்த முறையில் உள்ள சாதனத்திற்கு ஏற்றவாறு தமிழ் எழுத்துக்கள் சீர்திருத்தப் பட வேண்டும்.

பி. இராமலிங்கம்.

கோயமுத்தூர்
30—6—48

வேற்றுமை என்ன?

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

நமது கலாசாலைகளில் தற்போது நடை முறையில் இருந்து கொண்டிருக்கும் ஒரு அர்த்தமற்ற, ஆனால் எவ்வளவோ அளவு மாணாக்கர்களைப் பாதித்துக் கொண்டிருக்கும் ஒரு விஷயத்தைச் சொல்ல வேண்டுமென்றிருக்கிறேன். எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் ஒரு தடவை தவறியவர்கள் தவறிய பாடத்தை மட்டும் படித்து மறு முறை அதிலே மட்டும் பரீட்சை கொடுத்துத் தேறும் பழக்கம், திட்டம் இன்று இருக்கிறது. இதிலே மாணாக்கருக்கு ஓரளவு சௌகரியம். ஏனென்றால் அவன் எல்லாப் பாடங்களையும் எடுத்துப் படிக்க வேண்டியதில்லை. ஆனால் அப்படித் தனிப் பாடங்களை எடுத்துப் படிப்பதிலும் அர்த்தமற்ற வின் கட்டுத் திட்டங்கள் பல இருக்கின்றன. முதலாவதாக, அப்படிப் படித்துப் பரீட்சை கொடுத்து வெற்றி பெற்றால் அவன் தன் பள்ளி இறுதி வகுப்போடு தன் படிப்பை 'முடித்த'தாகக் (Completed) கருதப்படுகிறானே தவிர, தேறியதாகக் (Passed) கருதப்படுவதில்லை. இரண்டாவது அவன் பாஸ் செய்யாத காரணத்தால் காலேஜுக்கு லாயக்கில்லாதவனாகக் கருதப்படுகிறான்.

இப்படி அவன் தனிப் பாடங்களில் தேர்ச்சி பெற்றவுடன் முந்தின பரீட்சைகளில் தேர்ச்சி பெற்ற பாடங்களை மறந்து விடுகிறானா, அல்லது மற்ற எந்த விஷயங்களில் அவனுடைய யோக்கியதாம்சம் குறைந்து விடுகிறது, அவனால் ஏன் காலேஜுக்குப் போக முடியாது என்றும் விஷயங்கள் இதுவரை தெளிவாக்கப் படவில்லை.

ஆர். ராமநாதன்.

எட்டையபுரம்
1—7—48

நடனக் கலை

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

'பரத நாட்டிய'த்தின் மேன்மையை உணராதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். 'ஆஹா! எவ்வளவு அற்புதமான கலை' என்று ராஜாஜி கூடப் பல சமயங்களில் வியந்து கூறியதும் பொருந்தும். மனம் வேதனை அடையும் காலங்களில் சந்தோஷமடையச் செய்வது இக்கலை ஒன்றேதான். ஆனால், எனக்கென்னவோ சில நாட்டியத்தைப் பார்த்தால் சந்தோஷத்திற்குப் பதிலாக மனவேதனை அதிகரிக்கத்தான் செய்கிறது. எதைச் சொல்கிறேன்? மிகவும் மரியாதை காட்டுவதாக நினைத்துக் கொண்டு மனிதனுக்கு முன் மனிதன் ஆடும் 'லஞ்ச' நாட்டியத்தைத்தான்.

அடிமை இந்தியாவில் வாழ்ந்து வந்த நமக்குச் சுதந்திரம் வந்த பின்பும் அவ்வடிமைத்தனம் நம்மில் பெரும்பாலோரை விட்டகலவில்லை. 'இன்ஸ்பெக்ஷன்' போது அக்கவுண்டண்ட் ஜனரலுக்குப் பக்கத்தில், 'மானேஜர்' நான்கு மணி நேரமோ அதற்கும் மேலோ ஒரு கால் மாறி ஒரு காலில் நின்று கொண்டே இருக்கவேண்டும்!

சீப் இஞ்சினியர் ஆபீஸில் டிவிஷனல் இஞ்சினியர் படும்பாடு, அவருக்கு முன் அஸிஸ்டெண்டு இஞ்சினியர் பரபரப்பு. இவர் முன்னிலையில் சூபர்வைஸர்களின் 'நடனம்'-அவர்களுடைய எதிரிலே மேஸ்திரிகளின் 'பரத நாட்டியம்'—இவையெல்லாம் ஒரு இலாக்காவில் நடைபெறும் கூத்து!

சின்ன ஸ்தானங்களை வகிக்கும் உத்தியோகஸ்தர்கள்கூடத் தங்களைவிடச் சற்றுக் குறைவான பதவியிலே வந்தால், "உட்காருங்கள்" என்று ஒரு வார்த்தை சொல்வதில்லை. இதனால் தங்கள் அந்தஸ்து எங்கு குறைந்துவிடுமோ என அஞ்சுகிறார்கள். தம்மை, 'எஜமான்' என்று—அதுவும் நாலுக்கு முன்—சொல்லி விட்டாலோ, ஆனந்தத்திற்கோர் எல்லையில்லாமல் 'உச்சி குளிர்ந்து' விடுகிறது.



இவ்வாறு நாட்டியங்களையும், பணத்தாலும் ஒவ்வொரு லஞ்சப் பேயை அடியோடு ஒழித்து, தம்மைவிடக் கீழ் அந்தஸ்துள்ளவரை அன்புடன் நடத்தி, மேல் பதவியினருடன் மரியாதையாய்ப் பேசி அடிமைத்தனத்தை போக்கி, சுதந்திரத் தாய் நாட்டில் எல்லோரும் தலை நிமிர்ந்து நடப்போமாக.

டி. ஜி. கிருஷ்ணமூர்த்தி ராவ்.

---

* இந்த இதழில் வெளியாகியிருக்கும் வட்ட மேஜைக் கடிதங்களில் மதுரை அம்பி எழுதியிருக்கும் கடிதத்துக்கு ரூ. 25—0—0 பரிசளிக்கப்பட்டது.

No. 6

தந்தையும் தனயனும்

வசுமதி

"உங்களுக்கென்ன, இவ்வளவு பிடிவாதம்? ஒவ்வொரு பிள்ளையைப் போல் அவன் உங்களை எதிர்த்துப் பேசி மதிக்காமலிருக்கிறானா? எவ்வளவோ அடக்கமாய்த்தானிருக்கிறான். அவன் முன்னுக்கு வருவதற்கு நாம் செய்யாமல் யார் செய்வார்கள்? பணம்! பணம்! இதுதான் உங்கள் வாழ்க்கையின் லக்ஷியம். பணத்தை வறுகாய் போட்டுச் சாப்பிடுங்கள்!" என்று ஆத்திரம் பொங்கக் கத்தினாள் காமாக்ஷி அம்மாள்.

"போதும், வாயை மூடு! உன் பிறந்தகத்திலிருந்து மஞ்சக்காணியா கொண்டு வந்தாய்? பிள்ளை 'பிஸினெஸ்' பண்ணப் போகிறானாம் 'பிஸினெஸ்!' காசைச் செலவழித்துப் படிக்க வைத்தால் தகரச் சாமானும், இரும்புச் சாமானும் செய்யப் போகிறானாம். இந்தத் தகரக் கடை வைக்க இவ்வளவு படிப்பு செலவு எல்லாம் எதற்கு? அரிச்சுவடியைக் கண்ணால் கூடப் பார்த்தறியாத நம்ப கீழத்தெரு குப்பண்ணதேவன் கூடத்தான் தகரக் கடை வைத்திருக்கிறான்! எல்லாம் பிள்ளையாண்டானுக்கு நீ கொடுக்கிற செல்லம்தான்!" என்று இன்னும் உரத்த குரலில் கத்தினார் கிருஷ்ணய்யர்.

"நாளுக்கு நாள் உங்களுக்குப் பணத்தாசை அதிகமாய் விட்டது. கடுகத்தனை பிள்ளை, அவனும் நல்ல லாபகரமாய் நடத்த முடியுமென்று எவ்வளவோ எடுத்துச் சொல்லுகிறான். 25 000 ரூபாய் முதல் போட்டால் மாதம் ஐந்நூறு ரூபாய் கட்டுமென்று சொல்லுகிறான். அவன் என்ன அசடா? படிக்காத மூட்டாளா? அவனுக்கு உதவாத பணம் எதற்கு? வயதான காலத்தில் பிள்ளையின் மனதை நோகச் செய்வது என்ன பிழைப்பு?"

"என்ன, சட்டம் பேச வந்துவிட்டாய்? உன் பிள்ளை படித்த மூட்டாளென்று புகழ வந்து விட்டாயோ! இந்தத் தகரக் கடை வைக்க அவன் படிப்பு அதிகப்படி என்று தான் சொல்லுகிறேனே! அதிசயப் பிள்ளையைப் பெற்று விட்டாயோ? என், அவ்வளவு லாபகரமான தொழிலாக இருந்தால் அவன் மாமனார் முதல் போட்டுமே, யார் வேண்டாம் என்கிறார்கள்? தப்புக் கெட்டவன் போகாத ஊருக்கு வழி தேடுகிறான்!"

"நீங்கள் பணத்தைக் கட்டிக்கொண்டு அழுங்கள். அதற்காக அதிகப்படி பேச வேண்டாம். பிள்ளை பிறந்ததிலிருந்து இன்ஜினீயர் உத்தியோகம் செய்து சேர்த்த காசை மூட்டையாகக் கட்டித் தலைக்குத் தலையணையாக வைத்துக்கொண்டு வாழ்க்கையில் படுத்திருக்கிறீர்கள். அவன் மாமனாரிடம் கௌரவத்தை விட்டு யாசகம் கேட்கட்டும்; நன்றாயிருக்கிறது நியாயம்!"

"ஆமாம், ரொம்ப நியாயத்தைக் கண்டு விட்டாய்? என் பிதுரார்ச்சிதச் சொத்தான அரியலூர் கிராமத்தை எங்கப்பா என் படிப்புக்கும் என் தங்கை கல்யாணச் செலவுக்கும் பணமில்லாமல் சங்கய்ய நாயுடுவிடம் அடமானம் வைத்தார். அவர் காலத்தில் மீட்க முடியவில்லை. ஆஸ்தியைக் கடன் சாப்பிட்டு விட்டது. அவர் இறக்கும் பொழுது 'நீ நன்றாகச் சம்பாதிக்கிறாய். எப்படியாவது பணத்தைச் சேர்த்து அரியலூர் கிராமத்தை வாங்கிவிடு. நம்ம பரம்பரை ஆஸ்தி' என்றார். நானும் அப்படியே செய்வதாக வாக்களித்து விட்டேன். உன் பிள்ளை படிப்புக்கு அழுது குடும்பம் நடத்திக் கஷ்டப்பட்டுச் சேர்த்த ரூபாய் இருபதாயிரம்தான் என்னிடம் இப்போது இருக்கிறது. நாயுடு இருபத்தையாயிரம் ரூபாய்க்குச் சல்லி குறையமாட்டேன் என்கிறான். இன்னும் ஐயாயிரத்துக்கு என்ன செய்யலாமென்று இரவு, பகலாக யோசித்து என் மூளை குழம்பிவிட்டது. இந்தச் சமயத்தில் இருபதினாயிரத்தைப் பாழும் கிணற்றில் கொட்ட யோசனை சொல்லுகிறாயே!"

"உங்கப்பா பெண்ணும் பிள்ளையும் பெரிதென்றுதானே பரம்பரை ஆஸ்தியைக் கூட விற்றார்? நீங்கள் கையில் மூட்டை கட்டி வைத்துக்கொண்டே இப்படி அவனை அழ வைப்பது அடுக்குமா? இந்தக் காலத்தில் உத்தியோகம் எங்கே கிடைக்கிறது? சீமைக்குப் போக ஆசைப்படுகிறான். அதற்காவது செலவுக்குக் கொடுக்கிறீர்களா?"

"இந்தா, இனிமேல் அவனைப் பற்றி என்னிடம் பேசினால்......" என்று சொல்லிக் கொண்டே வந்தவர், ரகு வருவதைப் பார்த்து அப்படியே நின்றார்.

"அம்மா, எனக்காக நீ அப்பாவுடன் வாதாடியதை யெல்லாம் கேட்டுக் கொண்

டிருக்கேன். அப்பாவுக்கே என்னிடம் நம்பிக்கையில்லை. நம் ஊரிலே இப்படித்தான். தன்னம்பிக்கை இருந்தாலல்லவா பிறரிடம் நம்பிக்கை வரும்? இவரே என் உழைப்பு, யோக்கியதை ஒன்றையும் நம்பாவிட்டால் மாமனுக்கு என்ன கர்ம சிரத்தை? தவிரவும் அப்பா நல்ல நிலைமையில் இருக்கும் பொழுது மாமனிடம் கைநீட்டி என் கௌரவத்தைக் குலைத்துக் கொள்ள மாட்டேன். நீ வருந்தாதே! எனக்கும் ஒரு காலம் வரும். இன்றே பட்டணம் போய்ப் பிழைக்கிற வழியைப் பார்க்கிறேன்" என்றான் ரகு.

ரகுவின் உற்சாகமற்ற பேச்சைக் கேட்டதும் காமாக்ஷி அம்மாளின் கண்கள் கலங்கின. பதில் பேச ஒன்றும் தோன்றாமல் அப்படியே நின்றாள்.

"போடா, போ! உன் கதாநாயகத் தனத்தைக் கண்டு உன் அம்மா மயங்குவாள். என்னிடம் உன் சாமர்த்தியம் பலிக்காது!" என்று சொல்லிவிட்டு வெளியே போய் விட்டார் கிருஷ்ணய்யர்.

ரகு பிரயாணத்திற்குச் சாமான்களைக் கட்டினான்.

காமாக்ஷி அம்மாள் பிள்ளைக்குக் கொஞ்சம் பக்ஷணம், ஊறுகாய் எல்லாம் கட்டிக் கொடுத்தாள். "மாமா அகத்திலே போய இறங்கு, உடம்பைக் கவனித்துக்கொள். அடிக்கடி கடிதம் எழுது!" என்று பத்துத் தடவைக்குமேல் சொன்னாள். கைச் செலவுக்குத் தன்னிடம் இருந்த ரூபாயைத் திரட்டிக் கொடுத்தாள். வேறு அவளால் என்ன செய்ய முடியும்? இரண்டு மேற் சுத்திக் காளைகள் பூட்டின வண்டியில் ஏறிக் கொண்டு ஸ்டேஷனை அடைந்தான் ரகு.

★

சென்னையை அடைந்ததும் ஒரு டாக்ஸியை வைத்துக் கொண்டு ரகு மாமா வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தான்.

ரகுவின் மாமா உத்தியோகத்திற்கு அடிமை. ஒரு வெள்ளைக்காரக் கம்பெனியில் காலை ஒன்பது மணி முதல் இரவு எட்டு மணி வரையில் உழைத்துவிட்டு மாதம் முந் நூறைம்பது ரூபாய் வாங்கிக்கொண்டு வருவதாக அவருக்குப் பிரார்த்தனை. அதைச் சரியாக நிறைவேற்றிக் கொண்டு வந்தார். மாமா சின்ன வயதில் பிரகாசமாய்த்தானிருந்தார். ஆனால் அதிர்ஷ்டக் கட்டை என்பார்களே, அது அவர் மீது தன் கடைக் கண் பார்வையைச் செலுத்திவிட்டது. அவருடைய ரஸிகத்தன்மை எல்லாம் அவருடைய உத்தியோகத் தொல்லைக்குப் பின்னால் போய் ஒளிந்துகொண்டு விட்டது. ஆனால் எப்பொழுதாவது மருமகனைக் கண்டால் கொஞ்சம் உற்சாகம் பிறக்கும். அன்று எதிர்பாராமல் வந்த மருமகனைக் கண்டதும் அவருக்கு ஆனந்தம் தாங்கவில்லை. ரகு அப்பாவுக்கும் தனக்கும் ஏற்பட்ட மனஸ்தாபத்தை மாமாவிடம் சொல்லி ஆறுதலடைந்தான்.

சில தினங்களுக்குப் பிறகு பிள்ளையிடமிருந்து காமாக்ஷி அம்மாளுக்கு ஒரு கடிதம் வந்தது.



அன்புள்ள அம்மா அவர்களுக்கு,

அநேக நமஸ்காரம். என் ஆவலைப் பூர்த்தி செய்யக் கடவுள் அனுக்கிரகம் செய்து விட்டார். டாக்டர்கள் சாதாரணமாக என்ன ஜுரம் என்ன வியாதி வந்தாலும் 'ஊரெல்லாம் இந்த ஜுரம் இருக்கிறது, ஸார்!' என்று சொல்லுவது வழக்கம். அதுபோல் நம் மனதில் எழும் ஆசை எல்லோருடைய மனதிலும் எழுகிறது. நான் இங்கு வந்த அன்று என் நண்பன் சீதாராமனைச் சந்தித்தேன். அவனும் மேல் நாடு போவதைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தான். என் ஆவலும் அவனுக்குத் தூண்டுகோலாக இருந்தது. முடிவில் நாங்கள் இருவரும் மேல் நாடு செல்வதென்று தீர்மானித்தோம். என் செலவை அவன் ஏற்றுக் கொள்வதென்றும் பின்னால் எனக்குச் சுதந்

திரமாக நாலு காசு வந்தபிறகு அவளை வாங்கிக் கொள்வதென்றும் பேச்சு. இன்னும் மூன்று நாட்களில் கப்பல் புறப்படுகிறது. உன் மாட்டுப் பெண்ணைச் சந்திக்க அவகாசமில்லாததால் விஷயத்தை எழுதி விட்டேன்.

உன் ஆசீர்வாதத்தை நம்பிப் போகிறேன். அப்பாவுக்கு என் நமஸ்காரத்தைத் தெரிவி. என் பிரிவுக்காக வருந்தாதே. அவ்வப்பொழுது கடிதம் எழுதுகிறேன். கூடிய சீக்கிரம் திரும்புகிறேன்.

இப்படிக்கு,

ரகு.

இக் கடிதத்தைக் காமாக்ஷி அம்மாள் கண்களில் நீர் முட்டப் படித்தாள். மகன் இவ்வளவு துணிவுடன் சீமைக்குப் போவானென்று சற்றும் எதிர்பாராத கிருஷ்ணய்யர் அதிர்ச்சி அடைந்தார். ஆனால் இரண்டொரு நாளில் சமாளித்துக் கொண்டு விட்டார். பணத்தை அனுப்பி வைக்க அவர் மனம் இடம் கொடுக்கவில்லை. புத்திர வாத்ஸல்யம் பண ஆசையில் புதைந்து கிடந்தது. மனைவியிடம் விட்டுக் கொடுக்காமல், "எங்கே போகிறான், முட்டாள்! ஊரானெல்லாம் இவனை எப்படித் தாங்குவான்? கையில் காசில்லாவிட்டால் தானே ஓடி வருகிறான்!" என்று இரைந்து கொண்டிருந்தார்.

காமாக்ஷி அம்மாள் அவருடைய வார்த்தையைக் காது கொடுத்துக் கேட்கவில்லை.

இப்படியே இரண்டு வருஷங்கள் ஓடின. ரகுராம் கம்பெனி என்று ஒரு ஸ்தாபனம் திடீரென்று ஆரம்பமாயிற்று. அது இரும்புச் சாமான்கள் செய்யும் தொழிற்சாலை. எப்பொழுது ஸ்தாபிதம் ஆயிற்று, எப்பொழுது முன்னுக்கு வந்தது என்று தெரியாமல் அவ்வளவு குறைந்த காலத்தில் அபிவிருத்தியாகி விட்டது.

ரகுவின் இணையற்ற நிர்வாகத் திறமையாலும் சோமனுடைய பொருள் உதவியாலும் தொழிற்சாலை வளர்பிறைச் சந்திரனாக வளர்ந்தது. காமாக்ஷி அம்மாள் லண்டனிலிருந்து ரகு சௌக்கியமாய் வந்து சேர்ந்ததையும், அவன் தொழிற்சாலை ஏற்படுத்தி வெற்றிகரமாக நடத்துவதையும் பற்றிக் கடித வாயிலாகத் தெரிந்து கொண்டு ஆனந்தப்பட்டாள்.

ரகுவை நேரில் வரச் சொல்லிக் காமாக்ஷி அம்மாள் எத்தனையோ கடிதங்கள் எழுதிப் பார்த்தாள். ரகு அதற்குச் சம்மதிக்கவில்லை. அப்பாவினுடைய கோபம் ஆறின பிறகு வருவதாக அவன் எழுதி விட்டான்.

★

அன்று காலை வேளை. கிருஷ்ணய்யர், "காமாக்ஷி! காமாக்ஷி!" என்று உரக்கக் கூப்பிட்டார். நாற்காலியில் சாய்ந்துகொண்டிருந்த அவர் மார்பில் தினசரிப் பத்திரிகை கிடந்தது. காமாக்ஷி ஓடி வருவதற்குள் அவர் மூர்ச்சையடைந்து விட்டார். பத்திரிகையில் கொட்டை எழுத்தில், "மாருதி பாங்க் மூடப்பட்டது!" என்ற தலைப்பத்தின் கீழ்ப் பத்தி பத்தியாய் பாங்கியின் விஷயம் முழுவதும் வெளி வந்திருந்தது. காமாக்ஷி விஷயத்தை ஊகித்தறிந்து கொண்டாள். இப்படிப் பணம் ஒரே கொள்ளையாகப் போனதற்குக் காமாக்ஷி அதிர்ச்சியும், வருத்தமும் ஒருங்கே அனுபவிக்க வேண்டியது போக, அவள் மனம் ஒரு நிமிஷம் ஆனந்தப்பட்டது. பிறகு தான் அதனால் அவருடைய உடம்புக்கு ஒன்றுமில்லாமல் இருக்க வேண்டுமே என்ற வருத்தம் தோன்றியது. அவருக்குச் சைத்தியோபசாரம் செய்து மயக்கத்தைத் தெளிவிக்க வெகு நேரம் சென்றது.



அய்யர் இந்த அதிர்ச்சியில் படுத்த படுக்கையாகி மூன்று நாட்களாகி விட்டன. அப்பொழுதுதான் ராகுவுக்கு உதவாமல் வஞ்சனை செய்தோமே என்ற பச்சாத்தாபம் தோன்றியது. தம்முடைய அறிவீனத்தால்தான் இவ்வளவு பொருளும் போய்விட்டதென்று நினைத்து வருந்தினார். எத்தனை வருஷத்திற்குப் பிறகு ரூபாய்க்கு காலணாவோ அரையணாவோ வரப் போகிறதோ என்று கலங்கினார்.

மறுநாள் கிருஷ்ணய்யர் வருத்தத்துடன் படுக்கையில் படுத்துக் கொண்டிருக்கும் பொழுது, "அப்பா! அப்பா! என்ன உடம்பு!" என்று பதறிய வண்ணம் ஓடி வந்தான் ராகு. தந்தையும் மகனும் ஒருவரையொருவர் கட்டிக் கொண்டார்கள். 'இந்த ஆனந்தக் காட்சிக்கு இருபதினாயிரம்தான் நஷ்டப்படலாமா? இரண்டு லக்ஷம்கூட இழக்கலாமே!' என்று நினைத்தாள் காமாக்ஷி.

பத்திரிகையில் பாங்கியின் விஷயத்தைப் பார்த்ததும், அப்பாவுக்கு அதனால் ஏற்படும் மன அதிர்ச்சியினால் என்ன நேருமோவென்று பயந்து ஓடி வந்ததாக ராகு அறிவித்தான். அதே சமயம் நங்கைய நாயுடுவும் உள்ளே நுழைந்தார். அவரைக் கண்டதும் அய்யருக்குத் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது. "என்ன ஸார்! பத்திரமெல்லாம் முடிந்துவிட்டது. கடைசியில் உங்கள் பிள்ளை இருபத்து மூவாயிரத்துக்கே முடித்து விட்டாரே! உங்கள் கையொப்பம்தான் பாக்கி, இன்று நாளும் நன்றாயிருக்கிறது!" என்று சொல்லிக் கொண்டே வந்தார் நங்கைய நாயுடு.

கிருஷ்ணய்யருக்கு ஒரே பிரமையாக இருந்தது. ஒன்றும் புரியாமல் ராகுவைப் பார்த்தார். "ஆமாம், அப்பா! உங்கள் லக்ஷியத்தை நிறைவேற்றிய பிறகே உங்களைப் பார்க்க வேண்டுமென்றிருந்தேன். அம்மா எவ்வளவோ எழுதியும் பிடிவாதமாக இருந்துவிட்டேன். போன மாதம் ஒரு மிஷின் நாற்பதினாயிரம் ரூபாய் லாபத்திற்கு விற்றோம். அதில் பாதி என் பங்குக்கு வந்தது. அதோடு நான் ஏற்கெனவே சேர்த்து வைத்த தொகையையும் போட்டு நாயுடுவிடமிருந்து தாத்தாவின் ஆஸ்தியை வாங்க ஏற்பாடு செய்தேன்" என்று ராகு விஷயத்தை விளக்கி வைத்தான்.

கிருஷ்ணய்யருக்கு உடம்பில் இருந்த அசதி, வியாதி எல்லாம் பறந்துவிட்டது. ரப்பர் பந்துபோல் எழும்பிக் குதித்தார். காமாக்ஷி அம்மாள் கர்வம் தோன்ற கிருஷ்ணய்யரை ஒரு பார்வை பார்த்தாள்.

இப்பொழுதெல்லாம் கிருஷ்ணய்யர் தம்முடைய நண்பர்களிடம், "என்ன இருந்தாலும் ஸார், பிள்ளையாண்டான்களை லகான் போட்டுப் பிடித்து வைத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் இஷ்டப்படி விட்டால் மூக்கு வெளுத்துப் போகிறது. என்னுடைய கண்டிப்பில் வளர்ந்ததால்தான் ராகு இவ்வளவு முன்னுக்கு வந்தான். இல்லாவிட்டால் ஏது?" என்று பிரமாதமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்.

மாருதி பாங்கியில் போட்டு வைத்திருந்த பணம் போனதைப் பற்றி அவர் இப்பொழுதெல்லாம் வருந்துவதில்லை. "ரூபாய்க்குக் காலணாவோ, அரையணாவோ வரும்போது வந்துவிட்டுப் போகிறது. அதைப்பற்றி என்ன கவலை!" என்று அதையும் ஒரு பெருமையாகத்தான் சொல்லிக் கொள்கிறார்!

அவசர வேலை!

1947-ம் வருஷம் நவம்பர் மாதம் 15-ம் தேதி லண்டனிலிருந்து வெளியாகும் "டைம்ஸ்" என்னும் பத்திரிகையின் நாலாவது பக்கத்தில் இரண்டாவது பத்தியில் கீழ்க்கண்ட செய்தி வெளியாகி இருந்தது:

"ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் நேற்று மாலை செம்ஸ்போர்டில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுவதாக ஒப்புக்கொண்டிருந்தார். ஆனால், தமக்கு ஒரு அவசரமான வேலை இருப்பதை முன்னிட்டு, மேற்படி பொதுக் கூட்டத்துக்கு வர முடியவில்லையென்றும் அதற்காகத் தாம் மிகவும் வருந்துவதாகவும் ஸர் கிரிப்ஸ் தெரிவித்துவிட்டதால் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது."



அதே தேதியில், அதே பத்திரிகையில், அதே பக்கத்தில் கீழ்க்கண்ட மற்றொரு செய்தியும் வெளியாகியிருந்தது:

"புதிய நிதி மந்திரியாகிய ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் தம்முடைய மனைவியுடன் நேற்று மாலை மெர்க்குரி தியேட்டருக்குச் சென்று குதூகலம் என்ற படத்தைப் பார்த்து மகிழ்ந்தார்."



வீட்டிற்கு விரைந்து
செல்லுகிறார்
ஹமாம் ஸோப்புத் தேய்த்து
குளுமையுடன் ஸ்நானம் செய்ய
HAMAM
ஹமாம் ஸோப்பு
தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்



நியாயந்தான்!

வகுப்பில் இரண்டு மாணவர்கள் ஒழுங்கு முறை தவறினார்கள் என்பதற்காக உபாத்தியாயர் அவர்களுக்கு ஒரு தண்டனை விதித்தார். அதாவது, அந்தப் பையன்கள் இருவரும் தங்கள் பெயரை ஐந்நூறு தடவை எழுதவேண்டும் என்பதுதான் அது.

கால் மணி நேரம் இருவரும் மும்முரமாகத் தங்கள் பெயரை எழுதினார்கள்.

ஒரு பையன் (அழுதுகொண்டே உபாத்தியாயரிடம் வந்து) :—ஸார், எனக்கு மிகவும் கடுமையான தண்டனை விதித்து விட்டீர்கள்!

உபாத்தியாயர் :—அது எப்படி? இருவருக்கும் ஒரே மாதிரி தண்டனைதானே விதித்தேன்?

பையன் :—இல்லை, ஸார்! அவன் பெயர் ராஜா, என் பெயர் அனந்த ராமகிருஷ்ணன்!

★

உண்மையாகவா?

எஜமான் :—நீர் ஏன் நேற்று ஆபீஸுக்கு வரவில்லை?

குமாஸ்தா :—உடம்பு சரியாயில்லை, ஸார்!

எஜமான் :—டாக்டரிடமிருந்து 'சர்டிபிகேட்' வாங்கி வந்திருக்கிறீரா?

குமாஸ்தா :—இல்லை, ஸார்! எனக்கு உண்மையாகவே ஜுரம்!

★

குறி தவறாது!

சார்ஜெண்ட் (புதிதாக ராணுவத்தில் சேர்ந்திருக்கும் இளைஞனைப் பார்த்து) :—நான் எப்படிச் சொல்லித் தருகிறேன் என்பதை நீ கவனிக்கவே இல்லை. இப்பொழுது உன் துப்பாக்கியின் குறி கொஞ்சம் தவறி விட்டது. இல்லாவிட்டால் என் உயிருக்கே ஆபத்து நேர்ந்திருக்கும், தெரியுமா? சரி, இருக்கட்டும். இனி மேல் கவனி.

இளைஞன் :— ஆகட்டும், ஸார்! இப்பொழுது பாருங்கள். என் குறி தவறாது!

சபாஷ்!

ஒரு டாக்டர் ஒரு நோயாளியைப் பார்க்க அவன் வீட்டுக்குப் போனார்.

டாக்டர் :—உங்கள் உடம்புக்கு என்ன?

நோயாளி (கடுகடுப்பான முகத்துடன்):- அதை நீங்கள் அல்லவா என்னைப் பரிசோதித்துத் தெரிந்து கொள்ளவேண்டும்?

டாக்டர் :—ஓஹோ! அப்படியா? தயவு செய்து ஒரு பத்து நிமிஷம் எனக்காகத் தாமதித்தீர்களானால் என் நண்பர் ஒருவர் இருக்கிறார்; அவரை அழைத்து வந்து விடுகிறேன். அவர் உங்களைக் கேள்வி கேட்டுத் தொந்தரவு செய்யாமலே உங்கள் நோயைப் பரிசோதனை செய்து தெரிந்து கொள்வார்; அவர் ஒரு மிருக வைத்தியர்!

★

பிரபல டாக்டர்!

பெரியவர் :—என்னப்பா ராமு! நீ டாக்டர் பரீட்சை பாஸ் செய்துவிட்டுப் 'பிராக்டிஸ்' செய்ய ஆரம்பித்து விட்டதாகக் கேள்விப் பட்டேனே! 'பிராக்டிஸ்' நன்றாக நடக்கிறதா? பெரிய மனிதர்களெல்லாம் உன்னிடம் வருகிறார்களா?

டாக்டர் ராமு :—ஆஹா! பிராக்டிஸ் நன்றாக நடக்கிறது, மாமா! காலஞ்சென்ற பி. கோதண்டராமய்யர், வெங்கோபாலன்,



ப்ரொபஸர் நரஸிம்மன், ஆர். டி. செட்டியார் ஐ. ஸி. எஸ். இவர்களெல்லாம் இருக்கிற வரையிலும் என்னிடம்தான் வைத்தியம் பண்ணிக் கொண்டிருந்தார்கள்



வளரும் தமிழ்

காலஞ்சென்ற ஸ்ரீ கு.ப. ராஜகோபாலன் மொழி பெயர்த்த இரட்டை மனிதன் என்ற நாவல் இப்போது இரண்டாம் பதிப்பாக வெளிவந்திருக்கிறது.

மனிதனுடைய இயற்கைக்கு மீறிய இரசாயன ஆராய்ச்சிகளால் என்னென்ன விபரீதங்கள் ஏற்படும் என்பதை இந் நாவல் விளக்குகிறது. நற் குணமே உருவாக விளங்கும் டாக்டர் ஜெகில், ஒரு விநோதமான மருந்தை உண்டு, அதன் மூலம் தீமையே உருவமான மிஸ்டர் ஹைட் என்னும் அரக்க மனிதனாக மாறிப் பல அட்டூழியங்கள் செய்வதும், கடைசியில் பழைய நிலைமைக்கு வரமுடியாமல் உயிர் துறப்பதும் அதி பயங்கர ரஸம் வாய்ந்த சம்பவங்கள்.

மனிதனிடம் இயற்கையாக அமைந்திருக்கும் நல்ல குணத்தையும் கெட்ட குணத்தையும் ராபர்ட் லூயி ஸ்டீவன்ஸன் ஆராய்ந்து இந்த நூலில் உபயோகப் படுத்தியிருக்கிறார். விலை ரூ. 2—4—0.

அஸ்தமனமான மகாராஷ்டிர ஜீவனின் உதயத்தைப் பற்றிப் பிரசித்தி பெற்ற தேச பக்தரான ஸ்ரீ ரமேச சந்திர தத்தர் எழுதிய பிரசித்தி பெற்ற சரித்திர நவீனம் மகாராஷ்டிர ஜீவன் உதயம். சத்ரபதி சிவாஜியின் வீரம் செறிந்த வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்ட பெருங் கதை. காதல், வீரம், சோகம், ஹாஸ்யம் முதலிய நவ ரஸங்களும் நிறைந்தது. அவற்றில் எந்த ரஸத்துக்கும் பங்கம் நேராத விதத்தில் தமிழாக்கம் அமைந்திருக்கிறது. விலை ரூ. 4.

இந்த இரண்டு புத்தகங்களும் காரைக்குடி நவயுகப் பிரசுராலயம் வெளியிட்டவை.

தாய்மை

விஞ்ஞான விஷயங்களைப் பற்றிச் சிலர் தற்காலத்தில் தமிழில் கட்டுரைகள் எழுதுகிறார்கள். விஞ்ஞான விஷயங்களைத் தமிழிலும் கூற வேண்டும் என்ற ஆர்வத்தில் எழுதுவதால் அந்த ஆர்வத்தைப் பாராட்ட வேண்டியதுதான். ஆனால் அந்தக் கட்டுரைகளைப் படிக்கும் நேயர்களுக்கு ஒன்றுமே புரிவதில்லை. இன்னும் ஒரு முறை படித்துப் பார்ப்போம் என்று முயல்பவர்களுக்கு, அதை எழுதிய ஆசிரியருக்காவது விஷயம் நன்றாகப் புரிந்து எழுதியிருக்கிறாரா என்ற சந்தேகம் ஏற்படுவதுண்டு.


இத்தகைய சந்தேகங்களுக்குச் சற்றும் இடமில்லாதபடி, விஞ்ஞானத்தைப் போலவே முக்கியத்துவம் வாய்ந்த மற்றொரு விஷயத்தைப் பற்றிக் காரைக்குடி புதுமைப் பதிப்பகத்தார் தாய்மை என்ற புத்தகம் வெளியிட்டிருக்கிறார்கள்.

இதன் ஆசிரியை டாக்டர் திரிபுர சுந்தரி எம். பி. பி. எஸ்., பெண்கள் தாயாவதற்கு முன்னும்,—அதாவது கர்ப்பம் தரித்த காலத்திலும்—பிரசவம் ஆன பிறகும் தெரிந்து கொள்ள வேண்டிய அநேக விஷயங்களைத் தெள்ளத் தெளிந்த தமிழில் எழுதியிருக்கிறார்.

தமிழ் நாட்டுப் பெண்களின் மனப்பாங்கு எப்படி வளருகிறது என்பதில் ஆரம்பித்து குழந்தை பராமரிப்பு விஷயங்கள் வரை யாரும் புரிந்து கொள்ளும் வகையில் எழுதியிருக்கிறார். விலை : ரூ. 4.

விசுவரூபம்

இயற்கை நமக்கு எத்தனையோ செல்வங்களை அளிப்பதுபோல் செயற்கையும் அளிக்க முடியும். இயற்கைச் செல்வங்களுக்குக் கடவுள் துணை செய்தால், செயற்கைச் செல்வங்களுக்கு விஞ்ஞானிகள் துணை செய்கிறார்கள். அவர்களுடைய துணை கொண்டு நாம் இயற்கைப் பட்டுக்குப் பதிலாகச் செயற்கைப் பட்டு செய்யலாம்; இயற்கைத் தோலுக்குப் பதிலாகச் செயற்கைத் தோல் செய்யலாம்; இயற்கை ரப்பருக்குப் பதிலாகச் செயற்கை ரப்பர் செய்யலாம்; இயற்கைச் சர்க்கரைக்குப் பதிலாகச் செயற்கைச் சர்க்கரை செய்யலாம். இம்மாதிரி பல செயற்கைச் செல்வங்களைப் பற்றியும், பௌதிக உண்மைகளைப் பற்றியும் ஆசிரியர் ஸ்ரீ ஆர். கே. விசுவநாதன் மேற்படி நூலில் கூறுகிறார். தமிழ் நடையும் தலையைச் சொறியாமலே புரிந்து கொள்ளக் கூடியதாயிருக்கிறது. கனம் அவிநாசிலிங்கம் அவர்களின் முகவுரையுடன் வெளியாகியிருக்கும் இப் புத்தகத்தின் விலை ரூ. 2-8-0. வேண்டுவோர் ஸ்ரீ ஆர். கே. விசுவநாதன் எம். ஏ., பௌதிகப் பேராசிரியர், அண்ணாமலை சர்வ கலாசாலை, அண்ணாமலை நகர் என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.


HINTS FOR HEALTH
Sun's light and heat -
aids to health
இயற்கையாகவே நிறைந்த உடலுக்கு ஆரோக்யத்தைத் தருவதில் நிகரற்ற சூரிய ஒளி, இளமையின் முறுக்குக்கும் சகல வயதினர் தேகத்தின் பொதுநலனுக்கும் இன்றியமையாதது. சருமத்திற்கு மெருகுடன் ஆரோக்யத்தையும் வலிக்கும் தசைக்கு இதத்தையும் அளிக்கிறது. சரும ஆரோக்யத்திற்கு மலபார் லிம்டா சோப் மிகவும் சிறந்தது.
இதன் நுரை சருமத்திற்குள் வெகு தூரம் சென்று அசுத்தங்களைப் போக்கி, சருமத்தை மிருதுவாக்கி, உங்களுக்கு அலாதி மேனி அழகு அளிக்கிறது. உங்களுக்கு ஏற்ற சோப் அதுவே.
FAS-L5
MALABAR
LIMDA
மலபார்
லிம்டா சோப்
வெஜிடபில் சோப் ஒர்க்ஸ்
புரொப்ரைடர்ஸ்:
கள்ளிக்கோட்டை. பம்பாய் 2. சென்னை 1.

புத்திர பாக்கியம்



என். நாராயணன்

சித்திரை மாதம். உச்சி வேளை. சூரிய வெப்பத்தில் தெருவிலுள்ள தார் உருகிக் கொண்டிருந்தது. தலையைப் பிளக்கும் அந்த வேளையில், "மாம்பழம்! 'க்ரேப்' மாம்பழம்!" என்று உரக்கக் கத்திக் கொண்டே ஒவ்வொரு வீட்டின் வாசலிலும் நின்று நின்று நடந்தான் ஒரு மாம்பழ வியாபாரி.

வாசலில் நின்று அவன் கூவியதைக் கேட்டு, ஊஞ்சற் பலகையிலிருந்து எழுந்து வந்தாள் கல்யாணி. அவனுடன் ஒரு விதமாகப் பேரம் பேசி, கடைசியில் டஜன் ஒன்றே முக்கால் ரூபாய் என்று அரை டஜன் பழங்கள் வாங்கிக்கொண்டு சில்லறை எடுத்து வர உள்ளே சென்றாள். பெட்டியில் ஒரு பத்து ரூபாய் நோட்டும் ஒன்றிரண்டு அணாக்களுமே இருந்தன. பழக்காரன் தன்னிடம் பத்து ரூபாய் நோட்டுக்குச் சில்லறை இல்லை என்று சொல்லிவிட்டான். உடனே அவள் தன் கணவனுடைய அறையில் நுழைந்தாள். சுவாமிநாதனின் சட்டைப் பைகளில் கையை விட்டால் கட்டாயம் ஏதாவது சில்லறை கிடைக்கும் என்பது அவளுக்குப் பழக்கத்தால் தெரியும். 'கோட் ஸ்டாண்'டில் அவனுடைய சட்டை ஒன்றும், கோட் ஒன்றும் தொங்கிக் கொண்டிருந்தன. சட்டைப் பைக்குள் கையை விட்டாள். இரண்டு காலணாக்களும் ஒரு பஸ் டிக்கெட்டும்தான் வெளிப்பட்டன. சற்று ஏமாற்றத்துடன் அவள் கோட்டுப் பைகளில் தேடினாள். ஒரு அணா ஒரு பைக்குள்ளிருந்து அவள் கைக்கு வந்தது. வேறு ஒரு காசும் அகப்படவில்லை. கோட்டின் உள் பாக்கெட்டில் ஒரு கவர் கிடந்தது. அசிரத்தையோடு அது என்ன கடிதம் என்று பார்த்தாள். அதில் சுவாமிநாதனின் ஆபீஸ் விலாசம் எழுதியிருந்தது. அவள் முகத்தில் வியப்புக்குறி தோன்றியது.

"அம்மா, சில்லறை கொடுக்கிறீங்களா? எவ்வளவு நேரம் நான் காத்துக்கொண்டு நிக்கறது?" என்று பழக்காரன் வாசலிலிருந்து சத்தம் போட்டான். முதலில் அவனை அனுப்பிவிட்டுப் பிறகு கடிதத்தைப் பார்க்கலாம் என்று எண்ணி வாசலுக்கு விரைந்து வந்தாள்.

"என்னிடம் சில்லறை இல்லை. பத்து ரூபாய் நோட்டுக்குச் சில்லறை கொடு; இல்லையென்றால் சாயங்காலம் வந்து பணத்தை வாங்கிக்கொள்" என்றாள். அவனும் ஒரு நிமிஷம் தயங்கிவிட்டு "சரி, சாயங்காலம் வாரேன்!" 'என்று சொல்லிக் கொண்டே நகர்ந்தான்.

வாசற் கதவைத் தாளிட்டுவிட்டு உள்ளே வந்து உட்கார்ந்து கடிதத்தைப் பிரித்தாள். சுவாமிநாதனுக்கு அவன் தாயார் கிராமத்திலிருந்து எழுதியிருந்தாள். படித்துக் கொண்டே வந்த கல்யாணியின் முகத்தில் ஆச்சரியமும் திகைப்பும் கலவரமும் மாறி மாறித் தோன்றின. அவள் தேகமுழுவதும் மயிர்க்கூச்செறிந்தது.

"நானும் உன்னிடம் இந்த விஷயத்தைப் பற்றி எத்தனையோ பல தடவைகள் சொல்லியிருக்கிறேன். நீ கொஞ்சங்கூட என் வார்த்தையை லட்சியம் செய்யமாட்டேன் என்கிறாய். இந்த கிராமத்திலுள்ள

ஒரு ஜோசியர் கூடச் சொல்லி விட்டார். உனக்கும் கல்யாணிக்கும் புத்திரப் பிராப்திக்கு இடமில்லை என்று. சுவாமி, நீ எங்களுக்கு ஒரே பிள்ளை. உனக்குக் கலியாணமாகி இப்பொழுது கிட்டத்தட்ட எட்டு வருஷங்களாகின்றன. இன்னும் இந்தப் பாழாய்ப் போன கண்கள் ஒரு பேரக் குழந்தையைக் காணக் கொடுத்து வைக்கவில்லை. இப்படியே நாட்களைக் கடத்தி விட்டால் அப்புறம் என்ன ஆவது?



நம் குடும்பம் உன்னோடு அழிந்துபோக வேண்டியதுதானா? நீ வேறொரு பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டால் தான் நமது குடும்பம் நிலைத்து நிற்கும்.

அதற்கு மேல் கல்யாணியால் படிக்க முடியவில்லை. அவள் தலை சுழன்றது. உலகமே சுழல்வது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

• • •

தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ள கிராமமொன்றில் வீடும் வாசலும் உள்ளவர் வேம்பு அய்யர். நீரும் நிலமும் படைத்த பரம்பரையான செல்வாக்குள்ள குடும்பம். சுவாமிநாதன் அவருக்கு ஒரே மகன். அவன் பி. ஏ. பாஸ் செய்து விட்டு ஒரு பெரிய பாங்கியின் சென்னைக் கிளை ஆபீஸில் உதவி காரியதரிசி உத்தியோகம் பார்த்து வந்தான். மயிலாப்பூரில் ஒரு தனி வீட்டில் கல்யாணியும் அவனும் குடித்தனம் நடத்தி வந்தனர்.

கல்யாணிக்கும் அவனுக்கும் மணமாகிச் சுமார் எட்டு வருஷங்களாகியிருந்தது. இருவரும் எல்லாவிதங்களிலும் ஒருவருக்கொருவர் பொருத்தமானவர்கள் தான் என்பதில் சந்தேகமில்லை. கட்டழகி என்று கூறுவார்களே, அந்த அலங்காரச் சொல் கல்யாணிக்குத்தான் பொருந்தும். அவளை முதன் முதலாகப் பார்த்த அன்றே சுவாமிநாதன் அவளிடம் தன் இருதயத்தைப் பறிகொடுத்து விட்டான். அவனுடைய வசீகரமான தோற்றத்தையும், கம்பீரத்தையும் கண்டு கல்யாணி அவனிடம் தன் மனத்தைப் பறிகொடுத்ததும் ஆச்சரியமில்லை.

தெய்வ சோதனையோ, அல்லது வேறு என்ன காரணத்தாலோ சுவாமிநாதனுக்குப் புத்திரப் பேறு உண்டாகவில்லை. கல்யாணிக்குக்கூட சில சமயங்களில் தன்னையுமறியாது தனது குறையைப் பற்றி ஞாபகம் வரும். அவன் மாமியார் கிராமத்திலிருந்து சென்னைக்கு வந்த ஒவ்வொரு சமயத்திலும் அந்த விஷயத்தைப் பற்றிப் பிரஸ்தாபிக்கத் தவறுவதில்லை. "வேண்டாம், வேண்டாம் என்று கதறுகிறவர்களுக்கு வருஷத்திற்கு ஒரு குழந்தை பிறக்கிறதே! நானும், என் கண்மணிக்கு நான் எவ்வளவு தவம் கிடக்கிறேனும், ஒரு குழந்தையைக் காணுமே!" என்று அங்கலாய்ப்பாள்.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் கிராமத்திலிருந்து சுவாமிநாதனின் தாயார் அவனுக்கு ஆரம்பத்தில் கூறப்பட்ட கடிதத்தை எழுதியிருந்தாள்.

• • •

அன்றிரவு சுவாமிநாதன் கல்யாணியைப் பார்த்துத் திடீரென்று, "கல்யாணி, உன்னிடம் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேசவேண்டும்" என்றான்.

"எனக்குத் தெரியும். உங்கள் கலியாண விஷயமாகத்தானே? தாராளமாகப் பண்ணிக் கொள்ளுங்கள். உங்கள் தாயாரின் ஆசையைப் பூர்த்தி செய்ய வேண்டியது உங்கள் கடமை யல்லவா?" என்றாள்.

"கல்யாணி, உனக்கு எப்படித் தெரியும், நான் அந்த விஷயத்தைப் பற்றித்தான் பேசப் போகிறேன் என்பது?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் சுவாமிநாதன்.

"நீங்கள் சொல்லாவிட்டாலும் எனக்குத் தெரியாதா, என்ன? உங்கள் கோட்டுப் பைக்குள்ளிருந்த கடிதம் தெரிவித்து விட்டதே!"

"கல்யாணி, தயவுசெய்து பொறுமையுடன் நான் சொல்லப் போவதைக் கேள். நானும் இதைப்பற்றி வெகு நாட்களாகவே

சிந்தித்துச் சிந்தித்து மூளையைக் குழப்பிக் கொண்டு தவிருக்கிறேன். அம்மாவின் தொந்திரவும் பொறுக்க முடியவில்லை. உனக்கோ புத்திரப் பிராப்தி உண்டாவதாகத் தோன்றவில்லை. வேறு ஒரு...'' என்று சுவாமிநாதன் பேசி முடிப்பதற்குள், ''எதற்காக வீண் சிரமப்படுகிறீர்கள்? எனக்குச் சம்மதந்தான். உங்களிஷ்டம் போல் செய்து கொள்ளுங்கள். குறுக்கே நின்றதாக எனக்கேன் பழிச்சொல்?'' என்றாள் கல்யாணி.

''கோபித்துக் கொண்டு சொல்லுகிறாயா, அல்லது நிஜமாகவே மனப்பூர்வமாகக் கூறுகிறாயா? என்று கேட்டான் சுவாமிநாதன்.

''நிச்சயமாக, சத்தியமாக, மனப்பூர்வமாகத்தான் சொல்கிறேன். உங்கள் ஆசையையும், உங்கள் தாயாரின் ஆசையையும் நான் ஏன் கெடுக்கவேண்டும்?''

''கல்யாணி, நீ மகா உத்தமி. உன் உள்ளம் பரிசுத்தமானது. உன்னை மனைவியாக அடையப் பெற்ற நான் உண்மையில் பாக்கியசாலியே. கல்யாணி, இன்னொன்று. நான் மறுமணம் செய்து கொண்டாலும், உன்னிடம் நான் வைத்துள்ள அன்பு, உன் மீது நான் கொண்டுள்ள பிரேமை ஒரு நாளும் குறையாது.''

கல்யாணி வாயைத் திறக்கவில்லை. பிரமை பிடித்தவள் போல் உட்கார்ந்திருந்தாள்.

* * *

சித்திரை மாதக் கடைசியிலேயே சுவாமிநாதனுக்கும் கௌரிக்கும் திருமணம் நடந்தேறியது. கௌரியின் தந்தை தாலுகா ஆபீஸ் குமாஸ்தா. மாதம் அறுபது ரூபாய் சம்பளம். நான்கு பெண்களும், மூன்று பையன்களுமுள்ள பெரிய குடும்பம். கௌரி தான் மூத்தவள். பார்ப்பதற்கு லட்சணமாயிருப்பாள். ஏழாவது வகுப்பு வரை படித்திருந்தாள். கல்யாணமான மறு வாரமே சுவாமிநாதன் கௌரியைச் சென்னைக்கு அழைத்துக் கொண்டு வந்து விட்டான்.


கௌரியின் குணங்கள் ஒவ்வொன்றும் கல்யாணியின் மனத்தைக் கவர்ந்தன. அவளுடைய அடக்கமும், தெய்வ பக்தியும், சாந்த சுபாவமும் கல்யாணிக்கு வியப்பை அளித்தன. எப்பொழுது பார்த்தாலும், எதற்கெடுத்தாலும், கல்யாணியிடம் வந்து ''அக்கா, அதை எப்படிச் செய்ய வேண்டும்? இதை எப்படிச் செய்ய வேண்டும்?'' என்று கேட்டுக் கொண்டிருப்பாள். கல்யாணி செய்யும் எந்த வேலையையும் தானே செய்ய முன் வருவாள். ''அக்கா, நீங்கள் பேசாமல் இருங்கள். நான் பார்த்துக் கொள்கிறேன்!'' என்று உற்சாகத்துடன் கூறுவாள். அவள் கல்யாணியிடம் எவ்வளவு அந்தரங்க பிரியத்துடன் நடந்து கொண்டாளோ அதை விடப் பன் மடங்கு வாஞ்சையுடன் கல்யாணி அவளுடன் பழகி வந்தாள்.

சுவாமிநாதனின் தாயாருடைய கனவும் நனவாகும் காலம் தோன்றியது. கௌரி கர்ப்பவதியானாள்.

இந்த விஷயத்தைக் கேட்டு சுவாமிநாதனின் தாயார் அடைந்த ஆனந்தம் அதிகமா, அவன் அடைந்த பூரிப்பு அதிகமா, கல்யாணி அடைந்த மகிழ்ச்சி அதிகமா என்று அளவிட முடியாது. வெகு விமரிசையுடன் கிராமத்தில் சீமந்தக் கல்யாணத்தைக் கொண்டாடினாள் சுவாமிநாதனின் தாயார்.

நாள் நெருங்க நெருங்க, மற்றெல்லோரும் குதூகலத்துடனும் ஆர்வத்துடனும் அந்த மகத்தான சம்பவத்தை எதிர்பார்த்திருக்கையில், கௌரி மாத்திரம் ஏதோ பீதி யடைந்தவளாய், அடிக்கடி கல்யாணியிடம், ''அக்கா, எனக்குப் பயமாயிருக்கிறது. நினைத்தாலே நடுக்க மெடுக்கிறதே!'' என்று கூறுவாள். கல்யாணி அவளுக்குத் தைரியம் கூறுவாள்.

ஆஸ்பத்திரியிலிருந்து திடீரென்று செய்தி வந்தது. குழந்தை வெகு சிரமத்துடன் பிறந்தது என்றும், பிறந்து சில வினாடிகளுக்குள் இறந்துவிட்டது என்றும் தெரி



பையன்:—அப்பா, அவர் ஏன் மீசையை இப்படிப் பின்னால் வைத்துக் கொண்டு இருக்கிறார், சொல்லமாட்டாயா?

வித்திருந்தார்கள். மேலும் தாயாருக்கே ரொம்ப அபாயமான நிலைமை என்றும் தெரியவந்தது.

செய்தியைப் படித்த கல்யாணி, அலறிய வண்ணம் மூர்ச்சையாகி விட்டாள்.

* * *

கண் விழித்துப் பார்த்தபொழுது, தான் ஊஞ்சற் பலகையின்மீது படுத்திருப்பதையும் தனது கையில் ஒரு கடிதம் இருந்ததையும் கண்டாள். ஆஸ்பத்திரியிலிருந்து வந்த செய்தித் தானா என்று திடுக்கிட்டுப் பார்த்தாள்.

சுவாமிநாதனுக்கு அவன் தாயார் கிராமத்திலிருந்து எழுதிய கடிதம் என்பதை உணர்ந்தவுடன் அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஒன்றிரண்டு நிமிஷங்களுக்குப் பிறகுதான் அவளுக்கு விஷயம் விளங்கிற்று, தான் கண்டது முழுவதும் கனவுதான் என்பது. அவள் மனத்தில் ஏதோ ஒரு வேதனை தோன்றியது.

"என்ன கல்யாணி, உடம்புக்கு என்ன?" என்று யாரோ கேட்பதுபோல் தோன்றவே திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள். சுவாமிநாதன் தான் நின்று கொண்டிருந்தான்.

"கையில் என்ன கடிதம்? அம்மாவிடமிருந்து வந்திருக்கிறதா? எங்கே?" என்று ஆவலுடன் கையை நீட்டினான் சுவாமிநாதன்.

"புதிய கடிதம் ஒன்றுமில்லை. எத்தனையோ உங்கள் தாயாரிடமிருந்து வந்தது தான்" என்று கூறிய வண்ணம் கடிதத்தை அவனிடம் நீட்டினாள் கல்யாணி.

அதைப் பார்த்த சுவாமிநாதன் சற்றுத் திடுக்கிட்டவனாய், "கல்யாணி, இந்தக் கடிதம் உன் கையில் எப்படிக் கிடைத்தது?" என்று கேட்டான்.

ஒரு நிமிஷத்தில் அவனுக்கு எல்லாம் விளங்கிவிட்டது. அவன் கல்யாணியைப் பார்த்து, "அடடா, இப்பொழுதல்லவா தெரிகிறது, உன் முக வாட்டத்திற்குக் காரணம்? அடி பைத்தியம், இவ்வளவு காலமாக என்னுடன் நெருங்கிப் பழகியும், நீ என் மனதை நன்றாக உணரவில்லை. கல்யாணி, அம்மா சொல்லைக் கேட்டு நான் அசட்டுத்தனமாக நடந்து கொள்வேன் என்றுதானே நீ எண்ணி விட்டாய்! சத்தியமாகச் சொல்கிறேன். உன்னையன்றி நான் வேறு யாரையும் மனத்தால் கூடத் தீண்டமாட்டேன்! மறு மணத்திற்கு நான் ஒரு நாளும் சம்மதிக்க மாட்டேன் என்பதைத் தீர்மானமாக அம்மாவுக்குத் தெரிவித்து விட்டேன்! என்னை நீ நம்புவாயா?" என்றான்.

உணர்ச்சி மிகுதியால் கற்சிலைபோல் அசைவற்று நின்றாள், கல்யாணி.

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

216. அரக்கர் ஊர் அல்லவா இவள் இருந்த ஊர்!

ராவணனைக் கண்டு சீதை அஞ்சவில்லைதான். ஆனால் தன்னைச் சேர்ந்தவர்கள் தன்னைப் பழிப்பார்களே என்று அஞ்சுகிறாள். அந்த அச்சம் அவளை என்ன பாடெல்லாமோ படுத்துகிறது:

என்னைப் பற்றிக் கேவலமாய் எண்ணுவார்கள். எண்ணுகிறதோடு நிற்கிற காரியமா?—வாய்விட்டுப் பேசுவார்கள். அத்தனை வார்த்தைகளையும் காதில் வைத்துக் கொண்டு தானே இருக்கவேண்டும்.

சொற்பிரி யாப்பழி
சுமந்து தூங்குவேன்

நற்பிறப்(பு) உடைமையும்
நாணும் நன்றரோ,

கற்புடை மடந்தையர்
கதையு ளோர்கள்தாம்,

இல்பிரிந்(து) உய்ந்தவர்
யாவர் யானலால்.

[சொற்பிரியாப் பழி சுமந்து: என்னுடைய பழி மற்றவர்கள் மனசில் நிலையாய் நிற்கும். அதோடு வெளிவிட்டுச் சொல்வதாகவும் இருக்கும். அவ்வளவையும் நான் பொறுத்துக்கொண்டு; தூங்குவேன்: சௌகரியமாக வாழ்வேன். சௌகரியமாகத் தூங்கவும் செய்வேன்—இப்படி இருந்தால்; நற்பிறப்பு உடைமையும் நாணும் நன்றரோ: ஜனகன் குலத்தில் பிறந்த குடிப்பிறப்பு, அந்தக் குடிப்பிறப்புக்கான நாணம் இந்த இரண்டும் அழகாய்த்தான் இருக்கின்றன! — ரொம்ப ரொம்பக் கேவலம்!; கற்புடை மடந்தையர் கதையுளோர்கள் தாம்: கற்புள்ள பெண்களை வர்ணித்த கதைகள் எத்தனையோ, அந்தக் கதைகளில் வரும் பெண்களில்; இல்பிரிந்து உய்ந்தவர் யாவர் யானலால்: நாயகனை விட்டுப் பிரிந்து உயிரோடு இருந்தவர்கள் யாராவது உண்டா—என்னைத் தவிர.]

* * *

இதைத் தவிர வேறொரு எண்ணமும் அவள் மனசில் உதிக்கிறது.

அயலான் மனையிலிருந்த பெண்ணை, பேணுதல் என்பது உண்டா என்று என்னைத் தீர்த்து விட்டான் ராமன். இனி வரமாட்டான்.

பிறர்மனை எய்திய
பெண்ணைப் பேணுதல்

திறனல(து) என்றுயிர்க்(கு)
இறைவன் தீர்ந்தனன்:

புறன்அலர் அவன்உறப்,
போது போக்கி,யான்

அறன்அல(து) இயற்றுவேன்,—
என்கொண்(டு) ஆற்றுகேன்.

[திறன் அலது என்று: தன் பதவிக்கு ஒத்த தல்லாத காரியம் என்று; உயிர்க்கு இறைவன் தீர்ந்தனன்: என் உயிருக்குப் பாதுகாப்பாய் உள்ள நாயகன் போய்விட்டான்; புறன் அலர் அவன் உற: நாலா பக்கத்திலிருந்தும் வரும் அவதூறான சொல்லுக்கு அவன் உள்ளாக; அலர்: பழிச்சொல்; போது போக்கியான் அறன் அலது இயற்றுவேன்: காலத்தைக் கவலையில்லாமல் கழித்துக் கொண்டு பாவச் செயலைச் செய்து கொண்டிருப்பவளாகிய நான்; என்கொண்டு ஆற்றுகேன்: எதைக் கொண்டு அந்தப் பழியைத் தீர்ப்பேன்.]

* * *

எப்படியும் ராமன் வருவான். தன் அற்புதமான சக்தியால் அரக்கர்கள் வம்சத்தை நாசம் செய்து என்னை மீட்கப் போகிறான், இது நிச்சயம். ஆனால்!

அற்புதன், அரக்கர்தம்
வருக்கம் ஆசற

விற்பணி கொண்(டு) அருஞ்
சிறையின் மீட்டநாள்,

இல்புகத் தக்கலை
என்னின்,— யானுடைக்

கற்பினை எப்படி(சு)
இழைத்துக் காட்டுகேன்?

[ஆசறு விற்பணி கொண்டு: வேரோடு தொலையும்படி வில்லைப் பிரயோகித்து; அருஞ் சிறையின் மீட்ட நாள்: கடக்க முடியாத சிறையிலிருந்து என்னை மீட்டு வரவே அந்த நாள்: இப் புகுந் தக்கலை என்னின்: என் வீட்டுக்குள் வர யோக்கியதை இல்லை உனக்கு என்று சொல்லத் தானே செய்வான்; யாருடைக் கற்பினை: தான் உறுதியாகப் பாதுகாத்துவரும் கற்பை; எப்படிக் இழைத்துக் காட்டுகேன்: என்ன செயல் கொண்டு நிரூபித்துக் காட்டுவேன்.]

⁂

எப்போது ஒரு பழிக்கு உள்ளானேனோ அப்போதே உயிர் துறக்க வேண்டாமா நான்?

எப்பொழு(து) இப்பெரும்
பழியின் எய்தினேன்
அப்பொழு தேஉயிர்
துறக்கும் ஆணையேன்,
ஒப்பரும் பெருமறு
உலகம் ஓதயான்
துப்பழிந்(து) உய்வது
துறக்கம் துன்னவோ.

[உயிர் துறக்கும் ஆணையேன்: உயிரை விட்டுவிட வேண்டும் என்று சாஸ்திரம் சொல்லுகிற நல்லவள்; ஒப்பு அரும் பெருமறு உலகம் ஓத: யாருக்கு மில்லாத பெரும் பழியை உலகத்தார் சொல்லிக் கொண்டிருக்க; யான் துப்பு அழிந்து உய்வது: நான் பெருமையை இழந்து வாழ்ந்து கொண்டிருப்பது; துறக்கம் துன்னவோ: சுவர்க்கத்தை அடைவதற்காகத் தானோ—அழகு! அழகு!]

⁂

உயர்ந்த பெண்களையும் அவர்களது உயர்ந்த லக்ஷியங்களையும் பார்த்து அனுபவித்தவள் சீதை. கஷ்டம் வந்த காலத்தில் கவரி மானானது உயிரை விட்டுவிடுமே யொழிய வாழாது. அந்த போல அவமானம் வந்த காலத்து, மானமுள்ள பெண்கள் உயிரை விட்டு விடுவார்கள். அவர்களோடு ஒத்த பக்தி சிரத்தையோடு நடந்து கொள்ளும் பெண்களோடு உறவாடியிருக்கிறாள் சீதை. அவர்கள் எல்லாரும் சீதையின் மனக் கண்முன் வருகிறார்கள்.

வருந்தல்இல் மானமா
அனைய மாட்சியர்,
பெருந்தவ மடந்தையர்
முன்பு பேதையேன்
'கருந்தனி முகிலினைப்
பிரிந்து கள்வர்ஊர்
இருந்தவள் இவள்' என
ஏச நிற்பெனோ?

[வருந்தலில் மானமா அனைய மாட்சியர்: வருந்துதலுக் குள்ளாகாமல் உயிரை விட்டுவிடத் தயாராயிருக்கும் கவரிமான் போன்ற பெண்கள்; பெருந்தவ மடந்தையர் முன்பு: அரிய புனித வாழ்க்கை நடத்தும் பெண்கள் முன்னிலையில்; பேதையேன்: அறிவில்லாதவளான என்னைச் சுட்டிக் காட்டி; கருந் தனி முகிலினைப் பிரிந்து: நீல மேகம் போன்ற உத்தம புருஷனை விட்டுப் பிரிந்து; கள்வர் ஊர் இருந்தவள் இவள் என: ஏமாற்றும் தொழிலையே பயின்று வரும் அரக்கர் ஊரில் சிறையிருந்தவள் இவள் என்று; ஏச நிற்பேனோ: பிறர் ஏச உயிரோடு இருக்கவா நான்!]

பக்கத்தில் உள்ளவர்கள் புகழ்ந்தால் உலகம் புகழ்வது என்று தோன்றும்; அவர்கள் இகழ்ந்தாலோ உலகம் முழுவதுமே சேர்ந்து இகழ்வதாகத் தோன்றும். ஆகவே ஒருவருக்குப், பக்கத்திலுள்ளவர்கள் தான் உலகம். சீதையின் மனம் அந்த முறையில் எண்ணி எண்ணி, மிகவும் புண்பட்டு உழல்கிறது.

குற்றம் யார் மீது?

இரண்டு கார்கள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டன. அவற்றில் ஒன்றை ஓட்டிக்கொண்டு வந்த ஒரு பெண்மணி, வண்டியை விட்டுக் கீழே இறங்கி, இன்னொரு வண்டியை ஓட்டி வந்தவரிடம் சென்று "மன்னிக்க வேண்டும். என்னுடைய தப்பினால்தான் இந்த விபத்து சேர்ந்தது" என்றாள்.

"இல்லை, இல்லை. நீங்கள்தான் என்னை மன்னிக்கவேண்டும். என்னுடைய தப்பினால்தான் இந்த விபத்து சேர்ந்தது."

"அது எப்படி?"

"நீங்கள் காரை எடுத்துக்கொண்டு வெளியே கிளம்பியதை இன்று காலையில் நான் பார்த்தேன். அப்படியிருந்தும் நான் மோட்டார் ஓட்டிக் கொண்டு வெளியே கிளம்பியது என்னுடைய தப்பு அல்லவா?"

புதிய சோதனை!

"ஆசி"

நடந்த வாரம் சனிக்கிழமை என் வீட்டில் நடந்த சம்பவத்தை உங்களிடம் சொல்லித்தானாக வேண்டும். அன்று பிற்பகல் நான்கு மணிக்கு என் மனைவி வேலைக்காரி சகிதம் கடைத்தெருவுக்குப் புறப்பட்டுப் போனாள்.

வீட்டில் நானும், இரண்டு வயதுள்ள என் மூத்த பெண்ணும், பத்து மாதம் பூர்த்தியடைந்த இரண்டாவது பெண்ணும் இருந்தோம். இரண்டாவது குழந்தையைத் தொட்டிலில் போட்டு ஆட்டிவிட்டு, முதற் குழந்தையின் கையில் இரண்டு வாழைப் பழங்களை உரியாமல் கொடுத்துவிட்டு, சாய்மான நாற்காலியில் சாய்ந்து ஒரு புத்தகத்தை எடுத்து விரித்தேன். பழங்களை உரியாமல் கொடுத்ததன் நோக்கம் என்னவென்றால், அதை உரிப்பதில் குழந்தையின் மனம் ஈடுபட்டு அவ்வேலையில் இரண்டு நிமிஷத்தைச் செலவிடும்; பிறகு பழத்தைச் சாப்பிட மூன்று நிமிஷம்—ஆக இரண்டு பழங்களையும் சாப்பிடப் பத்து நிமிஷங்களாகும். இந்தப் பத்து நிமிஷத்தில் ஐந்தாறு பக்கங்களை வாசித்து விடலாம் என்ற நம்பிக்கைதான். இந்தப் பத்து நிமிஷங்களில் தொட்டிலில் உள்ள குழந்தையால் தொந்தரவு நேராதபடி ஒரு ஒழுங்கும் செய்து கொண்டேன். தொட்டில் கம்புடன் ஏழு அடி நீளமுள்ள கயிற்றைப் பிணைத்து, அதன் மறு நுனியை என் இடக் கையில் பிடித்துக் கொண்டு வலக்கையில் புத்தகத்தைப் பற்றிக்கொண்டு நான் நாற்காலியில் அமர்ந்தேன். தொட்டிலில் உள்ள குழந்தை தூங்கு மட்டும் தொட்டிலை ஆட்டிக்கொண்டே இருக்க வேண்டும்; இல்லாவிடில், எழுந்து உட்காரும். அத்தோடு நில்லாது; தரையில் தடாலென்று குதிக்கும். இடக்கை தொட்டிலை ஆட்டும்போது வலக்கையிலுள்ள புத்தகத்தின் மேல் பார்வையைச் செலுத்தி அதிலுள்ள விஷயத்தைக் கிரகித்துக் கொள்வதில் போதிய பயிற்சி எனக்குண்டு.

புத்தகத்தை விரித்தேனோ இல்லையோ வாழைப்பழப் பெண் அழுது கொண்டு என்னிடம் வந்தாள். அவளுடைய அழுகையின் கருத்துரை 'தோலை உரித்துக் கொடு' என்பதுதான். தொட்டிலைத் தானாக ஆடவிட்டு, தோலை உரித்துக் கொடுத்துவிட்டு, "இரண்டு நிமிஷம் காலி!" என்று முணுமுணுத்துக் கொண்டு புத்தகத்தைக் கையிலெடுத்தேன். இதற்குள் தொட்டிலில் போட்டிருந்த குழந்தை எழுந்து உட்கார்ந்து விட்டது.

குழந்தைகளின் அலறலை நிறுத்த நீங்கள் கையாளும் தந்திரங்கள் என்னவோ, எனக்குத் தெரியாது. நான் கையாளும் பல உபாயங்களில் கடைசி உபாயம் "ஆடுவோமே—பள்ளு—பாடுவோமே!" என்ற பாட்டைப் பாடுவதுதான்! கிராமபோன் பிளேட்டிலுள்ள மூன்று கலிகளுடன் இன்னும் இரண்டு கலிகளையும் சேர்த்து மூச்சு விடாமல் பாடி முடித்து, அழுகை நின்று விட்டதா என்று பார்த்துக்கொண்டு, நிற்காவிடில் அந்த ஐந்து சரணங்களையும் மறுபடி திருப்புவேன். இந்தச் சந்தர்ப்பத்தில் கடைசி உபாயத்தை முதல் உபாயமாகப் பிரயோகித்தேன். சுதந்திரப் பாட்டு வரிசைக் கிரமம் தப்பி வந்ததை அவள் கண்டு கொண்டாள். ஆகவே, வழக்கமாய் ஆறு சரணங்களுடன் நின்று விடும் தன் அலறலைப் பத்து சரணங்களுக்கு நீட்டி விட்டாள்.


கதவை யாரோ தட்டினார்கள். என் மனைவி வந்து விட்டாளாக்கும் என்று நினைத்து ஓடிப் போய்க் கதவைத் திறந்தேன். என்னுடைய பக்கத்து வீட்டுக்காரர் ஸ்ரீமான் நமசிவாயம் அங்கே நின்று கொண்டு, "என்ன ஸார் தேள், ஏன் கொட்டி விட்டதா? என்னமோ கூச்சல் போட்டீர்களே!" என்றார்.

நான் அவரிடம் விஷயத்தைச் சொன்னேன்.

"ஓ, ஓ என்று பலமாய்ச் சத்தம் கேட்டதே?" என்றார் அவர்.

"'பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம்...ஓம்' என்ற அடியை நான் பாடிக் கொண்டிருந்தது அப்படிக் கேட்டிருக்கும்" என்றேன் நான்.

"தொட்டில் சிசுவாயிருக்கும்போதே, சங்கீதத்தைக் கொலைபண்ணுகிற வித்தையை நாம் அப்பியசித்துக் காட்டினால், குழந்தைகள் அப்படியே நம்மைக் 'காப்பி' யடித்து விடும், ஸார்! குழந்தைகளுக்கு முன் எதையும் ஜாக்கிரதையாய்ச் செய்யணும்" என்று உளறி விட்டு மனுஷன் ஒழிந்தார்.



எனக்கு வந்த வயிற்றெரிச்சலிலே கதவைப் 'படார்' என்று சாத்தினேன். "பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம்... ஓம்" என்று பலமாய்ப் பாடினேன். சங்கீதம் கொலை பண்ணப்பட்டால் எனக்கென்ன ஸார்?

ஸ்ரீமான் நமசிவாய 'சகாப்த'த்தில் பேச்சு மூச்சற்றிருந்த என் குழந்தை, என்னோடு சேர்ந்து பாட ஆரம்பித்து, இன்னும் இரண்டு சரணங்களைப் பாட வைத்த பிறகு தான் தொட்டிலில் தன்னைக் கிடத்த அனுமதி கொடுத்தது. சரி, இனி மேல் ஒரு மூச்சு வாசிக்கலாம் என்று நினைத்து உட்கார்ந்ததும், அவன் "இரண்டு குழந்தைகளை என்னிடம் விட்டு விட்டுப் போனானே" என்ற ஞாபகம் வந்தது. வாழைப்பழக் குழந்தையை வீடெல்லாம் தேடியும் காணவில்லை. திறந்திருந்த பெட்டிகள், மூடியில்லாத பெட்டிகள், அழுக்குக் கூடை, தண்ணீரில்லா அண்டா உள்படப் பூரண பரிசோதனை செய்தும் துப்புத் துலங்க வில்லை.

மறுபடியும் கதவை யாரோ தட்டினார்கள். ஓடிப்போய்க் கதவைத் திறந்தால் மறுபடியும் ஸ்ரீமான் நமசிவாயம் தான்! அவர் தம்முடைய கையில், காணாமற் போன என் குழந்தையைப் பிடித்துக் கொண்டிருந்தார். சங்கீதக் கொலையைப் பற்றி முன்பு அவர் என்னிடம் பேசிக் கொண்டிருந்தபோது, அந்தக் குழந்தை எப்படியோ திறந்த வாசல் வழியே வெளியேறி யிருக்க வேண்டும். "ஸார், குழந்தையையும் வெளியே விட்டு கதவையும் தாழ்ப்பாள் போட்டு விட்டீர்களே! குழந்தை வேணுமென்று பலர் செய்யாத தவமெல்லாம் செய்கிறார்கள். நீங்கள் இரண்டு குழந்தைகள் அதிகம் என்று நினைக்கிறீர்கள் போலிருக்கிறது" என்றார்.

'தாங்ஸ்' என்று சொல்லி விட்டு வேறே ஒரு வார்த்தை கூடப் பேசாமல் நான் குழந்தையுடன் உள்ளே வந்து விட்டேன்.

சிக்கு முக்காடும் சந்தர்ப்பத்தில் அகப்பட்டவர்களை 'இருதலைக் கொள்ளி எறும்புபோல்' என்று கூறுகிறோம். அழுகின்ற இரண்டு குழந்தைகளிடமும் தன்னந் தனியே அகப்பட்ட தகப்பனைப் பார்க்கிலும், இருதலைக் கொள்ளி எறும்பின் நிலைமை ஒரு படிமேல் என்று நான் திட்டமாய்ச் சொல்லக்கூடும்.

வலக் கையில் மூத்த குழந்தையையும் இடக் கையில் இளையவளையும் வைத்துக் கொண்டு நான் நர்த்தன மாடும்போது, பதம் பாட ஆளில்லாத குறைதான்! இருந்திருந்தால் உயர்தரப் பரத நாட்டியக் கச்சேரியாக அமைந்திருக்கும். 'ஆனந்த சுதந்திர'ப் பாட்டைப் பாடவோ, குழந்தைகளை அதட்டவோ எனக்குப் பலமில்லை. ஒரு பிள்ளையின் அழுகைக்கு மேலாகத்தான் கத்தலாம். இரண்டும் நாலரைக் கட்டைச் சுருதியில் ஏககாலத்தில் கூச்சலிட்டால் நான் என்ன செய்ய முடியும்? மூத்த குழந்தையை விழாதபடி தடுக்க நான் செய்த முயற்சியின் பலனாக நானே தடுமாறித் தொட்டிலில் விழுந்தேன். தொட்டில் கயிறு அறுந்தது. நானும் விழுந்தேன். இரண்டு குழந்தைகளும் தங்கள் தலைகளைத் தடாரென்று தரையில் மோதிக் கொண்டன. பிறகு கேட்பானேன்? ஒரு மோட்டார் லாரியின் இரண்டு டயர்கள் ஏககாலத்தில் வெடிக்கும் போது உண்டாகும் சத்தம், கூட்டம் முடியும்போது நூறு காலிகள் வாயால் சீழ்க்கை அடிக்கும் போது உண்டாகும் அமளி — சினி டாக்கிகளிலே படம் அறுந்து போனால் தரை மகா ஜனங்கள் செய்யும் ஆரவாரம் — இம் மூன்றையும் இரட்டி ஒலிபெருக்கி வாயிலாக வெளியிட்டுப் பாருங்கள்! அதுதான் என் வீட்டில் உண்டான கூச்சலுக்கு உவமையாகும்.

மறுபடியும் யாரோ கதவைத் தட்டினார்கள்; பலமாய்த் தட்டினார்கள்; தட்டிக் கொண்டேயிருந்தார்கள். யாரு திறக்கிறவன்? தரையில் உட்கார்ந்தபடியே என் பிள்ளைகளுடைய தொண்டை பலத்தின் ரகசியம் எதுவென்று யோசித்துக்கொண்டிருந்தபோது, மறுபடியும் கதவு கிடுகிடுத்தது. "யாரது?" என்று அதட்டினேன். என்னுடைய அதட்டல் குழந்தைகளின் கூச்சலை ஒரு கணநேரம் நிறுத்தியது.

"ஸார்!"

"யாரது, கதவை உடைக்கிறது?"

"பச்சைக் குழந்தைகளை இப்படி அடியாதேயுங்கள்! அதுவும் தாயில்லாத சமயத்திலே அடித்தால் அதுகள் ஏங்கி வீங்கிப் போகும்."

எப்படியிருக்கிறது சமாசாரம்! இதுவும் ஸ்ரீமான் நமசிவாயம்தான். எரிகிற தீயிலே எண்ணெயை வார்க்கும் வித்தையில் ரொம்பக் கை தேர்ந்தவர் போலும்! எனக்கு வந்த கோபத்திலே 'நான்சென்ஸ்' என்று கத்தினேன்.

மணி ஐந்து. புத்தகத்தில் ஒரு பக்கத்தைப் படித்து முடித்தேன். குழந்தைகளின் அழுகை ஓயவில்லை. திடீரென்று எனக்கு ஒரு ஞானோதயம் உண்டாயிற்று. ஸ்ரீமான் நமசிவாயம் கதவைத் தட்டின மூன்று சந்தர்ப்பங்களிலும் என்னுடைய பிள்ளைகள் தங்கள் அழுகையை உடனே சட்டென்று நிறுத்திக் கொண்டன என்பது தெரிய வந்தது. உடனே கதவைத் திறந்து வெளியே சென்று "நமசிவாயம்!" என்று கூப்பிட்டேன்.

அவரும் வெளியே வந்து "என்ன ஸார்?" என்றார்.

"ஒரு உதவி செய்ய முடியுமா, ஸார்? நான் கதவைச் சாத்திக் கொண்டு உள்ளே இருக்கிறேன். நீங்கள் வெளியே நின்று கதவைப் பலமாய்த் தட்டுங்கள். இரண்டு நிமிஷத்திற்கு ஒரு முறை தட்டிக் கொண்டேயிருந்தால் பெரிய உபகாரமாயிருக்கும்" என்றேன்.

அவர் ஒருமாதிரி என்னைப் பார்த்து விழித்தார். நான் சொன்னதின் அர்த்தம் அவருக்கு விளங்கவில்லை போலும்! உள்ளே போய்விட்டார். அவருடைய வீட்டுக் கதவு 'படார்' என்று சாத்தப்பட்டதின் மூலம் ஆசாமி கோபித்துக் கொண்டார் என்று அறிந்து கொண்டேன்.

இவ்வளவு நேரம் அழுகையை நிறுத்தியிருந்த இரண்டு குழந்தைகளும் மறுபடியும் ஆரம்பித்தன. 'இன்னொரு தந்திரம் செய்வோம்' என்று தீர்மானித்து அப்பளக் குழவியைக் கையில் எடுத்துக்கொண்டு உட்கார்ந்தேன். அதைப் பலமாய்க் கதவின்மேல் எறிந்து "யாரது?" என்று அதட்டினேன். என்ன ஆச்சரியம்! குழந்தைகள் சட்டென்று அழுகையை நிறுத்திக் கதவைப் பார்த்தன. நாலு ஐந்து விநாடிகளுக்கு நிசப்தம் நீடித்தது. ஸ்ரீமான் நமசிவாயத்தின் பதில் வரவில்லையென்று கண்டதும் குழந்தைகள் மறுபடியும் வீறிட்டலறின. அப்பளக் குழவியை மறுபடியும் எடுத்துக் கதவின் மேல் வீசி "யாரது?" என்று கத்தினேன். மறுபடியும் நிசப்தம். 'கண்டேன், கண்டேன், கண்டு கொண்டேன்' என்ற பெருமிதத்தில் துள்ளியெழுந்து, வீட்டிலுள்ள ரூலர்கள் இரண்டு, பெரிய புத்தகங்கள் நாலு, தயிர் கடையும் மத்து ஒன்று, மூன்று பழைய தகர டப்பாக்கள் இவற்றைத் திரட்டிக் கொண்டு வந்து சாய்மான நாற்காலியில் உட்கார்ந்து கொண்டேன். ரூலர் நம்பர் ஒன்று கதவைத் தாக்கவும், "யார்?" என்ற அதட்டல் என்னிடமிருந்து கிளம்பியது. பிள்ளைகள் இரண்டும் கூர்மையாக என்னையும் கதவையும் பார்ப்பதில் தங்கள்



"அதோ பார், அவனுடைய முகத்தில் எவ்வளவு கர்வம்! தானே ராஜ பக்ஷி என்ற எண்ணம் போலிருக்கிறது!"

அழுகையைச் சில விநாடி நேரம் மறந்தன. மறுபடியும் அழுவதற்குத் தங்கள் வாய்களை ஆயத்தப் படுத்துகின்றன என்று கண்டதும், ரூலர் நம்பர் இரண்டு பறந்தது. "யாரது?" என்று ஒத்து வாசிப்பு. பிறகு தமிழகராதி, ஆங்கில அகராதி, ஷேக்ஸ்பியர் நாடகங்கள், சிலப்பதிகாரம் (மூலமும் உரையும்), மற்று, தகரடப்பா நெம்பர் ஒன்று, இரண்டு, மூன்று இப்படி மாறி பாணங்கள் தொடுக்கப்படவே, அழுவதற்கு நேரம் இல்லாமல் குழந்தைகள் தவித்தன.

ஜன்னல் வழியே யாரோ உள்ளே எட்டிப் பார்த்தார்கள். அது யார் என்று எட்டிப் பார்க்கவும் மனமில்லாதபடி என்னுடைய புதுப் பரிசோதனையில் ஈடுபட்டுவிட்டேன். சோதனைக் கருவிகளைப் பொறுக்குகையில் தான், பார்த்தவர் ஸ்ரீமான் நமசிவாயம் என்று தெரியவந்தது. எனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்று நினைத்தாரோ என்னமோ? நினைத்தால்தான் என்ன? புதிதாகக் கருவிகளைக் கண்டு பிடித்த அநேகரை, பைத்தியம் என்றுதானே உலகம் முதலில் பரிகாசம் செய்தது. மறுபடியும் என் சோதனையை மீண்டும் நடத்த வாரம்பித்தேன். அப்பளக் குழவி குறிதவறிக் கதவைத் தாக்காமல் ஜன்னலுக்கு நேராகப் பாய்ந்தது. மனுஷன் அப்படியே ஓடிப் போய்விட்டார். மற்று ஐந்தாம் முறையாகக் கதவைத் தாக்கினதும் 'யாரது' என்று அதட்டினேனோ இல்லையோ, 'நான்' தான்!" என்று ஒரு மெல்லிய குரல் பதிலளித்தது. மணியும் 'டாண்' என்று ஐந்தரை அடித்தது. என் மனைவி திரும்பி விட்டாள். உள்ளே வந்ததும் அறையைச் சுற்று முற்றும் பார்த்தாள்.

"இது என்ன உங்கள் வேலையா? நான் சாமான்களை அந்த அந்த இடத்திலே வைக்கிறது, நீங்கள் இப்படி வீடெல்லாம் இறைத்துப் போடுகிறது! பேசாமல் உட்கார்ந்து வாசித்துக் கொண்டிருக்கிறது தானே? குழந்தைகள் அது பாட்டுக்குத் தூங்குதுகள்" என்றாள்.

"தூங்குதுகளா?" என்று ஆச்சரியத்துடன் எட்டிப் பார்த்தேன்- தொட்டிலில் மாடம் டார்லிங்கும், தரையில் மூத்தவனும் அயர்ந்த நித்திரையில் ஆழ்ந்திருந்தனர்.

தென்னமெரிக்காவில் தென்னிந்தியப் பிரமுகர்



சென்னை மேல் சபை அங்கத்தினரும் இந்திய ரோடரீ சங்கத்தின் பிரபல நிர்வாகிகளில் ஒருவருமாகிய ஸ்ரீ ஜே. எல். பி. ரோச் விக்டோரியா, சென்ற மே மாதம் ரியோ டி ஜனீரோவில் நடந்த மேற்படி சர்வதேச ரோடரீ சங்கக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

படத்தில் ஸ்ரீ ரோச் விக்டோரியா பற்பல தேசீயக் கொடிகளிடையே இந்திய தேசீயக் கொடியை கம்பீரமாக உயர்த்திப் பிடித்திருப்பதைக் காணலாம்.



GSR. 50-50-40 TM



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119. Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

கல்கி



KALKI ஜூலை 18 ,1948 4 அணா

Regd. No. M. 4392



கல்கத்தாவிற்கு வினியோகஸ்தர்: ஸ்ரீ S. N. ராய், 81-நேதாஜி ரோடு
பம்பாய் ஆபீஸ்: 112, ஒல்டு மோடி ஸ்ட்ரீட், போர்ட்